



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGHAM'S TEXTILES

**WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES**
**SPECIALIST IN INDIAN WEDDING SAREES & OTHER ITEMS**



உங்களுக்குத்
தேவையான
பட்டுப்புடவைகள்,
சல்வார் கமிஸ், சராரா
சோளிகள், ரெடிமேட்
ஆடைகள் மற்றும்
இந்தியாவில் இருந்து
இறக்குமதி
செய்யப்பட்ட புதிய
டிசைன்களில்
*Lion Brand*
(சிங்கம் மார்க்)
சாரங்களுக்கும் நாட
வேண்டிய ஒரே இடம்

# சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்ஸ்

**NO. 241, MAIN STREET, COLOMBO - 11, SRI LANKA.**

**TEL : 324153, 440463**

**FAX : 599602**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி சிவநாதன் கிஷோர் கைது செய்யப்பட்டது தொடர்பாக இதுவரை காரணம் எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை. கடந்த 26.4.99 மாலை 6.30 மணியளவில் இராணுவப் புலனாய்வுத் துறையினரால் அவரது இல்லத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார். பின் 29.4.99 மாலை 4.00 மணியளவில் மருத்துவ பரிசோதனையின் பின் பொலிஸ் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்தனர். அவர்களுடைய விசாரணையின் பின் விடுதலை செய்யப்படுவார் என்றே உறவுகளும் மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் 30.4.1999 இவரை கொழும்பிலிருந்து வந்த T.I.D. அதிகாரிகள் மேலதிக விசாரணைக்காக கொண்டு சென்றுள்ளனர். இவருடைய கைதினை மக்கள் அதிர்ச்சி கொண்டே பார்த்தனர். காரணம் வவுனியாவில் யாராவது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டால் அவரை விடுவிப்பது தொடர்பாக சிவநாதன் கிஷோருடைய உதவியே நாடப்படுவது வழக்கம். அவரும் உதவுவதற்கு எக்காலத்திலும் பின் நிற்பதில்லை.

அமைப்புக்கள் சார்ந்தவராக இருந்தாலும் அல்லது மக்களாக இருந்தாலும் எந்நேரத்திலும் துணிந்து உதவுவது சிலவேளை பாதுகாப்புத் தரப்பில் சந்தேகத்தை உண்டு பண்ணியதோ தெரியவில்லை. ஆனால் பாதுகாப்பு தரப்பாருக்கும் கிஷோர் அவர்களால் காரியமாக வேண்டியிருக்கின்றது. புலிகளது சடலங்களையோ... படையினரது சடலங்களையோ எத்தரப்பாகிலும் அவரவரிடம் கைப்பற்றப்பட்ட சடலங்களை ஒப்படைக்க இலங்கை செஞ்சிலுவைச் சங்க த்தினூடாக கிஷோர் பெரும் உதவி செய்ததுண்டு என்பதை வெளியுலகம் பல செய்திகளூடாக அறியும்.

4.5.99 கொழும்பில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க (I.C.R.C.) அதிகாரிகள் கொழும்பில் இவரை பார்வையிட்டுள்ளனர். அதிகாரிகள் பார்வையிட்ட பின் தெரிவித்த கருத்தாவது இவர் நேர்மையானவர். சந்தேகத்தின் பேரில் கைதியாகியது தமக்கும் அதிர்ச்சியே. இவர் வெகுவிரைவில் விடுதலையாக வேண்டும் என்றே தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கைதாகியிருக்கும் போது மனைவிக்கு பார்ப்பதற்கு அனுமதி கிடைத்து இவரைச் சென்று பார்த்து வந்துள்ளார். பின் இவர் செய்திகளில் கணவர் கைதாகியது தொடர்பாக கவலையுடன் கருத்துத் தெரிவிக்கையில் தனது நிலை எவருக்கும் வரக்கூடாதென்பதைக் கூறியுள்ளார். இவரின் வீட்டை, இவருடைய கைதினை அடுத்து பெருமளவு மக்கள் சூழ்ந்து விசாரித்துச் சென்றுள்ளார். மக்களால் கவலை கொள்ள மட்டுமே முடியும்.


தொல்லை தவிர்ப்புக் குழுவும் இவரது கைது தொடர்பாக கேள்வியெழுப்பியுள்ளது. 4.5.99 பத்திரிகைச் செய்தியில் இராணுவ அதிகாரிகள் தமது விசாரணை முடிந்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாக கூறியுள்ளனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியா செயலாளரும் வடகிழக்கு இணைப்பாளரும், ஆளுநர்சபை உறுப்பினரும் அகில இலங்கை சமாதான நீதவானும், வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரியுமான சிவநாதன் கிசோர் கைது செய்யப்பட்டது தொடர்பாக முழுமையான காரணம் இன்னும் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் சந்தேக வதந்தி வலுப்பெற்றுள்ளது முழுவதும் இப்படியிருக்க பெரும்பாலனவர் இனமத பேதமின்றி சேவைபுரிந்த சிவநாதன் கிசோர் விடுவிக்கப்பட வேண்டுமென அவாக் கொண்டுள்ளனர்.

**வன்னியூர் த.ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொள்வார்களா?

படையினரால் மீட்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட வேண்டுமானால் எம்முடன் வாருங்கள். பத்திரிகைகளில் வெளி யாவதைக் கொண்டு விமர்சிப்பதில் பலன் இல்லை. ஐ.தே.க.வும், தமிழ்க் கட்சி உறுப்பினர்களும் இங்கு தெரிவிப்பதற்கு மாற்றமான நிலையை நேரில் சென்று பார்வையிடலாம்.

நீர்ப்பாசன, மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பேசிய போது தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் சாதித்தார்கள்.

பாராளுமன்றத்திலும், வெளியிலும் தமிழ் மக்கள் படும் துன்ப, துயரங்கள் சம்பந்தமாக காட்டமான அறிக்கை விடும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பில் இருந்து வரும் உண்மைக்கு புறம்பான தரவுகளுக்கு உண்மை நிலையினை, தமது சார்பு நியாயமான கருத்துக்களை தெரிவிக்க தயங்குவது ஏன்?

அரசு தரப்பால் மீட்கப்பட்ட பகுதிகளில் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள், தாம் - தமது கட்சியைச் சார்ந்த வர்கள் முகம் கொடுக்கும் மோசமான நிகழ்வுகளை அறிந் திருந்தும், சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளாமல் மௌன மாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருப்பது தமிழ் மக்களின் நம்பிக்கைக்குச் செய்யும் துரோகமாகும்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு யாழ். வாலிபர்களிட மிருந்து ஆட் சேர்ப்பு என்ற செய்தியை 04.05.99இல் தலைப்புச் செய்தியாக தமிழ்த் தினசரிகள் பிரசுரித்திருந்தன.

இராணுவத்துக்கு தமிழ் இளைஞர் திரட்டல் குறித்து தமிழ் கட்சிகள் கருதுவதென்ன? என்ற தலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வி.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் போன்றோரின் கருத்துக்களை 05.05.99 அன்று வீரகேசரி வெளியிட்டிருந்தது.

''தமிழ் மக்கள் மீது இராணுவத்தினரைப் பயன்படுத்தித்தான் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்நிலையில் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வது என்பது ஏதாவதொரு உள் நோக்கமுள்ள தந்திரச் செயலாகும்.

இராணுவத்தினரில் சிங்களவர்கள், மட்டும் அங்கம் வகிக்கவில்லை. தமிழர்களும் உள்ளனர் என வெளியுலகத்துக்குக் காட்டுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையாகவும் இது இருக்கலாம். இது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம். ஆகவே தமிழ் இளைஞர்கள் எவரும் இதில் இணைந்து கொள்வார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

''யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட் சேர்ப்புக்கு திட்டமிடப்பட்டுள்ளமை நகைப்புக்குரிய விடயமாகும். சகல தமிழ் மக்களும் புலிகள் என்ற கருத்து நிலவும் இவ்வேளையில் இராணுவத்திற்கு ஆட் சேர்ப்பதென்பது சாத்தியப்படாத விடயமாகும்.

தமிழன் எந்தவொரு வேலையில் சேர வேண்டுமானாலும் சி.ஐ.டி., என்.ஐ.பி. அறிக்கை கேட்கப்படுகின்றது. இந்நிலையில் இராணுவத்திற்கு தமிழ் இளைஞர்களை திரட்டுவது என்பது வேடிக்கையானதாகும். தற்போது சிங்கள மக்களே படையில் சேர முன் வருவதில்லை.

தற்போது உள்ள இராணுவம் சிங்கள இராணுவமாகும். எப்போது ஸ்ரீலங்கா இராணுவமாக மாறுமோ. அப்போது விரும்பியவர்கள் படையில் சேரலாம்.

# மக்களை எவ்வளவு காலம் தான் ஏமாற்றுவர் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தற்போதைய நிலையில் தமிழ் இளைஞர்களை திரட்டுவதென்பது 21 ம் நூற்றாண்டின் நகைச்சுவையாகவே இருக்கும் வெளியுலகத்துக்கு வேடிக்கை காட்டவே அரசாங்கம் இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது'' என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

''தமிழ் மக்களை நசுக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இந்த இராணுவ ஆட்திரட்டலும் ஒன்றாகும். இத்திட்டத்தினை எமது கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராட ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த ஆட் சேர்ப்பு நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் காலம் கடந்து மேற்கொள்ளப்படும் இத்திட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதென்பது நடவாத காரியமாகும். அரசு உள்நோக்கத்துடன் இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. தமிழ் மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்த்தபடி ஆட் சேர்ப்பு எனக் கோருவது வேடிக்கையானது என வன்னி மாவட்ட எம்பியும் ரெலொவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் என்ன அரசாங்கத்துக்கு துணை போகவில்லை என்று சொல்லுகிறதா? கடந்த வருடம் யாழ் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொண்டது தமிழ் மக்களின் நலனுக்காகவா?

ஆளும் தரப்பின் வற்புறுத்தலில், யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது என்பதை வெளியுலகுக்கு காட்டிக் கொள்ள ஆளும் தரப்புக்கு துணை போனதாகும்.

உறுப்பினர்களை இராணுவத் துணைப்படையெனச் சேவையாற்ற வைப்பதும், இதன் மூலம் அரசிடம் இருந்து நிதிபெறுவதும், அமைச்சில் ஆலோசகராக கடமையாற்றுவது போன்றவை ஆளும் தரப்பு வெளியுலகுக்கு வேடிக்கை காட்டப் போதுமானதாகும்.

பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை, பாராளுமன்றம் போன்ற தேர்தல்களில் கலந்து கொள்வதன் மூலம் பதவிகளை பெற்றுக் கொண்டதன் பின் அரசின் நலன்களுக்கு தமிழ்க்கட்சிகள் துணை போவது வெட்ட வெளிச்சமாகும்.

மௌனம் இச்சூழலில் சில பேருக்கு வெற்றியளித்துள்ளது. அரசு இராணுவத்துக்கு நேரடியாக ஆட் சேர்ப்பதை விட தமிழ்க்கட்சிகளுக்கு பணம், பதவி, வசதி வாய்ப்புகள், தமிழ் மக்கள் மீதான சவாரிக்கு அதிகாரம் கொடுப்பதன் மூலம் இலகுவாக தமிழ் இளைஞர்களை இராணுவத்துக்கு ஆட் சேர்க்க முடியும்.

அரசின் சகல நலன்களுக்கும் துணை போகின்ற தமிழ்க் கட்சிகள், ,தனிப்பட்ட தமிழ் மகன் செய்கின்ற போது தமிழினத் துரோகமாகவும், அரசு நேரிடையாக செயலில் இறங்கும் போது உள்நோக்கம், வெளியுலகுக்குக் காட்டுவது என்று தமிழ்க்கட்சிகள் பூச்சாண்டி காட்டிக்கொள்வது தமது இன்றைய இருப்பை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவே.

– உமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனச் சுத்திகரிப்பின் கொடுமை

**83ம்** ஆண்டு யூலை இனக்கலவரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை 16 வருடங்களாக தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இனப்படுகொலைப் பட்டியலில் நீண்டே செல்கின்றது. இதனால் அகதி வாழ்வும், அநாதை வாழ்வும் உக்கிரமடைந்து கொண்டே போகின்றது.

இனச் சுத்திகரிப்பில் 75000 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் 2000 க்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர். 1600 க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களும், பாடசாலைகளும் குண்டுத் தாக்குதலால் சேதமாக்கப்பட்டுள்ளன.

காணாமற் போனவர்களும், கொல்லப்பட்டவர்களும் கிழக்கு மாகாணத்திலே தான் அதிகம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொதுநலவாதிகளின் அக்கறையீனமும் அரசியல் இராணுவத் தலையீடும் இவ்விபரங்களை வெளியே கொண்டு வராமல் அமுக்கியுள்ளன. குறிப்பாக 1990ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இடம் பெற்ற இனச் சுத்திரிகரிப்பு நடவடிக்கையை அப்பிரதேச தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கண்டும் காணாதது போல் இருந்தது இதற்கு உதாரணமாகும்.

இப்பகுதி மக்களினால் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஜே.திவ்வியநாதன் தனது கதிரையைத் தக்கவைத்திருக்க வேண்டுமென விரும்பியதால் தனது பிரதேசத்தில் இடம் பெற்ற இராணுவ அத்துமீறல்களை கண்டும் மௌனமாக இருந்தார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம் எனப் புறப்பட்டு வந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) சார்பாக தெரிவானவரே இந்தத் திவ்வியநாதன் இந்தப் பிரச்சினையைத் தட்டிக் கேளுங்கள் என்று அவரைச் சார்ந்த இயக்கத்தினரும் கேட்டதாகத் தெரியவில்லை. இந்த வேலையை இயக்கம் சாராத பொது மகன் செய்திருந்தால் சுட்டுக் கொன்றிருப்பார்கள், இயக்கத்தைச் சேர்ந்தவராயிற்றே தட்டிக் கேட்க எவரும் வரவில்லை. இவர் 'அக்காலத்து இனச்சுத்திகரிப்புக்கு ஆதரவு செய்பவர் போல் மௌனமாக இருந்ததால், இன்று இராணுவ சிபாரிசு பெற்று அரசாங்கத் திணைக்களமொன்றில் ஆலோசகராக பதவி வகிக்கின்றார். இக்காலத்தில் கொல்லப்பட்டவர்களும், விசாரணைக்கென கொண்டு சென்று விடுவிக்காமல் காணாமற் போனவர்களும் அதனால் விதவைகள் அதிகம் உருவாகியதும் அம்பாறை மாவட்டத்திலே தான்.

யாழ். குடாநாட்டில் 90000 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் 15 வீதத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளும் சேதமாகியுள்ளன. விசாரணைக்கென கொண்டு செல்லப்படுபவர்கள் விடுவிக்கப்படுவது அரிதாகவுள்ளது. சிலர் என்னவானார்கள் என்பதே தெரியாமலுள்ளது. காணாமற் போன பட்டியலை ஒத்ததாக புதைகுழிகளில் இருந்து மனித எலும்புக்கூடுகள் வெளியேறி வருகின்றன. இதில் பச்சிளம் பாலகர்களும்

தேவேந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமென்றால் இனச் சுத்திகரிப்பு எவ்வளவு வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளது என்பதை இலகுவாக அறியலாம்.

இனச் சுத்திகரிப்பு ஆரம்பித்து 16 வருட காலத்தில் உறவுகளை இழந்து வீடு வாசல்களை இழந்து நடுத்தெருவுக்கு வந்த அகதிகளோ அதிகம். இதில் பண பலம் பொருந்தியவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தங்களை உரு மாற்றிக் கொண்டுள்ளனர். ஏழைகளோ அன்று தொடக்கம் இன்று வரை ''குறு நடையும் சில்லறைப் பாய்ச்சலுமாக'' அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

1990ம் ஆண்டு உக்கிரமான இனச்சுத்திகரிப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாகியுள்ளனர். இதேபோன்ற எண்ணிக்கை மற்றைய தமிழர் மாவட்டங்களிலும் தொடர்ந்தன. அரசின் மீளக்குடியேற்றக் கொள்கைக்கமைய பலர் மீளக் குடியேறச் சென்றனர். ஆயினும் கிழக்கு மாகாணத்தில் சில அகதி முகாம்கள் இன்னும் மூடப்படாமலும் அவர்களுக்குரிய நிவாரணங்கள் சீராக வழங்காமலும் நிலைமை தொடர்கின்றது. உதாரணத்திற்கு திருக்கோவில் பிரதேசத்தை எடுத்துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், வன்னிப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கை நிலையும் திருக்கோவில் பகுதியில் வாழும் அகதிகளின் நிலையும் ஒன்றே தான். என்றாலும் திருக்கோவில் கட்டுப்பாடற்ற பிரதேசம் எனும் வரையறைக்குள் இல்லாமையால் ஓரளவு நிம்மதியாக இப்பகுதியில் அகதிகள் வாழ்கின்றனர்.

வன்னிப்பகுதியில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசம் எனும் வரம்பு உள்ளதால் தமிழ் மக்கள் படும் துயரம் எழுத்தில் வடிக்கமுடியாதவை. உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவுப் பொருட்களோ அரசாங்கத்தால் உரிய காலத்துக்கு அனுப்பி வைக்க முடிவதில்லை. மருத்துவப் பொருட்கள் பால்மா, எண்ணெய் போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் விலைவாசியும் கொடிகட்டிப் பறக்கின்றது.

அரசாங்கம் உணவுப் பொருட்களை வன்னிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளைச் செய்து வரும் வேளையில் அதில் சம்பந்தப்பட்டவர்களுடன் புலிகள் மோதுவதால் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான பணிகள் அந் நிமிடத்திலிருந்துது ஸ்தம்பிதமடைகின்றது.

அண்மையில் கூட உணவுப் பொருட்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான உணவுப் பொருட்கள் விநியோகத்துக்கான வேலைகள் இராணுவ தரப்பினரால் தடை செய்யப்பட்டன.

இத்தடை உத்தரவுடன் இராணுவத்தினர் நின்று விடாமல் பொருட்களை இறக்கிச் சோதனை செய்யும் இடங்களில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தமாட்டோமென உறுதியளித்தால் உணவுப் பொருட்கள் விநியோகத்தை தொடர்ந்து நடத்த தயங்கோம் எனக் கூறுகின்றனர்.

வன்னிப்பகுதி மக்களும் பட்டினிச் சாவை எதிர் நோக்கக் கூடாது என்று விடுதலைப் புலிகள் சிந்திப்பார்களேயானால் நிம்மதிப் பெருமூச்சு எங்கும் கேட்கும். விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் பிடிவாதப் போக்கைத் தளர்த்தி மக்களின் பொது நலனில் அக்கறை கொண்டால் ஓரளவாவது தமிழர்களுக்கு நிம்மதி கிடைக்கும்.

இவ்வமைதியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்குத் தேவையான இலக்குகளை இருதரப்பாரும் தேட முற்படாமல் இருக்க வேண்டும். அத்துடன் அடிப்படை வசதிகள், சீராகக் கிடைக்காமல் அவதியுற்று வாழும் மக்கள் வெளியேறி விரும்பிய இடத்தில் கட்டுப்பாடற்று வாழ வழி வகுக்க வேண்டும். இவ்விடயத்தில் இரண்டு தரப்பும் முரண்டு பிடித்தால் மக்களின் வெறுப்புகளையே சந்

(தொடர்ச்சி ...13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவன் கைது! கல்லூரி மாணவர்கள் பகிஸ்கரிப்பு

கடந்த வாரம் யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மகா வித்தியாலயத்தில் உயர் கல்வி பயிலும் தற்பரானந்தன் சிவரூபன் படையினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து 07.05.99 வெள்ளிக்கிழமை கனகரெத்தினம் மகாவித்தியாலய மாணவர்கள் தமது சக மாணவன் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலைக்கு செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கல்விப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் ஆகியோர் மாணவனை விடுதலை செய்யக் கோரிய போதும் மாணவன் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

## வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் மயிரிழையில் உயிர் தப்பினார்

05.05.1999 புதன் கிழமை காலை 11 மணியளவில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிசோர் அன்ரன் ஜோன்சனின் மெய்பாதுகாவலர் ஜீவரத்தினம் அந்தோனிமுத்து (அழகன் 21) இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் சுடப்பட்டு காயமடைந்துள்ளார்.

மானிப்பாயில் உள்ள பிரதேச செயலகத்தில் தமது அறையில் பிரதேச சபைத் தலைவர் செயலாளர் மனோகரனுடன் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது, பிரதேச சபைத் தலைவரினது அறையினுள் நுழைய முற்பட்ட இரு நபர்களைத் தடுத்த போது இச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்த பிஸ்ரலால் திருப்பிச் சுட்டதில் துப்பாக்கி நபர்கள் பின்வாங்கித் தப்பி விட்டனர்.

இதே நேரத்தில் புலிகள் ''வேதனையுடன் ஒரு வேண்டுகோள்'' என்ற தலைப்பில் யாழ் குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகிறது.

## வவுனியா கோவில்குளம் புளொட் காவல் அரணில் கிளைமோர் குண்டு வெடிப்பு

வவுனியா கோவில் குளம் சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள புளொட் காவல் அரணில் காலை 8.15 மணியளவில் கிளேமோர் குண்டு வெடித்துள்ளது.

இதில் கோவில்குளத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சந்திரகுமார் (13) என்பவர் கொல்லப்பட்டதுடன் இயக்க உறுப்பினர்கள் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளார்கள்.

இயக்க முகாமிற்கு முன்னால் காவலில் இருந்தவர்களில் இரண்டு இயக்க உறுப்பினர்களும் காயமடைந்துள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வராசா அருட்செல்வன் (21) கோவில் குளம், ஜெயசீலன் (19) சிதம்பரம், விஸ்வலிங்கம் (30) பெரிய பூவரசங்குளம் ஆகிய 3 பொது மக்களும் புளொட் உறுப்பினரான விந்தன்(19) உட்பட அநுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியப்படுங்கள்!

மேதினச் செய்தியில் ''இந்த இறுதி நிமிடத்திலாவது ஐக்கியப்படுங்கள்'' என்று கூறிய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் அம்பாறை மாவட்டத்தில் கிளையொன்றை நிறுவவுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கோட்டை என்று வருணிக்கப்படும் காரைதீவில் அதுவும் ஈ.பி.டி.பி அலுவலகம் உள்ள பகுதியிலேயே அமைக்கவுள்ளனர்.

ஈ.பி.டி.பியிலிருந்து விலக்கப்பட்ட ஒருவரே பொறுப்பாகவும் நியமிக்கப்படுவாராம். எதிரும் புதிரும்! ஐக்கியப்படுவார்களா?

## குடாநாட்டிலுள்ள மினி சினிமாக்களை மூடி விடுமாறு புலிகள் எச்சரிக்கை. நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள்

யாழ் குடாநாட்டில் இயங்கும் சகல மினி சினிமாக்களையும் மூடி விடுமாறு விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான சுவரொட்டிகள் பரவலாக யாழ் நகரின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன.

போர்ச்சூழலில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மோசமான, கலாசார சீரழிவு நிறைந்த இத் திரைப்படங்கள் மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதால் மினி சினிமாக்களைத் தடை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் இந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தற்போது மூலை முடுக்குகள் எங்கும் மினி சினிமாக்கள் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் வவுனியாவில் சகோதரச் சண்டைகள்

05.05.99 இரவு 7.10 மணியளவில் வவுனியா புகையிரத நிலைய வீதி கரப்பன் காடு சந்தியில் புளொட் இயக்கத்தின் யாழ் மாவட்டத்தில் உள்ள பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உறுப்பினரான வீரகத்தி குணரட்னம் (42) என்பவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவரைச் சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவருடைய பெறாமகனான எஸ். கிருபாகரன்(19) என்பவரும் காயமடைந்துள்ளார்.

06.05.99 அதிகாலை இதே இடத்தில் ரெலொ ஆதரவாளர் தோணிக்கல் சுப்பிரமணியம் தவசி (25) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் சிவன் கோவிலடி ரெலொ முகாமிற்கு அருகில் கடை வைத்து வியாபாரம் செய்து வருபவர்.

ரெலோ, புளொட் இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள இயக்க மோதல்களே இந்தக் கொலைகளுக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாய்மொழி 12.05.99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கும் ஸ்திரத்திற்கும் விடுதலைப் புலிகள் ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றனர் என்றொரு காலம் இருக்கத்தான் செய்தது. இவ் அமைப்பு சம்பந்தமாக தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்தன.

சமீபத்தில் பி.ஜே.பி. ஆட்சியை வீழ்த்துவதற்கு வெளிச்சக்திகள் ஈடுபட்டிருந்தன என்பதை தமிழ்நாட்டில் சில பத்திரிகைகள் சுறுசுறுப்பாக சுட்டிக் காட்டினாலும் விடுதலைப் புலிகளை இது சம்பந்தமாக குற்றம் சாட்டுவதற்கு முன்வரவில்லை. ஆனால் சர்வதேசரீதியில் இந்திய அரசைக் கவிழ்ப்பதற்கு சதி நடந்திருக்கின்றது என்பதை பத்திரிகைகள் எடுத்துக் காட்டியுள்ளன.

ஜோர்ச் பெனாண்டஸை பதவி நீக்க வேண்டுமென்று ஜெயலலிதா, வற்புறுத்தியதிலும், தனது அங்கத்தினர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றியதிலும் உள்நோக்கம் இருந்திருக்கின்றது என தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக யூனியர் விகடன் கட்டுரை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரையில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கும் ஜெயலலிதாவுக்குமிடையில் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளது. ஜோர்ச் பெனாண்டஸ் சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்த நடவடிக்கை காரணமாகவே ஸ்ரீலங்கா அரசு கவலை கொண்டிருந்ததாகவும் அதனாலே அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதில் ஸ்ரீலங்கா அரசு அக்கறை கொண்டிருந்ததாகவும் அதை நடைமுறைப்படுத்துவதற்காக ஜெயலலிதாவை அணுகி ஆகக்கூடிய உதவிகளைத் தம்மால் வழங்க முடியுமென்று உறுதியளித்ததாக 11.4.99 இதழில் யூனியன் விகடன் தெரிவித்திருந்தது.

பா.ம.க. தலைவர் கலாநிதி ராமதாஸ், ஜெயலலிதா, ஸ்ரீலங்கா அரசு இராஜதந்திரிகள் ஊடாக ஐக்கிய அமெரிக்க உயர் ஸ்தானிகரின் நிதியை சென்னையில் பெற்றுள்ளதாக குற்றம் சாட்டியதுடன் ஜெயலலிதாவின் கூட்டணியில் இருந்தும் வெளியேறினார்.

சுப்பிரமணிய சுவாமிகள் ஊடாக ஜெயலலிதா ஐக்கிய அமெரிக்காவின் நிதியுதவிகளைப் பெறுவதாகவும், பி.ஜே.பி. அரசை கவிழ்ப்பதற்கு சதி செய்ததாகவும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

மேலும் தினமுரசுப் பத்திரிகை, கிளிங்டன் நிர்வாகம் மே 15ந் திகதி சிகாகோ நகரில் ஜெயலலிதா பெயரில் வைத்தியசாலையொன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக குறிப்பிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. பி.ஜே.பி. அரசு இந்தியாவில் ஸ்திரமான அரசை உருவாக்க முயற்சிப்பது மேற்கு நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதை ஐக்கிய அமெரிக்கா விரும்பாததினாலேயே ஜெயலலிதாவை ஆயுதமாகப் பாவித்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதென பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாட்டு தேர்தலின் போது இச் சதித்திட்டங்கள் அம்பலத்துக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளில் அவர் தண்டனைக்கு உள்ளானால் மேலும் நிலமை மோசமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

னணி வகித்த ஜெயலலிதா கணப்பீட்டில் மிகுந்த தவறிழைத்து விட்டார்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ''ஜெயலலிதா தனது வாக்காளர் மத்தியில் வெறுப்பினைச் சம்பாதித்துள்ளதுடன் காங்கிரஸ் கட்சியும் இவருடன் கூட்டுச் சேருவதற்கு தயக்கம் காட்டக்கூடும்'' என்று சோ விமர்சித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலின் போது பா.ம.க வும், ம.தி.மு.க.வும் தி.மு.க.வுடன் கூட்டுச் சேரக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றனவென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ம.தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமி சேது சமுத்திரத் திட்டத்தையும் ஜோர்ச்

# சதிகள் சம்பந்தமான குசுகுசுப்புகள் சூடு பிடித்துள்ளன

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமானால் அவர் சிறைக்குச் செல்வதும் பொதுவாழ்வில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுவதும் தவிர்க்க முடியாததென கூறப்படுகின்றது. குற்றச்சாட்டுகள் மிக உறுதியானவையாக இருப்பதனால் விசாரணைகள் ஓரிரு வாரங்களில் முடிவடைந்து விடலாம் என அரசதரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரின் வழக்குகள் விசேட நீதிமன்றத்தில் விரைவாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட இருக்கின்றது. தீர்ப்பு சம்பந்தமாக ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தாலும் தேர்தலின் போது மிகவும் அதிகளவு எதிர்ப்புகளை எதிர்நோக்க நேரிடலாமென்று அவதானிகள் கருதுகின்றனர்.

சென்னையிலுள்ள பத்திரிகையாளர் பாஸ்கரன் கருத்து தெரிவிக்கையில் ''வாஜ்பாய் அரசை கவிழ்ப்பதில் முன்

பெனாண்டசையும் பாராளுமன்றத்தில் ஜெயலலிதாவின் எதிர்ப்புகளுக்கு எதிராக, பலமாக வாதாடியுள்ளார்.

ராமதாஸும், கோபாலசாமியும் ஜெயலலிதா இந்திய அரசை வீழ்த்துவதற்கு ஐக்கிய அமெரிக்காவுடனும் ஸ்ரீலங்காவுடனும் சேர்ந்து சதி செய்துள்ளார் என்ற கதையை மக்கள் மத்தியில் குசுகுசுப்பாக கசிய விட்டுள்ளனர்.

இதேநேரத்தில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு உண்மையான எதிரி யார் என்பதை தமிழ் நாட்டு மக்கள் தாங்களாகவே அறியும் வரை தாம் அமைதியாக இருக்க வேண்டுமென்ற தந்திரத்தை விடுதலைப் புலிகள் கடைப்பிடிப்பதாக கருதப்படுகின்றது. விடுதலைப் புலிகளை தமிழ் நாட்டு மக்கள் எதிர்க்கின்றார்கள் என்பது மடமைத்தனமான கருத்தாகவே இருக்க முடியும்.

நன்றி : சண்டே ரைம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைப் பிராந்தியம் பேசுகிறது!



த.மகேஸ்வரன்
பாண்டிருப்பு
குடும்பஸ்தர்

கல்முனை ஆதார வைத்தியசாலை 1889இல் ஆரம்பமானது. 1972 இல் ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இன்று வரை பொது வைத்திய சாலையாக தரமுயர்த்தப்படவில்லை. ஒரு லட்சத்து 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவினங்களுக்கும் மருந்தக சேவையாற்றி வருகிறது.

தமிழ்ப் பகுதியில் இருப்பதாலோ என்னவோ இன்றைய நம் அரசியல்வாதிகள் ஏறெடுத்தும் பார்க்கிறார்களில்லை. இதைத் தரமுயர்த்துவதை விடுத்து நேற்றுத் தொடங்கிய ஆஸ்பத்திரிகளை முன்னேற்றி வருகிறார்கள்.

நோய் வராத மனிதனே இல்லை எனலாம். அச்சேவையை வழங்கும் ஆஸ்பத்திரியிலும் புறக்கணிப்பான சேவை வழங்குவதை யாரிடம் கூறுவது? சில வைத்திய சாலைகள் திடீர்த் திடீரென தரமுயர்த்தப்படுகின்றன.

ஆனால் இதைமட்டும் அபிவிருத்தி செய்ய அவர்கள் தயங்குகிறார்கள். இதுதான் இன்றைய நிலை.



ஏ.எம்.நி:மத்
துல்லாஹ்
கூட்டுறவு
அபிவிருத்தி
உத்தியோகத்தர்
மருதமுனை

1977இல் அரசு அறிமுகப்படுத்திய தாராள இறக்குமதி கொள்கையால் மருதமுனையின் உயிர்நாடியாகவிருந்த நெசவுத் தொழில் முடிவுக்கு வந்தது. அதை நம்பியிருந்த 4000 குடும்பங்கள் வீதிக்கு கொண்டு வரப்பட்டனர்.

அத்துடன் 1978 இல் வீசிய சூறாவளியால் நெசவு நிலையங்கள், விறகடுக்கும் போறணைகளாக மாறின.

மற்றது மருதமுனையின் வயல் நிலமான மேட்டு வட்டை உவர்நீரால் மாட்டு வட்டையாக மாறி நெல்விளையாதுள்ளது.

28 வருடங்களாக எத்தனை அரசியல் வாதிகள் வந்தார்கள். போனார்கள். ஒன்றுமே நடைபெறவில்லை.

1996 உலககிண்ண கிரிக்கட் போட்டிக்கு பிறகு மருதமுனையில் பல கழகங்கள் உருவாகின. இருக்கின்ற 18 கழகங்களுக்கும் உள்ளது. மசூர் மௌலானா மைதானம்தான். அங்குகூட கிரிக்கட் பிட்ச் வசதியில்லை. எனவே மைதானம் ஒன்று தேவைதான்.

நெசவுத் தொழிலையும், மைதானத்தையும் புனருத்தாரணம் செய்வார்களாயின் நன்றியுடையவர்களாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.எம்.எம். ஜமீல்

முன்னாள் எதிரணித் தலைவர்

கல்முனை பிரதேச சபை

கல்முனைக்குடி

கல்முனைப் பிரதேசம் அரசியல்வாதிகளின் அராஜக போக்கினால் ஊழல்களாலும் துர்ப்பிரயோகத்தாலும் நிரம்பி கண்ணீர் வடிக்கிறது. வாழ்க்கைச் செலவு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. வேலைவாய்ப்பில்லை. அன்றாடம் உழைப்பவன் பசி பட்டினியில்.

இங்குள்ள இனவாதக் கட்சியொன்றின் தான்தோன்றித்தனமான மிலேச்சத்தனமான செயல் அச்சூழலைக் குழப்புகிறது. அரசியல் சாக்கடை என்பதை மக்கள் இங்கு உணரத்தலைப்பட்டிருக்கின்றனர். மக்கள் இவற்றிலிருந்து விடுபட்டு விமோசனம் பெற சிந்திக்கின்றனர். ஐ.தே.க. வந்தால் தாராளமாக உணவாவது கிடைக்குமென்று நினைக்கின்றனர்.

நான் 30 வருடம் கூட்டுறவு வங்கி மனேஜராக இருந்து வருபவன். எந்தவித முன்னறிவித்தலுமில்லாமல் ஆதாரமில்லாமல் ''இன்ரடிக்ஷன்'' பண்ணியுள்ளனர். இதுதான் அக்கட்சியின் சீலம். கதைப்பது குர்ஆன் ஹதீஸ், செய்வதெல்லாம் மன்னிக்கமுடியாத குற்றங்களை, அல்லா பார்க்கட்டும்.



என்.தேவதீசன்

வர்த்தகர்

அன்பு ஸ்ரோர்

கல்முனை

கல்முனை நகர அபிவிருத்தி பற்றி இடையிடையே பத்திரிகையில் பார்ப்பதுண்டு. இங்கு வந்து பார்த்தால் அன்றைய கல்முனைதான் இன்றுமுள்ளது. பழைய காலத்து அதே பஸ் தரிப்பு நிலையம், பஷாரும் அப்படியே. மார்க்கட் நிலவரம் - மாட்டுப்பட்டி போன்று காணப்படுகிறது.

பிரபல வர்த்தக மையமான கல்முனையில் காசு போட்டு பேசும் தொலைபேசி ''பூத்'' கூட இல்லை என்றால் கேட்கவும் வேண்டுமா?

வீதிகள் கிடக்கின்ற நிலை. இருந்த வீதியையும் கெடுத்த சீலம். கல்முனையில் பிரதான அலுவலகங்கள் அமைந்துள்ள பிரதேச செயலக கட்டிடத்தில் ஒருவித மலசலகூட வசதியுமே மக்களுக்காக ஏற்படுத்தப்படவில்லை. தமிழர் கலாசார மண்டபம் இன்னும் மண்மட்டத்தை விட ஒரு அங்குலம் கூட மேலெழவில்லை. இன்னமும் சொல்லவா?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## இனச் சுத்திகரிப்பின்....

திக்க வேண்டிய சூழ்நிலையே உருவாகும்.

சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி அரசு வழங்கி வந்தால் அரசாங்கத்துக்கான மவுசு கூடிவிடும் என்று புலிகள் நினைத்தாலோ மக்களுக்கான உணவுப் பொருட்களை வழங்காமல் பட்டினி போட்டால் மக்கள் கிளர்ந்து புலிகளை ஓரங்கட்டுவார்களென்று நினைத்தால் அது அவரவர் தப்புக் கணக்கேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியின் அறுவை

தொலைக்காட்சி அலைவரிசைகள் போட்டி, போட்டுக் கொண்டு முன்னேறும் எம் நாட்டில் அரச தொலைக்காட்சி அலைவரிசைகள் தமிழ் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்து வருகின்றன.

இவ்வேளையில் தொலைக்காட்சி தனியார் அலைவரிசையான சக்தி ரீவி, இந்திய தொலைக்காட்சி அலைவரிசையில் ஒன்றான சன் ரீவியில் ஒளிபரப்பான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து, தொகுத்து, தணிக்கையினை நிவர்த்தி செய்து தமிழ் பேசுவோரின் ஆசையை பூர்த்தி செய்து வருவது பாராட்டக்கூடியது.

இந்திய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதுடன் நின்றுவிடாது எம் நாட்டிலும் புதிய நிகழ்ச்சிகளை சக்தி ரீவி தயாரித்து வழங்குகின்றது. அவை ஏனோ இந்திய நிகழ்ச்சிகளின் சாயலை ஒத்திருப்பதாகவே தெரிகின்றன. அந்நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் ''பாட்டுப் பாடவா'' எனும் எம் நாட்டுத் தயாரிப்பு. சன் ரீவியின் ''சப்தஸ்வரங்கள்'' நிகழ்ச்சியை பிரதி பண்ணுவதோடு நின்று விடாமல் அந்நிகழ்ச்சித் தொகுப்பாளர் ரமணனை கொச்சைப்படுத்துவது போன்று 'பாட்டுப் பாடவா' நிகழ்ச்சி அறிவிப்பாளர் விளங்குகின்றார். இசையில் மேதை எனும் அளவுக்கு பிரபலமானவர் ரமணன். அவருக்குப் போட்டியாக தமிழையே சரியாக உச்சரிக்கத் தெரியாத மழலை மொழி பேசும் ஒருவரை இந்நிகழ்ச்சிக்கு அறிவிப்பாளராக விடுவது இசையை கேலி பண்ணுவதாகத் தெரிகின்றது.

இலங்கையில் எத்தனையோ புகழ் பெற்ற அறிவிப்பாளர்கள் தோன்றியுள்ளார்கள் அவர்களில் கே.எஸ்.ராஜா, பி.எச்.அப்துல் ஹமீட் போன்றோர் உலகளாவிய புகழை அறிவிப்புத் துறையில் ஈட்டினர். ஆனால் அவர்கள் நடனமாடவில்லை அறிவிப்பிலே கவனம் செலுத்தினர். இந்நிகழ்ச்சி அறிவிப்பாளர் தமிழைக் கொச்சைப்படுத்துவதுடன் நடனத்தையும் கொச்சைப்படுத்துவது பார்க்க அசிங்கமாகத் தெரிகின்றது.

சக்தி ரீவி வட்டத்தினுள் இருக்கும் அறிவிப்பாளர் எழில்வேந்தன் இந்நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தால் இன்னும் சிறப்பாக அமையும். அழகி என்பதற்காக அருமையான தமிழ் நிகழ்ச்சியை அறுவை செய்ய வேண்டாம்.

இந் நிகழ்ச்சிகளுக்கு நடுவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது தமிழ் மொழியில் பாண்டித்தியமும் சங்கீதத்தில் அறிவாளியாகவும் இருந்தால் சாலச் சிறந்தது. நடுவர்கள் புகழ் பெற்றவராக இருக்க வேண்டுமென நினைத்தால் அயலவரைத்தான் கேட்க வேண்டும். ஆகவே தமிழ் மொழியில் வல்லமை உள்ளவர்களை நடுவர்களாக நியமிப்பது நிகழ்ச்சியை சிறப்பிக்கும் என்பதில் ஐயமில்லை.

## சிறுத்தை தவளை

ஆஸ்திரேலியாக் கண்டத்தில் சிறுத்தை தவளை என்ற இனம் வாழ்கிறது.

இதனுடைய உடலின் மேல் சிறுத்தைக்கு இருப்பதைப் போலப் புள்ளிகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இந்தப் பெயர் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடை!

கொளுத்தும் வெய்யிலா? கொட்டும் மழையா? குடை இருக்க பயம் ஏன் என்று சொல்கிறோமே. அந்த குடை வந்த விதம் எப்படி தெரியுமா?

இலங்கையர்களாகிய நமக்கு, இந்த குடை மிக பழமையான விஷயம் தான். வெண்கொற்றக் குடையின்கீழ் இருந்து அரசாண்ட மன்னர்களைப்பற்றி படித்திருக்கிறோமே! நவீன குடைக்கு முன்னோடி இந்த வெண்கொற்ற குடை தான்...

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோனாஸ் ஹான்வே என்ற வியாபாரி, எதையும் வியாபாரமாக்கி, பணம் பண்ணும் திறமை சாலி. வியாபார நிமித்தம் உலகம் முழுக்க சுற்றியவர். 18ம் நூற்றாண்டின் மத்தியில், பாரசீகத்துக்கு வியாபார விஷயமாக போயிருந்தார் ஹான்வே. ஒருநாள் கடை வீதியில் நின்று கொண்டிருந்த போது, பாரசீக இளவரசர் அவ்வழியாக, தம் பரி வாரங்கள் சூழ போனார். இளவரசனின் தலைக்கு மேல், கூடாரம் போன்ற ஒரு வகை சாதனத்தை பிடித்துக் கொண்டு சென்றனர். அது பட்டுத்துணியால் செய்யப்பட்டு, தங்கத்தால் பூவேலை செய்யப்பட்டிருந்தது. ஹான்வே இதை பார்த்தார். அவர் மனதில் ஒரு ஐடியா தோன்றியது.

அதில் சில மாற்றங்களைச் செய்து, மடக்கி விரிக்கும் வகையிலும், பட்டுத் துணிக்கு பதிலாக, கனமான காக்கித் துணியையும் கொண்டு தயார் செய்தார்.

வெய்யிலிருந்து காப்பாற்றும் சாத னம் என்று மட்டுமே அவர் கருதியதால், அதை வெப்ப நாடான பாரசீகத்திலேயே விற்க முயன்றார். சாதாரண தனி மனி தனை குடைபிடிக்க செய்வது, அரசரை அவமதிக்கும் செயல் என்று கூறி, அவரை நாட்டை விட்டே துரத்தியடித்தனர்.

இங்கிலாந்து திரும்பிய ஹான்வே யோசித்தார். வெய்யிலுக்கு மட்டுமல் லாது, மழையிலிருந்து நனையாமல் காப் பாற்றவும் இது உதவும் என்று விளம்பரம் செய்து விற்க முற்பட்டார்.

அந்தோ பரிதாபம், மழைக் காலங் களில் இங்கிலாந்து மக்கள் வெளியே செல்ல கோச் வண்டிகளையும், பல்லக்கு களையுமே நம்பியிருந்தனர். இந்த குடை யால், தங்களது வருமானம் குறைந்து விடும் என்று பயந்து, கோச் வண்டிக் காரர்களும், பல்லக்கு தூக்கிகளும் எதிர் ப்புத் தெரிவித்தனர்.

பல எதிர்ப்புகள் இருந்தாலும், குடையின் உபயோகத்தை மக்கள் புரிந்து கொள்ள தொடங்கினார்கள். வியாபாரம் சூடு பிடித்தது. குடை இல்லாமல் யாரும் வெளியே செல்லாத நிலை கூட உருவா கியது.

இன்று, எத்தனை மொடல்களில், டிசைன்களில், விதவிதமாக, கையடக்க மாக குடைகள் வந்துவிட்டன பாருங்கள்!

குடையை பார்க்கும் போதெல் லாம் அதை கண்டுபிடித்த ஹான்வேவின் நினைவு வரும்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய உலகசனத்தொகை 580 கோடி அல்லது 5800 மில்லியன் அல்லது 58 பில்லியன் ஆகும். உலக சுகாதார நிறுவனம் ஜெனிவாவை தலைமையாகக் கொண்டு இயங்குகின்றது என்பது யாவரும் அறிந்ததே. இன்று சுகதேகிக்கான வரைவிலக்கணம் தரப்பட்டிருக்கிறது. அதாவது ஆரோக்கியமான உடல் நிலையும், நல்ல மன நிலையும் உடையவரே சுகதேகியென கருதப் படுகிறார்.

ஆகவே இதன்படி அங்கக் குறைபாடுகள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் அங்கவீனர்களாக கருதப்படுகின்றனர். UNESCO நிறுவனத்தின் தரவுகளின்படி 1980ம் ஆண்டு ஆய்வின்படி உலக சனத்தொகையில் 10 வீதத்தினர் அங்கவீனர்கள் எனவும் பத்தில் ஒரு வீதத்தினர் கண் பார்வையற்றவர்கள் எனவும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அப்போது உலக சனத் தொகையில் 500 மில்லியன் பேர் அங்கவீனர்கள் எனவும் தெரியவருகிறது. எனவே ஆண்டொன்றுக்கு அங்கவீனர் தொகை 15 மில்லியன் அதிகரிப்பதாக கூறப்படுகிறது. இத்தொகையானது ஆபிரிக்காவின் மொத்த சனத்தொகையைவிட அதிகமாகும். எனவே இந்தப் பரிமாணம் சரியாக உணரப் படவில்லை என்பது புலனாகிறது.

ஆசியா, லத்தீன் அமெரிக்கா (அபிவிருத்தி அடைந்து வரும்) இந்நாடுகளிலேயே ஆகக்கூடிய அங்கவீனர்கள் இருப்பதாக தெரியவருகிறது. (அ.அ.நா) பொருளாதார வளர்ச்சி குறைந்த நாடுகளில்தான் பிரச்சினை கூடுதலாக இருக்கின்றது. ஒப்பீட்டளவில் ஐரோப்பிய நாடுகளில் குறைவே.

தற்போது இலங்கை சனத்தொகை 18.2 மில்லியன் ஆகும். அண்மையில் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் கருத்துப்படி இலங்கையில் இராணுவத்தினர் மட்டும் 26 ஆயிரம் பேர் வரை அங்கவீனர்களாயிருக்கின்றார்கள் எனத் தெரியவந்தது. இது தவிர தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரின் நேரடித் தாக்கத்தால் சுமார் ஐயாயிரம் பேர் அங்கவீனர்களாகியுள்ளனர். இதுமட்டுமன்றி இலங்கையில் வீதி விபத்துக்களில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 2000 பேர் அங்கவீனமடைகின்றனர்.

இலங்கையில் தற்போதைய ஆயுள்காலம் 73 வருடமாக கணிக்கப்படுகிறது.

இந்த தரவுகளாவன நம் நாட்டில் அங்கவீனர்களின் தொகை அதிகரித்து வருவதை காட்டுகிறது. இந்த யுத்தத்தில் இராணுவப் பரிமாணம், அரசியல் பரிமாணம், இனப்பரிமாணம் இவற்றைவிட மனித நேயப் பரிமாணம் மிகவும் அரிதாகவே நிலவுகின்றது. இந்த விடயம் இதுவரை சமுதாயத்தால் போதிய அளவு உணரப்படவில்லை, அங்கீகரிக்கப்படவில்லை என்பது கருத்தாகும்.

யுத்தமுனையில் இருதரப்பாலும் போரில் ஈடுபடுவோர் 20 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக காணப்படுகின்றனர். எனவே 20 வயதில் ஒருவர் தன் இருகால்களையும் இழந்துவிட்டால் அவர் 75 வயது வரை அவருடைய வாழ்நாள் எவ்வளவு அவலமானது என்பதை நீங்களே புரிந்துகொள்ள வேண்டும். இந்த விடயம் முழுமையாக வெளிக்கொண்டு வரப்பட வேண்டுமென்பதே அல்லது சமுதாயத்தால் முழுமையாக உணரப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

யாழ் பார்வையற்றோர் சங்கம் 1979ம் ஆண்டில் ஒன்பதாம் மாதமளவில் அப்போதைய யாழ் மாவட்ட அமைச்சராகவிருந்த U.B. விஜயகோன் அவர்களை சந்தித்து ஒரு கோரிக்கைப் பட்டியலை கையளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் குறிப்பிடப்பட்ட கோரிக்கைகளில் முக்கிய மானதாக கருதப்படுவது. இலங்கையில் அங்கவீனர்களின் விடயங்களை கவனிப்பதற்காக அரச அமைப்பில் தனியான திணைக்களம் அமைக்கப்பட வேண்டுமென்பதேயாகும். ஆனால் அப்போது அக்கோரிக்கை அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.


ஆனால் தற்போது மேற்கூறிய நோக்கத்திற்காக ஒரு அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது என்பது எம்மைப் பொறுத்தவரை பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆரம்பத்தில் இந்த அதிகார சபை இராணுவத்திலுள்ள அங்கவீனர்களின் நலனைக் கவனிக்க அமைக்கப்பட்டாலும் எதிர்காலத்தில் சமுதாயத்தில் ஏனைய அங்கவீனர்களின் நலனையும் மேம்படுத்துமென நம்புகிறோம்.

பொதுவாக தற்போது நாட்டில் அங்கவீனர்களின் விடயம் புறக்கணிக்கக் கூடியது அல்ல என்பதோடு மேலும் மேலும் இந்த பிரதானமான மனித நேய விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இதுவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**- கிண்ணியா பிறேமலன்**

தாய்மொழி 12.05.99

## அமேசன் வனத்து சிங்காரப் பறவை (Cock of the Rock)



கற்பாறைச் சேவல். அமேசன் காடுகளில் காணப்படும் இந்த செந்நிறப் பறவையை அநேகருக்குத் தெரியாது. புறாவின் அளவுடைய இப்பறவை, பிரகாசமான செந்தணல் நிறமுடையது. இந்த ஆண் பறவையின் தலை ஒரு விசிறி போல் விரிந்து, அதன் அலகு அதற்குள் ஒழிந்திருக்கும். வெளியிலிருந்து பார்க்கும் போது செந்தணல் போர்வையால் போர்த்திருப்பது போல் தோற்றமளிக்கும்.

''கரிபியன் நாட்டுப் பறவைகள்'' (Birds of the Caribean) என்னும் புத்தகத்திலே ''இப்பறவையின் உருவமும் தோற்றமும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது'' எனக் கூறப்படுகிறது.

*(விழித்தெழு - செப்-22-1998)*



*''நம்ம தலைவர் தோத்துட்டாரு...?!''*


*''பாவம், அவர் பேர்ல எந்த கிரிமினல் ரெக்கார்டும் இல்லியாம்...!''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நினைக்க நினைக்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது. தூக்கம் வேறு தொலைந்து போய்க் கிடந்தது. ''டிங்.....!'' கடிகாரம் இரவு மணி ஒன்று என்பதை சத்தம் போட்டுச் சொல்லியது. மெல்லத் திரும்பி பார்க்கிறான். அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

'எப்படி நம்புவது? கல்யாணம் முடிந்து ஆறுமாதம் தான். அதற்குள் சந்தேகப்பட்டால் என்னாவது? ஒருவேலை உண்மையிலேயே அது நடந்திருந்தால்? இப்படி இருமனக்கட்சிகளும் மாறி மாறிப் பேசிக் கொண்டன. அவனுக்கு ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாமல் போயிற்று. நடந்த சம்பவத்தை மீண்டும் நினைவு நாற்காலியில் அமரச் செய்தான்.

அவன் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறான். காலை எட்டு முப்பது மணிக்கு வேலைக்கு போனான் என்றால், பின்னேரம் ஐந்து மணிக்கே வீடு திரும்புவான். இது அவனது



எம்.ஸாலிஹ் அஸீம்

# சந்தேகம்

வழமையாயிருந்தது. அவன் திருமணம் முடித்து இப்போதுதான் ஆறுமாதங்கள்.

இன்றைக்கும் வழமை போல் வேலை விட்டு வீடு திரும்பியவன் தன்வீட்டிலிருந்து ஒரு சின்னப்பையன் ஓடிச் செல்வதை அவதானித்தான். உள்ளே சென்றவன், மனைவி கையில் காகிதமொன்றை வைத்து வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். 'ம்... என்ன இவ நான் வந்ததையும் கவனிக்காம அவ்வளவு இன்டெஸ்டா பார்த்திட்டு இருக்கா?' என்று நினைத்தவன்,

''ம்... என்ன பேசனல் கடிதமோ!' என்றான் கனைத்தபடி. அந்த நேரத்தில் அவனுக்கு பல்வேறு எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

''ஆ....! இந்தா பாருங்களேன்'' என்றவள் கையிலிருந்து காகிதத்தை நீட்டினாள்.

அதை வாங்கியவன் படித்தான். அன்புக் காதலி லதா இதற்கு மேலும் நீ தாமதித்தால் அவனோடுதான் வாழவேண்டி வரும். ஆகவே நாளைக்கு இரவைக்கு பன்னிரண்டு மணிக்கு ஆட்டாவில் வருவேன். நீ ஆயத்தமாயிரு. இரண்டு பேரும் ஓடிப் போய் ஒண்ணா வாழலாம். எந்த சக்தியாலும் நம்மல பிரிக்க முடியாது' இப்படிக்கு உன் காதலன் பிரதீப்' என்றிருந்தது.

அதை வாசித்து முடித்தவனுக்கு தலையை சுற்றுவதைப் போலிருந்தது. 'யாரு அவன் பிரதீப்' என்றான் வேதனை வெப்பத்தோடு. முகத்தில் பரிதாபம் பூத்துக் குலுங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கண்டவள் '' ஹா.... ஹா...'' என்று சிரித்துவிட்டு ''அவன் யாருனு தெரிஞ் சிருந்தா கன்னம் வீங்கிற அளவுக்கு செருப்பால அடிச்சிருப்பேனே'' என்றாள் கோபத்தில்

''அப்படினா அந்த பையங்கிட்டே கேட்க வேண்டியது தானே'' என்றான் அவன் பதிலுக்கு

''கேட்டிருப்பேங்க என்ன பண்ண அதற்கு முன்னாடி ஓடிப்போயிட்டான்' என்றாள் பெரு மூச்சொன்றை விட்டபடி.

அப்போதிருந்து பிடித்த யோசனைதான் இவனுக்கு. இன்னும் தெளிந்தபாடில்லை. 'லதா ன்னு எவ்வளவு உரிமையோட எழுதியிருக்கான்', 'அப்படி அவளுக்கு தெரியாதவனாயிருந்தா எதற் காக கடிதத்தை கிழிச்சி எறியாம பத்திரப்படுத்தி வைச்சிருக்கா?' போன்ற கேள்விகள் அவன் சந் தேகத் தீக்கு எண்ணெயாகிக் கொண்டிருந்தன.

இப்படியும் அப்படியுமாய் எப் படியோ அவனை அறியாமலேயே உறங்கிப் போனான்.

அந்தக் காலத்திலென்றால் காலையில் சேவல் கூவ பொழுது புலரும். இப்போதெல்லாம் சேவல் கள் எங்கேயிருக்கின்றது? சாப்பா ட்டை போட்டால் கோழிகள் முட்டையிடுகின்றன. சேவல் வேண் டிய அவசியமே இல்லாமல் போய் விட்டது. அதனால் அந்த இனிய கூவலை இப்போதைய காலைப் பொழுதுகளில் கேட்கமுடியாது போய்விட்டது. ஆகவே அமைதி யாய் காலை கண்விழிக்கிறது.

''ஏங்க....! ஏங்க....!'' அவள் அவனை உலுக்கி எழுப்பிவிட் டாள். எழுந்திருந்தவனுக்கு அவ ளைக் கண்டதுமே அந்தக் கடிதம் மனத்திரையில் இதழ் விரித்து விட் டது.

''இவளென்ன அதை அலட் டிக் கொண்ட மாதிரியே தெரியவில் லையே'' என்று மனதுக்குள் சொல் லிக் கொண்டவன் முகம் கழுவுவதற் காக பாத்ரூம் போய் வந்தான். வந்தவனிடம் அவள் காலைக் கோப்பியை நீட்ட, வேண்டா வெறுப்பாய் அதை அவன் வாங் கிக் கொண்டான்.

''ஏங்க எதுக்காக நேற்றி ருந்து ஒரு மாதிரியா இருக் கீங்க?'' அவள் சோகம் இழை யோடக் கேட்டாள்.

''அது ஒண்ணுமில்லே. வேலைத் தளத்துல ஒழுங்கா ஓடிக்கிட்டிருந்த மெசினொண் றோடு வேறொரு மெசினோட பெல்ட் பட்டதால் ஒழுங்காக வேலை செய்யமாட்டேங்குது. அதனால்தான் கஷ்டமாயிருக்கு வேலை'' என்றான் சமாளிப்புக் காய் பொய்யொன்றை விரித்த படி

''மெசினில பழுதிரு ந்தா அது என்னென்று பார்த்து திருத்திடனும் இல்லேன்னா இன்னும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுததாகி விடும்'' என்றாள் ஒன்றும் புரியாமல் அப்பாவித்தனமாய் அவள் மனைவி லதா.

''ஆமாம் உண்மைதான்'' என்றவன் வேலைக்குப் புறப்பட்டான்.

அன்று செவ்வாய்க்கிழமை. சனம் நெரிசலாகக் குழுமியிருந்தது பஸ்ஸுக்காக. சில நிமிடங்கள் ஆயுளை முடித்துக் கொள்ள, அங்கே பஸ் வந்து நின்றது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினர். இவனும் ஏறிக் கொண்டான் நல்ல வேளை இவனுக்குமொரு சீட் கிடைத்தது. இருவர் மட்டுமே சீட்டின்றி எழுந்து நின்றனர். பஸ் புறப்பட்டது.

இடையில் ஒரு வயோதிபர் பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொண்டார். அதை கண்ட அவன் அவருக்கு தன் சீட்டைக் கொடுத்துவிட்டு எழுந்து நின்றான். இன்னும் கொஞ்சத்தூரம் போனதும் ஒரு பெண் பஸ்ஸை நிறுத்தி ஏறிக்கொண்டாள் அவளிடம் ஒரு பிள்ளையும் இருந்தது. ஆனால் யாருமே எழுந்து இருக்கையைக் கொடுக்க முன்வரவில்லை. அதை பார்த்து அவனுக்கு நெஞ்சில் ஆத்திரம் முகாமிட்டது. சுற்று முற்றும் நோட்டமிட்டான் அப்பெண்கிட்டேயுள்ள இருக்கையில். ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான் வாட்டசாட்டமான உடலமைப்பு, இளமைத்துடிப்பு முகத்தில் ரேகையிட்டிருந்தது.

'இவன் எழுந்து இடத்தை கொடுக்கலாமே. கல்நெஞ்சுக்காரன். இவனோட இதயமென்ன இரும்பா? இப்படி தன்பாட்டுல உட்கார்ந்திருக்கான்'' என்று மனதில் திட்டித் தீர்த்தான்.

கொஞ்ச நேரத்தில் அப்பெண்ணிடமிருந்த குழந்தையை வாங்கி வைத்துக் கொண்டான் அவ்விளைஞன். குழந்தையை வாங்கியவன் எழும்பி இடத்தைக் கொடுத்திருந்தாலாவது அவளும் தன் குழந்தையோடு இருந்திருப்பாளே என்று ஆதங்கப்பட்டான் அவன்.

கொஞ்சத்தூரம் போனபின் இளைஞன் இறங்கிக் கொள்ள ஆயத்தமானான் கையிலிருந்த குழந்தையை அப்பெண்ணிடம் கொடுத்துவிட்டு குனிந்து எதையோ எடுத்தான். எடுத்த பின்தான் தெரிந்தது அது ஊன்றுகோலென்று. பஸ் நின்றதும் அந்த ஊன்றுகோலின் உதவியால் இறங்கி நடந்து சென்றான். அப்போதுதான் தெரிந்தது அவன் நொண்டியென்று.

''வீணா அவனை மனதுக்குள்ளே திட்டிப்போட்டோமே. அதுக்கு காரணம் அவன் மேல ஏற்பட்ட சந்தேகம்தானே. நாம ஒண்ணு நெனைச்சா வேற ஒண்ணு நடக்குது. இதுக்குள்ளே எப்படி நாம சந்தேகப் படலாம்? இது மாதிரித்தான் லதாமேலயும் நான் சந்தேகப்பட்டிருக்கேன்'' என்று எண்ணியவன் இனி என்ன ஆனாலும் சரி சந்தேகப்படுவதேயில்லை என்று மனதுக்குள் உறுதி பூண்டுக் கொண்டான்.

அன்று வேலை முடிந்து மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான். முகமகிழ்ச்சியைக் கண்ட அவன் மனைவி'' ஏங்க விஷயம் தெரியுமா?'' என்றாள்.

''சொன்னாத்தானே தெரியும்'' என்றான் அவன் பதிலுக்கு

''நேற்று ஒரு கடிதம் காட்டினேனில்லே. அது நம்ம பக்கத்து வீட்டு மாமியோடு மகள் லதாவுக்கு அவளோட காதலன் கொடுத்தனுப்பினது. பையன் அடையாளம் மாறி இங்க கொண்டுவந்து தந்திட்டான். அதைக் கண்டுபிடிக்கதான் அந்தக் கடிதத்தை வச்சிருந்தேன். நல்லவேளை நீங்க சந்தேகப் பேர்வழியில்லை'' என்று அவள் சொல்ல அவன் முகத்தில் அசடு நிறையவே வழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரை மீட்டல்

## ஏன் முடியாது?

உறுமீனின் ஆக்கிரமிப்பால் சிதறுண்ட சிறுமீன்கள் மறைவிடம் தேடின. பாவிகள் போகுமிடமெல்லாம் பள்ளமும் திட்டியுமாம்.

அந்தோ...! பரிதாபம்... மறைவிடம் தேடி ஓடிய இச்சிறு மீன்களை எதிர்நோக்கி இன்னொரு சதி காத்திருந்தது. இவற்றின் நீரில் வாழும் எதிரியான உறுமீனால் அல்ல. கரையில், தரையில் வாழும் ஆறு அறிவு படைத்த அந்நிய மானிடனின் மீன்பிடி வலையேயாகும்.

ஒழிக்கத் தெரியாதவன் தலையாளியின் வீட்டில் ஒழித்தது போல், இவையும் மீன்பிடி காரனின் வலையை மறைவிடமென நம்பி ஒழிந்து கொண்டன. மீண்டும் இவற்றின் அழிவு உறுதியாகிக் கொண்டது.

அபயம் தேடி ஓடி ஒழித்த சிறுமீன்கள், யமனின் பாசவலையென மேலே இழுத்தெடுக்கப் பட்டன. நீரின் வெளியே, சிக்குண்ட வலையோடு போகையில் விதியின் விபரீதம் விளங்கலாயிற்று. வாழ்வின் முடிவும் புலனாயிற்று.

இறுதி மூச்சு, நெருங்க நெருங்க, ஒன்றுடன் ஒன்று முட்டி மோதித் துடிதுடித்தன. தமக்கு முடிவு வரும்போது, தமக்குள் ஒரு முடிவை மேற்கொள்ள முற்பட்டன.

நாம் யார்...? நமக்கு ஏன் இக்கதி...? நம்மைக் காப்பாற்ற யாருமே இல்லையா? நம் அழிவிற்கு முடிவே இல்லையா?

முடிவு உண்டு... உண்டு... என்று சாகும் தருணத்தில் பிறிதொரு சிறுமீன் விரக்தியுடன் புலம்பிற்று.

முடிவுண்டா? நமக்குமா...? இனியுமா...? அது நம்மால் முடியுமா? நம்பிக்கை இழந்தவை சினத்துடன் வினாவின.

ஏன் முடியாது? நம்முடிவுதான் எதிரியின் முடிவிற்கு ஆரம்பம் என்ற விபரீதமான கருத்தை ஆவேசத்துடன் கூறிற்று.

என்ன...? நம்முடிவுதான் எதிரியின் முடிவிற்கு ஆரம்பமா...? என்ற புதிரான புதிரைப் புரியாமல் செத்துக் கொண்டன. ஆனாலும் ஒன்றின் அந்த இறுதி வார்த்தையில் உறுதியான அர்த்தம் ஆக்க பூர்வமாகிக் கொள்கிறது.

வலை வீசிப் பிடிப்பவன் சிறியதைப் போட்டு பெரியதைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

பிடித்த சிறுமீன்களில் ஒன்றை தூண்டில் ஊசியில் செருகி, மீண்டும் அது வாழ்ந்த நீரில் மிதக்க விட்டான்.

செத்த சிறுமீன், ஊசியில் செருகுண்டு தன்னை விரட்டியடித்த உறுமீனை மடக்கிப் பிடிக்க துணிவுடன் மிதந்துக் கொண்டிருந்தது.

இச்சிறுமீனின் நிலை புரியாத உறுமீன் வழமையான இறுமாப்புடன் இரைதேடி வந்து கொண்டது.

''கிட்டவா...! கிட்டவா...! இன்னும் கிட்டவா...! என்று செத்த சிறுமீன் வஞ்சம் தீர்ப்பது போல், மிதந்து கொண்டு,

''வருகிறாய்.... போகிறாய்... என்னாலே
செத்துக் கிடக்கிறேன் உன்னாலே
சாகப் போகிறாய் என்னாலே''

என்றும் எச்சரித்தது.

சாகப் போகிறேன் உன்னாலா...? என்று ஏளனமாகச் சிரித்தது. ''ஏன் முடியாது...? வந்து விழுங்கிப்பார்'' என்றது செத்துப் போன சிறுமீன். வீறு கொண்ட உறுமீன் செத்துப்போன சிறுமீனை தூண்டிலோடு கவ்விற்று. மறுகணம் துடிதுடித்து, கொட்டமடங்கி மரணித்தது.

**சி.க.அமிர்தஞானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகம்

டொக்டர். எம்.கே.முருகானந்தன்
எம்.பி.பி.எஸ்

## ஆஸ்த்மாவிற்கு சிகிச்சை

ஆஸ்த்மாவிற்கான சிகிச்சையின் அவசியமும் பலனும் அந்நோயை அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும்.

மூச்சுவிட முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டு கைகளை மேசையில் ஊன்றியபடி, பேசவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் திடீரெனச் சுகம் கிடைத்தவருக்குத்தான் சிகிச்சையின் அருமை புரியும்.

ஆஸ்த்மாவிற்கு பல சிகிச்சை முறைகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆங்கில வைத்தியம், சித்த ஆயர்வேத வைத்தியங்கள், யூனானி, ஹோமியோபதி என எல்லா வைத்தியங்களிலும் சிகிச்சை முறைகள் இருக்கவே செய்கிறது. ஏன் பாட்டி வைத்தியத்திலும் உங்கள் வீட்டு வைத்தியத்திலும் கூட இருக்கிறதுதானே?

எந்தச் சிகிச்சை முறை சிறந்தது?

### உங்கள் தேவை என்ன?

சிறந்த சிகிச்சையின் அம்சங்களாக எவற்றை நீங்கள் கருதுவீர்கள்.

- ★ விரைவில் சுகம் கிடைக்க வேண்டும்.
- ★ சுகம் உடனடியாகக் கிடைப்பது மாத்திரமன்றி நீடிக்கவும் வேண்டும்.
- ★ உங்கள் நாளாந்த வேலைகளைப் பாதிக்கக் கூடாது.
- ★ மருந்துகள் பக்க விளைவுகளைக் கொடுக்கக்கூடாது. கைநடுக்கம், பதற்றம் போன்ற உடனடிப் பக்கவிளைவுகளை மாத்திரமின்றி பிரஸர், நீரிழிவு எலும்புச் சிதைவு போன்ற எதிர்காலப் பின்விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடாது.
- ★ மருத்துவச் செலவு உங்கள் கைக்கு அடக்கமாக இருக்க வேண்டும்.

அவ்வளவுதானே?

### சிகிச்சை முறைகள்

ஆங்கில வைத்தியத்தைப் பொறுத்த வகையில் சிகிச்சை முறைகளை மூன்றாக வகுக்கலாம்.

- ★ வாய்வழி உட்கொள்ளும் மாத்திரைகள், சிரப் மருந்துகள்
- ★ ஊசி ஊடாக நாளத்தில் நேரடியாகச் செலுத்தப்படும் மருந்துகள்.
- ★ மூச்சுக் குழாய் வழியே செலுத்தப்படும் மருந்துகள்

இவற்றுள் மூச்சுக் குழாய் ஊடாக உள்ளிழுக்கும் கருவிகளையே (Inhalers - இன்ஹேலர்) இப்பொழுது வைத்தியர்கள் பெரும்பாலும் ஆஸ்த்மா நோயாளிகளுக்கு சிபார்சு செய்கிறார்கள்.

எனினும் எம்மைப் போன்ற வறிய நாடுகளில் பெரும்பாலான நோயாளிகள் இன்னமும் மாத்திரைகளையே உபயோகிக்கிறார்கள். மாத்திரைகளோடு ஒப்பிடும்போது இன்ஹேலர்களின் கூடியவிலைதான் தடைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்லாக இருக்கிறது. போருக்குப் பணத்தை அள்ளிக்கொட்டும் பிச்சைக்கார அரசுகள் நோயாளிகளுக்கான இலவச மருத்துவச் செலவில் தானே கஞ்சத்தனம் காட்டமுடியும்.

இன்னுமொரு காரணத்தையும் சொல்லலாம். பெரும்பாலான நோயாளிகளுக்கு இன்ஹேலர் என்றாலே ஒருவித பயம் இன்னும் நிலவுகிறது.

இது கடுமையான நோயாளர்களுக்கு மாத்திரம் தேவையான வைத்தியம், எனக்கு அவசியமில்லை.

'இன்ஹேலரைப் பழகினால் பிறகு கைவிட முடியாது'

'இது ஆபத்தான முறை. உயிராபத்தையும் கொண்டு வரும்' என்பது போன்ற பலவிதமான




தவறான கருத்துக்கள் நோயாளர்களிடையே நிலவுகிறது. இதனால் இன்ஹேலர் பாவிக்க அவர்கள் தயங்குகிறார்கள்.

ஆனால் இன்ஹேலர்கள் உண்மையில் ஆபத்தற்ற மிகவும் பாதுகாப்பான சிறந்த சிகிச்சை முறையாகும் என வைத்தியர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

## இன்ஹேலர்கள் ஏன் சிறந்தவை?

மாத்திரைகளை உட்கொண்டால் அவை உணவுக்குழாயினால் உறிஞ்சப்பட்டு, குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து, மிக நீண்ட நேரத்தின் பின்னர், அதுவும் உட்கொள்ளப்பட்டதின் மிகச் சிறிய அளவே சுவாசப்பையை அடைகிறது. எனவே போதிய நிவாரணம் கிடைக்க வேண்டுமாயின் அதிகளவு மருந்தை எடுக்க வேண்டும்.

1. ஆனால் இன்ஹேலர்கள் நேரடியாக சுவாசப்பையினுள் மருந்தைச் செலுத்துவதால் மிகக் குறைந்த அளவு மருந்தே போதுமானது.

மாத்திரைகள் மில்லி கிராம் அளவில் கொடுக்கப் படுகின்றன. ஆனால் இன்ஹேலர் மருந்துகள் அதில் ஆயிரம் மடங்கு குறைவான, மைக்கிரோ கிராம் அளவிலேயே கொடுக்கப்படுகின்றன. இதனால் உடலுக்கு ஏற்படும் பக்கவிளைவுகள் இல்லையெனும் அளவிற்கு குறைந்துவிடுகிறது.

2. இன்ஹேலர் மருந்துகள் சுவாசப்பையினுள் நேரடியாகச் செலுத்தப்படுவதால் மிக விரைவாகவும் குணமாக்குகிறது.
3. அதேபோல குறைந்த அளவு மருந்தே பாவிக்கப்படுவதால் ஆபத்தற்ற பாதுகாப்பான சிகிச்சை முறையுமாகும்.

## மருந்து வகைகள்

நீங்கள் எத்தகைய வழியில் மருந்துகளை உள்ளெடுத்தாலும் அவை அடிப்படையில் இரண்டு வகையானவை.

1. சுவாசக் குழாய்களை விரிவடையச் செய்யும் (broncho-dilators) எனப்படுபவை. இவற்றை உடனடி நிவாரணமளிப்பவை எனவும் கூறலாம்.

இவை ஆஸ்த்மாவின் போது சுருக்கமடையும் சுவாசக் குழாய்களை விரிவடையச் செய்து சுவாசத்தைச் சுலபமாக்கும். நீங்கள் பெரும்பாலும் உபயோகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்டோலின் - சல்பியுடமோல், பிரிக்கானில் -ரெபியுடலன் அமைனோபிலின் சேர்ந்தவை.

2. அழற்சிக்கு எதிரானவை (Anti Inflammatory agents) எனப்படுபவை. இவை உடனடி நிவாரணம் அளிப்பதில்லை. ஆனால் சுவாசக் குழாய்களின் அழற்சியை நீண்ட கால அளவில் இவை தணிப்பதால் நோய் அடிக்கடி வருவதையும், நோய் மோசமடைவதையும் தடுக்கின்றன.

எனவே ஆஸ்த்மாவிற்கான சிகிச்சையில் இவையே மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கோர்டிகோ ஸ்டீரொயிட் வகை மருந்துகள் இதில் அடங்குகின்றன.

பிரட்னிசொலோன், பீட்டாமெதசோன், போன்ற மாத்திரைகள் சில உதாரணங்களாகும். இவை கடுமையான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன. ஆனால் இன்ஹேலர் மூலம் கொடுக்கப்படும் இதே வகையைச் சேர்ந்த புதிய மருந்துகள் மிகக் குறைந்த அளவிலேயே கொடுக்கப்படுவதால் ஆபத்தற்றது.

இது புதுவகை மருந்து எங்களில்தான் பரீட்சித்துப் பார்க்கிறீர்களோ என நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. கடந்த இருபத்தியேழு வருடங்களுக்கு மேலாக பாவனையில் இருக்கின்றன. விலை அதிகம் என்பதால் முன்பு இலங்கையில் பெருமளவு பாவனையில் இருக்கவில்லை. இப்பொழுது கைக்கு அடக்கமான விலையில் கிடைக்கிறது. எனவே பரவலான பாவனைக்கு வந்துள்ளது.

## உங்களுக்கான மருந்து எது?

உங்களுக்கான மருந்து உங்கள் நோயின் நிலையில் தங்கியுள்ளது.

## இடையிடையே தலைகாட்டும் குறைந்த ஆஸ்த்மா

உங்களுக்கு ஆஸ்த்மாவின் தாக்கம் இடையிடையேதான் வருகிறதெனில் அதாவது வாரத்திற்கு இரண்டு முறைக்கு குறைவாகவே வந்து அதற்கு இடைப்பட்ட காலத்தில் நோய்கான எந்த அறிகுறியும் இருப்பதில்லை எனில் நீங்கள் நோயின் அறிகுறி தோன்றும் நேரங்களில் மட்டும் முதலாவது வகை மருந்துகளில் ஒன்றை மட்டும் பாவித்தால் போதுமானதாகும். அதாவது வென்டோலின், பிரிக்கானில் போன்ற ஒரு மருந்தை இன்ஹேலராக உபயோகித்தால் போதுமானது.

## ஏனையவர்களுக்கு

ஏனையவர்களுக்கு இரண்டு வகை மருந்துகளையும் நோயின் வாதையை உடனடியாகத் தணிக்கும் மருந்துகளையும் நோய் வராமல் தடுக்கும் மருந்துகளையும் சேர்த்து இன்ஹேலராக பாவிக்க வேண்டியிருக்கும்.

அதாவது வென்டோலின் பிரிக்கானில் ஆகிய இரண்டில் ஒன்றையும், சைக்கிளசோன் பெகடைட், பல்மிகோர்ட் போன்றவற்றில் ஒன்றையும் சேர்த்துப் பாவிக்க வேண்டியிருக்கும்.

எந்தெந்த மருந்துகளை எந்தெந்த அளவுகளில் உபயோகிக்க வேண்டும் என்பதை உங்கள் வைத்தியர்தான் தீர்மானிக்க வேண்டும்.

இன்ஹேலர்களை உபயோகிக்கும் முறைகள் பற்றி அடுத்த இதழில் பார்ப்போமே.

**நீங்கள் அறிய விரும்பும் தெளிவு பெற விழையும் மருத்துவ விடயங்களை எங்களுக்கு எழுதுங்கள். மருத்துவத் துறை சார்ந்த அறிஞர்களின் துணையோடு தெளிவுறுத்த முயல்வோம்.**
**எழுத வேண்டிய முகவரி :**
**'உங்கள் சுகம்'**
**தாய்மொழி**
**த.பெ.இல 1636, கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவை வளர்ப்போம் -03

1. **1991ம் ஆண்டு சுதந்திரமடைந்த கஸகஸ்தான் நாட்டின் நாணயம் என்ன?**
   1.ரூபா  2.றியால்
   3. யென்  4.டெங்கே
2. **சீனப் பெருஞ்சுவரின் நீளம் என்ன?**
   1. 3000 km  2. 3460 km
   3. 4620 km  4. 4000 km
3. **டென்மார்க் சுதந்திரமடைந்த ஆண்டு**
   1. 1945  2. 1996
   3.1948  4. 1920
4. **பாடும் மீன் உள்ள இடம்?**
   1.கல்லடிப்பாலம்  2. அல்லை வாவி
   3. கந்தளாய்க் குளம்  4. யாழ் குடாக் கடல்
5. **வெந்நீரூற்று அமைந்திருக்கும் மாவட்டம்**
   1. கண்டி  2. யாழ்ப்பாணம்
   3. திருகோணமலை  4. கொழும்பு

★ சரியான விடை எழுதும் அதிஷ்டசாலி ஒருவருக்கு ரூபா 250 பெறுமதியான அறிவியல் புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.

★ வினாக்களின் இலக்கத்தை குறிப்பிட்டு விடையை மட்டும் எழுதவும். அத்துடன் கீழேயுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து தபாலட்டையில் ஒட்டி அனுப்பினால் போதும். பதிவுத்தபால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. **முடிவுத் திகதி 25.5.99**

முகவரி : பொது அறிவை வளர்ப்போம்
தாய்மொழி, த.பெ. இல. 1636, கொழும்பு.

## பொது அறிவை வளர்ப்போம் -1

விடைகள்:-

1. சாரு நிவேதிகா
2. சேர் ஐஸாக் நியூட்டன்
3. கிறிஸ்ரியன் பேனாட் -1967
4. எகிப்து
5. திருவள்ளுவர்

**சரியான விடை எழுதியவர்களில் பரிசு பெறும் அதிஷ்டசாலி:-**
செல்லத்துரை ரேணுகா
3ம் பிரிவு, மண்டூர்

**பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்**

1. கி.மேரி வதனா
   விவேகானந்தா வீதி,
   காரை தீவு-1
2. அபூபக்கர் முகம்மட் ரௌஸ்
   அண்ணல் வீதி, கிண்ணியா 3.
3. கே. சிவாஜினி
   வண்ணார்பண்ணை,
   யாழ்ப்பாணம்.
4. அப்துல் ஹமீட் பௌஸியா
   செந்நெல் கிராமம்,
   சம்மாந்துறை.
5. யோகரெட்ணம் சசிகலா
   நவாலி வடக்கு, மானிப்பாய்

## பொது அறிவை வளர்ப்போம் - 03

முழுப்பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

கையொப்பம் : ....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளவத்தையில் பலவருடங்களாக

22K தங்க நகைகளுக்கு

# அருணா ஜுவலரி

385, C காலி வீதி வெள்ளவத்தை
கொழும்பு -6

பழைய தங்க நகைகளை கொடுத்து புதிய நகைகள் பெறவும்,
பழைய நகைகளை புதிய டிசைனுக்கு மாற்றி அமைத்திடவும்,
அசல் 22K தங்கத்தில் நகைகள் வாங்கிடவும் நீங்களும்
இன்றே நாடுங்கள் வெள்ளவத்தை அருணா ஜுவலரி

தரம்

தன்நிகரில்லா சேவை

நிகரில்லா டிசைன்கள்

நீறில்லா வேலைப்பாடுகள்



ARUNA JEWELLERY

385, Galle Road, Wellawatte, Colombo 6.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி வெற்றிப் பந்து

ஒருநாள் கிரிக்கெட்டில் கடைசிப் பந்தில் பவுண்டரியோ, சிக்சரோ அடித்து அணியை வெற்றி பெறச் செய்வதென்பது குதிரைக் கொம்பான விஷயம். இத்தகைய சாதனையை இதுவரை 6 பேர் மட்டுமே செய்துள்ளனர். இதில் கடைசியாக தனது பெயரை இணைத்துக் கொண்டவர் தென் ஆபிரிக்க அணியின் லான்ஸ் குளூஸ்னர். நேப்பியர் நகரில் நியுசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் குளூஸ்னர் நியுசிலாந்து கேப்டன் டியான் நாஷ் வீசிய கடைசி பந்தில் சிக்சர் அடித்து தென் ஆபிரிக்க அணியை வெற்றி பெறச் செய்தார்.

1986ம் ஆண்டு ஷார்ஜாவில் நடந்த ஒருநாள் போட்டியில் ஜவித் மியான்டட் இந்திய வீரர் சேட்டன் சர்மாவின் பந்தை இதேபோல் சிக்சருக்குத் தூக்கி பாகிஸ்தானை வெற்றி பெறச் செய்தார். இந்த இருவர் மட்டுமே கடைசிப் பந்தில் சிக்சர் அடித்து தங்கள் அணியை வெற்றி பெற வைத்தவர்கள்.

**சிக்சர், பவுண்டரி அடித்து ஜெயிக்க வைத்தவர்கள் விவரம்:**

| ஆண்டு | பேட்ஸ்மேன் | பந்து வீசியவர்கள் | வெற்றி இலக்கு ரன்கள் | விக்கெட் வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1977 | இயன்போத்தம் (இங்கிலாந்து) | சலீம் அட்லாப் (பாகிஸ்தான்) | 209 | 3 |
| 1986 | ஜாவித் மியன்டாட் (பாகிஸ்தான்) | சேட்டன்சர்மா (இந்தியா) | 246 | 1 |
| 1990 | இயான் பிஷப் (மே.இந்திய தீவுகள்) | ஆங்குஸ் பிரேசர் (இங்கிலாந்து) | 215 | 3 |
| 1996 | மைக்கேல் பெவன் (ஆஸ்திரேலியா) | ரோஜர் ஹார்பர் (மே.இந்திய தீவுகள்) | 173 | 1 |
| 1998 | கிறிஸ் கெய்ன்ஸ் (நியூசிலாந்து) | நீல் ஜான்சன் (ஸிம்பாவே) | 259 | 5 |
| 1999 | லான்ஸ் குளூஸ்னர் (தென்னாபிரிக்கா) | டியான் நாஷ் (நியூசிலாந்து) | 192 | 2 |

## கிரிக்கெட் துளிகள்

உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் இறுதிப் போட்டியில் ஸ்டம்ப் செய்யப்பட்டு ஆட்டம் இழந்த ஒரே வீரர் ஷேன் வார்ன். 1996இல் இந்த ஸ்டம்பிங்கை செய்தவர் இலங்கை அணியின் கலுவிதாரன.

★ ★ ★

இறுதிப் போட்டியில் இரண்டாவதாக பேட்டிங் செய்து வெற்றி பெற்ற ஒரே அணி இலங்கை. ஆண்டு 1996.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவிந்தவின்




**து**டுப்பாட்ட நட்சத்திரமான அரவிந்த டி சில்வா சரிதா என்ற அழகியை திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

திருமண அழைப்பிதழ்கள் குறிப்பிட்ட ஒரு சில நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மட்டுமே அனுப்பப்பட்டிருந்தன. விருந்தாளிகள் கோட், சூட் போட்டு வரத்தேவையில்லை சாரத்துடனேயே வரலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் அதிகமானோர் அழகிய சாரங்களையே அணிந்து வந்திருந்தனர்.

விருந்தினர்கள் வான வில்லின் நிறங்களில் சாரம் அணிந்து வந்தது மட்டுமல்லாமல், அரவிந்தவும் சிவப்பு சேட்டும், சிவப்பு சாரமும் அணிந்திருந்தார். சனத் ஜெயசூரியாவும் சாரம் அணிந்தே வந்திருந்தார்.

மணப்பெண்ணின் அழகிய வெண்நிற மாளிகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை, நீலம், சிவப்பு, ஊதா, மஞ்சள் நிறங்களாலான சாரங்களில் நடமாடியது பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது.

மாலை ஆகியதும், அங்கு விரிக்கப் பட்டிருந்த அழகிய கம்பளம் வசந்த கால பூந்தோட்டத்தில் நிரம்பியிருக்கும் மலர் கொத்துக்கள் போல் ஜொலித்தன.

மென்மையாக ஒலித்துக் கொண்டிருந்த வாத்தியங்கள் வசந்த கால, இனிமையான ஓசைகளை நினைவூட்டிக் கொண்டிருந்தன.

மணமகனான அரவிந்த திருமண ஊர்வலத்தின் முன்னால் முதலாவதாக நடந்து வந்தார். தாய்லாந்துப் பட்டில் தைத்திருந்த நீள்சட்டையும், தாய்லாந்து சாரமும் அணிந்து எழில் பொங்க காட்சி தந்தார். மெதுவாக நடந்து சென்ற அரவிந்த மணமேடையை அடைந்தபோது மணமகள் சரிதா மாளிகையின் வலப் பக்கத்திலிருந்த அறையிலிருந்து மிக அழகான வெண்நிற ஆடை அணிந்து வந்தார். அவரின் ஆடை முழுவதும் வெள்ளிச் சரிகைகளினால் ஜோடிக்கப்பட்டிருந்தது.

வெள்ளை நிற சேலைக்கு ஏற்றவாறு அவர் வெள்ளியினாலான அழகிய ஆபரணங்களை அணிந்திருந்தார். வெள்ளை நிற சேலையும், வெள்ளை நிற மேலங்கியும், வெள்ளியாலான அழகிய ஆபரணங்களும் அவரை ஒரு அழகு தேவதையாக்கி வைத்திருந்தன.

சரிதாவின் அழகிய கூந்தல் பனி மலையில் தவழ்ந்து செல்லும் கரு மேகக் கூட்டம் போல் தவழ்ந்து விளையாடின.

சரிதாவின் கையிலிருந்த புதுமையான பூங்கொத்து மேலும் அழகுக்கு அழகூட்டுவது போல் இருந்தது.

மணப்பெண்ணின் தோழிகள் நீலம், பச்சை, மஞ்சள், சிகப்பு ஆகிய நிறங்களிலான பற்றிக் ஆடைகளை அணிந்து பார்ப்போரைப் பரவசப்படுத்தினர்.

மணமகனின் தோழர்களும் மணமகனும் வெள்ளியினால் சோடிக்கப்பட்ட இந்திய நாட்டு உடைகள் மாதிரியில் ஆடைகளையும் பற்றிக் சாரங்களையும் அணிந்திருந்தனர்.

திருமணச் சடங்குகள் பௌத்த கலாசாரங்களுக்கு ஏற்பவும், கத்தோலிக்க நடைமுறைகளுக்கேற்பவும் இரு பிரிவுகளாக நடைபெற்று முடிந்தது.

திருமண மாளிகை அழகு சோடனைகளினால் நிரம்பி வழிந்தது.

மணவறை வெள்ளை நிறமும் மஞ்சள் நிறமும் கலந்த சோடனைகளினால் அமைக்கப்பட்டிருந்தது.

அரவிந்தாவும் சரிதாவும் மோதிரங்களை மாற்றிக் கொண்டதும், இருவரும் திருமண 'கேக்' வெட்டி பகிர்ந்து கொண்டனர்.

அதன்பின்பு விருந்தினர்களுக்கு பானங்களும், சுவையான உணவு வகைகளும் வழங்கப்பட்டன.

அரவிந்தா கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு நன்றி கூறினார். இரவு விருந்தும் கேளிக்கைகளும், எல்லோரையும் மகிழ்வூட்டியது.

**இந்த 99 ம் ஆண்டின் ஜுன் 16ம் திகதியை டே ஒப் சிக்ஸ் மில்லியன்' தினமாகக் கொண்டாட உள்ளனர். அன்றைய தினம் உலகத்தின் மக்கள் தொகை 6 மில்லியனைத் (1 மில்லியன் = 100 கோடி) தாண்டி விடும் என்று கணக்கிட்டுள்ளனர். தற்போது மக்கள் தொகை பெருக்கம் குறைந்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக கொண்டு வரப்பட்ட புதுமையான குடும்ப நலத் திட்டங்களின் மூலம் மக்கள் தொகை உயர்வு குறைந்துள்ளது!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் முருங்கை

முருங்கை மரம் மருத்துவ குணம் கொண்டது. அதன் இலை, காய், விதை, தோல், வேர் எல்லாவற்றிலுமே உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான தன்மைகள் அதிகம் இருக்கின்றன.

★ முருங்கை இலையில் காம்புகளை நீக்கிவிட்டு தேவைக்கு உப்பு சேர்த்து வேக வையுங்கள். நன்றாக வெந்ததும் அந்த நீரை வடிகட்டி வெளியேற்றி விட்டு கீரையில் சிறிதளவு நெய் சேர்த்து கிளறி, சாப்பிட்டால் தாய்மார்களுக்கு தாய்ப்பால் அதிகரிக்கும்.

★ முருங்கை இலையை அரைத்து சாறு எடுத்து அரை அவுன்ஸ் அளவுக்கு, உணவுக்கு முன்போ பின்போ குடித்தால் ரத்த அழுத்தம் குறையும். ஒரு வாரம் குடித்தால் போதும். 'பிரஷரை' மீண்டும் சோதித்துப் பார்த்துவிட்டு தேவைப்பட்டால் மட்டும் மீண்டும் குடியுங்கள்.

★ உடலில் வீக்கம் ஏற்படும் பகுதியில் முருங்கை இலையை அரைத்து 'பேஸ்ட்' போல் தேய்த்தால் குணமாகும்.

★ முருங்கையில் பெருமளவு 'புரோட்டீன்' இருக்கிறது. குறிப்பிட்ட அமினோ அமிலங்களும் இருப்பதால், நீரிழிவு நோயாளிகள், சுவாசத் தடை நோயுள்ளவர்கள் முருங்கைக்காயை உணவில் சேர்ப்பது நல்லது. இதில் கந்தகம் இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி ஓரளவு அதிகரிக்கும். செக்ஸில் அதிக ஈடுபாடு கொள்ளவும் முருங்கைகாய் உதவும். தாது புஷ்டி தன்மை அதிலுள்ளது.

★ மூத்திரப்பையில் கல் இருப்பவர்கள் முருங்கைவேரில் இருந்து சாறு எடுத்து நாலில் ஒருபகுதி சேர்த்துக் குடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மூத்திரத்தின் அளவு உயரும். கல்லின் தொல்லையும் குறையும்.


★ முருங்கை இலையை அரைத்து அதில் எலுமிச்சை பழச் சாறு கலந்து தேய்த்தால் முகத்துக்கு வசீகரம் கிடைக்கும். முகப்பருவும் நீங்கும்.

**வித்தியா, வவுனியா**

"தமிழ் மக்களைத் தூக்கி விடுவதே என் வேலை"'னு நீங்க பேசினத தப்பா புரிஞ்சுக்கிட்டாங்க தலைவரே!"

"ஏன்?"

"எவனோ கிணத்துல விழுந்துட்டானாம்... கூப்பிடறாங்க"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு செக்ஸ் படம்!



சர்ச்சைக்கிடமான படங்களை எடுத்து பெரும் சர்ச்சை கிளப்பி பெயர் எடுத்தவர் பெண் இயக்குனர் மீரா நாயர். இவர் இப்போது செக்ஸ் -எய்ட்ஸ் கலந்த பரபரப்பான படத்தை தயாரித்து உள்ளார். இதற்கு இப்போதே எதிர்ப்பு கிளம்பி விட்டது.

படத்தின் பெயர் 'மை ஓன் கன்ட்ரி'. அமெரிக்காவில் பெரும் பணக்காரராக வாழ்ந்து, அனுபவித்து சீக்கிரமாகத் தனது வாழ்க்கையை முடித்துக் கொண்ட ஒரு இந்திய டாக்டர் பற்றிய கதை. இவர் செக்ஸ் விஷயத்தில் சூப்பர் மேன். ஓரினச் சேர்க்கை உட்பட பல மோசமான செக்ஸ் சமாச்சாரங்களில் கரைகண்ட இவர் எப்படியெல்லாம் எய்ட்ஸ் நோயை எதிர்த்து போராடுகிறார் என்பதை தத்ரூபமாக மீரா நாயர் சித்தரித்துக் காட்டியுள்ளார். இந்தப்படம் வெளிவராத நிலையிலையே பலர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். எனினும் மீரா பணியவில்லை. இது ஒன்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு படமல்ல. இது கமர்ஷியல் படம்தான். எய்ட்சை எதிர்த்து போராடும் ஒரு டாக்டரின் கதையை படமாக்கி இருக்கிறேன். இதை யாராலும் தடுக்க முடியாது' என்கிறார். படம் வந்தால்தான் இன்னும் பிரச்சினையே இருக்கிறது.



## ரம்யா கவலை


'படையப்பாவில் ஜெ.வை இமிடேட் செய்து கேரக்டர் செய்திருக்கும் ரம்யா கிருஷ்ணனுக்கு கடைசிவரை இந்த 'அன்டர் கிரவுண்ட் மேட்டர்' தெரியாதாம். தற்போது பரபரப்பாக பத்திரிகைகளில் 'ஜெ'த்தனமான கேரக்டர் என்றதும் தான் அதிர்ந்து போனாராம். 'படையப்பா' மூலம் தனக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்ற கனவில் இப்படி மண்ணை போட்டுவிட்டாரே ரஜினி. ரஜினி ரசிகர்களிடமும் வில்லியாக, அம்மா அனுதாபிகள் முன்பும் வில்லியாகத் தோன்றினால் தனது எதிர்காலம் என்ன ஆவது என்று குமுறலில் இருக்கிறார் ரம்யா. தன் நிலையை அம்மாவிடமும் போன் போட்டு விளக்கி விட்டாராம்.

## சத்யராஜுக்கு புது வாழ்வு

படமே இல்லாதிருந்த சத்தியராஜுக்கு மளமளவென ஆறு படங்கள் புக்காகி உள்ளது. தான் ஒதுக்கப்பட்டு விட்டோமென்று வருத்தத்தில் இருந்த சத்தியராஜுக்கு இது புது தெம்பை கொடுத்துள்ளது. சம்பளம் கூட கறாராக பேசுவதில்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உஸ் ... காதோடு....

விவேக காமெடி நடிகர், ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார். படத்தின் இயக்குனரையும், நாயகியையும் பிணைத்து, 'தலைவா என்ன வசியம் பண்ணினே.... பார்ட்டி உன்னையே 'வாட்ச்' பண்ணுது. நீ ஸ்பொட்டுல இல்லாத போது உன்னைப் பத்தியே பேசுதுங்கிறேன். உங்ககிட்டே விழுந்துடுச்சி' என்று உசுப்பேற்றி விட்டு ஒரு தலையாய் 'லவ்' பண்ணுகிற அளவுக்கு கொண்டு போய் விடுகிறார். அப்படிதான் காதல் மன்ன இயக்குனர் கவிழ்ந்தாராம். காமெடியரின் சாயம் இப்போது வெளுக்கத் துவங்கியிருக்கிறது.

★ ★ ★

டைரக்டர் ஆகும் தாகத்தோடு திரியும் துணை இயக்குனர்களை வரவழைத்து கதை கேட்டு, அதை ஒரு அடிமாட்டு ரேட்டுக்கு வாங்கி பார்சல் செய்து கொண்டு, 'நாமிக்கா வாசிப்பாய்' இணை இயக்குனர் என்று டைட்டலில் போட்டு விட்டு, தனது புத்திரனை வைத்து தானே இயக்குதல் செய்து வருகிறார். இளம் தளபதி நடிகரின் தந்தை. இதனால் குழந்தைக்கு அப்பன் முறை கொண்டாட முடியாத அடிமைத் தந்தைகள் மாதிரி தூர நின்று தரிசித்து துக்கம் அனுபவிக்கின்றனர் புதுமுக இயக்குனர்கள்.

★ ★ ★

தி.நகர் ஹோட்டல் ஒன்றில் இரவு பத்து மணிக்கு மேல் வந்து வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் உ.பா., அருந்தி செல்கிறார் விசித்திரம். உ.பா., அருந்துவதற்கு முன் கையில் கொண்டு வரும் பொட்டல் பொடி ஒன்றை அதில் தூவி நன்றாக மிக்ஸ் பண்ணி அருந்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினி செய்திகள்!

'டூயட்' என்ற பெயரில் படத்தயாரிப்பு கம்பெனியை ஆரம்பித்துள்ளார் பிரகாஷ்ராஜ்.

தனியார் ரீ.வி ஒன்றுக்காக தொடர் ஒன்றை இயக்க உள்ளார் அகத்தியன்.

இப்போதெல்லாம் ஆன்மீகவாதியாக காணப்படுகிறார் ஸ்டன்ட் மாஸ்டர் சூப்பர் சுப்பராயன். சங்க கால இலக்கியங்களை அலசி பேசுவதில் தெளிவாக இருக்கிறார்.

நகைச்சுவை நடிகர் குமரிமுத்துவின் மகன் மெல்லிசைக் குழு ஒன்றை நடத்தி வந்தார். தேவாவின் இசையில் தேவாவுடன் சேர்ந்து ஒரு படத்தில் பாடகராக அறிமுகமாகிறார்.

கேரளாவில் ஷூட்டிங் என்றால், கேரளாவின் ஸ்பெஷல் இட்டமான நேந்திர பழம்தான் விரும்பிச் சாப்பிடுகிறார் மீனா.

நாகேஷ் சென்னை பாண்டி பஜாரில் உள்ள தனது நாகேஷ் தியேட்டரை விலை பேசிக் கொண்டிருக்கிறார். நல்ல 'ரேட்' வந்தால் விற்றுவிடும் முடிவில் இருக்கிறார்.


'ஜாக்குவார்' பயர் போர்ஸ் என்ற பெயரில் செக்யூரிட்டி பீரோ ஒன்றை அமைத்துள்ளார் ஸ்டன்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம்.

## ஜோடி எடுபடுமா?

மீனா - விஜய் ஜோடி இணையுமா? என்ற கேள்வி சில காலமாக பட உலகில் இருந்து வந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது. ரஜனி, கமல், விஜய்காந்த் என்று சீனியர் நடிகர்களுடன் நடித்த மீனா, இளம் விஜயுடன் ஜோடி சேர்ந்தால் எடுபடுமா என்ற கேள்வி இருந்தாலும், விஜயுடன் இணைந்து நடிக்க மீனா மிகவும் விரும்பினார். முக்கியமானவர்களிடம் சொல்லியும் வைத்திருந்தார். 'ப்ரியமுடன்' படத்தில் விஜய் கூட நடிக்க இருந்தவர் மீனா. கால்ஷீட் பிரச்சனை இருந்ததால் தவிர்க்கப்பட்டது. இப்போது 'மின்சார கண்ணா' படத்தில் மீனா - விஜய் ஜோடி இணைகிறது. படம் கிளிக் ஆகிவிட்டால் விஜய் - மீனா ஜோடி நாலைந்து படங்களில் தொடர்ந்து நடிக்கும் வாய்ப்பு இருக்கிறது. 'மின்சார கண்ணா'விற்காக விஜயுடன் நெருக்கமாக நடித்து இளம் நடிகர்களுக்கும் ஏற்ற ஜோடி என்ற பெயர் எடுக்க மீனா துடித்துக் கொண்டிருக்கிறார்.

## வெற்றிப்பட ஆசை

சர்வதேச அழகி பட்டம் பெற்று தமிழில் ரட்சகன் உட்பட பல படங்களில் நடித்தவரான அழகி சுஷ்மிதா சென்னிற்கு எப்படியாவது ஒரு வெற்றி படத்தில் நடிக்க ஆசை. இங்கிருந்து மும்பாய் போனார். நடித்த படங்கள் எல்லாம் அடிவாங்கி விடவே நடிக்க கூப்பிட ஆள் இல்லாமல் வீட்டிலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை. தன் லவ்வர் விக்ரம் பட் தனக்கு எப்படியும் அவர் தயாரிக்கும் படத்தில் வாய்ப்பு தந்து கைகொடுப்பார் என்று நம்பினார் சுஷ்மிதா. ஆனால் நட்புக்கு நீ, நடிப்புக்கு யாரோ என்று சுஷ்மிதாவை கைவிட்டுவிட்டு வேறு ஒரு நடிகையை விக்ரம் போட, வெறுத்துப் போய் விட்டாராம் நடிகை. அடுத்து சுஷ்மிதாவுடன் பேசுவதையும் பழகுவதையும் விட்டுவிட்ட விக்ரமை நினைத்து ஏங்குகிறாராம் சுஷ்மிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹாலிவுட் படம் ஒன்றில் தகப்பனாகவும், மகனாகவும் பிரசாந்த் நடிக்கிறார் அல்லவா? இது, கோடம்பாக்கத்துக்கு பெருமை என்றாலும், ஒரு நடிகரும், தந்தைக்குலமும், தாய்க்குலமும் வயிற்றெரிச்சலுடன் இருக்கின்றனர். 'பிர சாந்தை போல் நானும் ஹாலிவுட்டுல போய் கொடி (எந்த கட்சியுடையதோ?) கட்டிப் பறப்பேன் என்று, குலதெய்வம் + ஆத்தா மீது ஆணையிட்டு இருக்கிறார் அந்த நடிகர். ஹாலி வுட் தயாரிப்பாளர்களை எப்படி வலையில் சிக்கவைக்கலாம் என்று தந்தைக்குலம் யோசித்துக் கொண்டிருக்கிறார். இந்த நடிகர் யார் என்று சொல்லவில்லையே என்கிறீர்களா? தன்னை வருங்கால ரஜினி, வருங்கால தமிழக முதல்வர் என்றெல்லாம் உளறிக்கொண்டிருக்கும் நடிகர்தான் அவர்.

உச்சபட்சலோஹிப் -அரைகுறை மேலாடை என்று கவர்ச்சிரசம் சொட்ட சொட்ட பாடல் காட்சிகளில் திறமை காட்டும் ரோஜா, இப்போதெல்லாம் ஸ்ட்ரிக்ட் ஆர்டர் போட்டு விடுகிறார் கம்பெனிகளுக்கு! 'இந்த ஸ்டில் எடுத்ததும் நெகட்டிவ் களை என்னிடம் கொடுத்துடனும் நான் 'மார்க்' பண்ற ஸ்டில்லை அதுவும் அல் பத்தில் மட்டுமே ப்ளோ-அப் பண்ண னும். பத்திரிகைக்கார பயலுகளுக்கு கொடுத்திடப்படாது' என்று கட்டளை இடுகிறார். ஆனால், ரைட்ஸ் வாங் கிய நெகட்டிவ்களை பிரிண்ட் போட்டு தெலுங்கில், தான் நடத்தி வரும் 'சூப்பர் ஹிட்' பத்திரிகையில் ப்ளோ -அப்போட்டு துட்டுப் பார்த்து விடுகிறார். சூப்பர் ஹிட் பிசினஸ்.

## நிருபரான நடிகை

சினிமா நடிகையாகும் ஆசை இல்லாமல் ரீ.வி. நிருபராக இருந்தவர் ரிச்சா. நிருபராக இருந்த இவர் அழகையும் பேசும் பாணியையும் பார்த்து ரீ.வி. தொடர்களில் நடிக்கக் கூப்பிடவே நடிக்கப் போன வர் ரிச்சா. ரீ.வி. நடிகையான பிறகு ரிச்சாவின் அம்மா விற்கு டைரக்ட் செய்யும் ஆசை வந்துவிட்டது. நடிகை கதாநாயகி வீட்டில் இருக்க வெளியே தேடு வாரா? ரிச்சா, உயிரோடு உயிராக என்ற படத்தின் கதாநாயகி ஆனார். அஜித்குமாருடன் முடிந்த அள விற்கு கவர்ச்சி காட்டி, நடனம் ஆடி, நெருக்கமாக மகளை நடிக்கச் செய்தார் டைரக்டர் அம்மா. ஆனா லும் அஜித் ரிச்சா நடித்த அந்த உயிரோடு உயிராக படத்தில் சில காட்சிகளை ரீ.வியில் பார்க்க முடிந் ததே தவிர படம் வெளிவந்து, வந்த வேகத்தில் மறைந்ததால் ரிச்சா பல ரசிகர்களிடையே ரிச்(சோ) ஆகவில்லை. ரிச்சா சினிமா நடிப்பை தொடர்வதா, ரீ.வி. நடிப்பை தொடர்வதா அல்லது பழைய நிருபர் பணிக்கே திரும்பலாமா என்று யோசித்து வருகிறார்.

மிக தீவிரமான ஆன்மிகவாதியான தேவாவுக்கு பக்திப்படம் ஒன்றுக்கு இசையமைத்து 'சூப்பர் ஹிட்' பாடல்கள் தரவேண்டும் என்று தீராத ஆசை. அப்படி ஒரு படம் கொடுத்துவிட்டால், அதில் வரும் பாடல்கள் அனைத்தும் ஒரிஜினல் ட்யூன்களாக இருக்கும் என்கிறார் தேவா. அப்போ இதுவரை கொடுத்த பாடல்கள் எல்லாம்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞர் நீலாவணன் ஒரு மதிப்பீடு

கிழக்கிலங்கையின் தென்கோடியாகிய கல்முனைப் பிரதேசத்தில் பெரிய நீலாவணை எனும் கரையோரக் கிராமத்தில் 31.06.1931 இல் பிறந்து அங்கேயே வாழ்ந்து 11.01.1975 இல் மரணம் எய்திய கேசகப்பிள்ளை சின்னத்துரை எனும் முழுப்பெயரை இயற் பெயராகக் கொண்ட கவிஞர் நீலாவணன் நவீனகவிதையின் முன்னோடிகளுள் ஒருவர்.

1948 இல் எழுதத் தொடங்கிய நீலாவணனை அவர்.கே.சி.நீலாவணன் எனும் பெயரில் 'சுதந்திரன்' பத்திரிகையில் எழுதிய 'பிராயச்சித்தம்' சிறுகதையே இலக்கிய உலகிற்கு எழுத்தாளனாக அறிமுகப்படுத்திற்று. இவரது முதற்கவிதை 1948ம் ஆண்டிலே தினகரன் பாலர் கழகத்தில் பிரசுரமாகியிருந்தாலும் கூட கே.சி.நீலாவணன் எனும் புனைபெயரில் 1953இல் சுதந்திரனில் வெளிவந்த 'ஓடி வருவதென்னேரமோ?' எனும் கவிதை மூலமே கவிஞராக அறிமுகம் ஆனார். இவரது இறுதிக் கவிதை பொய்மை பொசுங்கிற்று என்பதாகும்.

கே.சி.நீலாவணன் -நீலவண்ணன் - நீலாவணன்-நீலா சின்னத்துரை - மானாபரணன் - இராமபாணம்- எழில்காந்தன் சின்னான் கவிராயர்- எறிகுண்டுக் கவிராயர் - கொழுவு துறட்டி - அம்மாச்சி ஆறுமுகம்- வேதாந்தன் -சங்குசக்கரன் எனும் புனைபெயர்களில் கவிதை, சிறுகதை, உருவகக்கதை, பா நாடகம், காவியம், கட்டுரை, விருத்தாந்த சித்திரம் ஆகிய வடிவங்களில் ஆக்கங்களைப் படைத்தாரெனினும் கவிதைத் துறையே அவரைப் புகழ்பூக்க வைத்தது என்பதாலும், தனது ஊரான பெரிய நீலாவணை மீது கொண்ட பற்றினால் சூடிக்கொண்ட நீலாவணன் எனும் பெயரே நிலைத்துவிட்டது என்பதாலும் எழுத்துலகில் கவிஞர் நீலாவணன் என்றே தடம் பதித்தார்.

1960 களில் ஈழத்து இலக்கிய முகாமில் முற்போக்கு என்றும் பிற்போக்கு என்றும் சொற்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தனது இலக்கியக் கொள்கை நற்போக்கு என்று நாடிய 'அணிசேரா'த் தனித்துவக் கவிஞன் நீலாவணன்.

நீலாவணன் கவிதைகள் ஓசைநயம் துள்ளும் சந்தக் கவிதைகளாகும். செவிக்கு இன்பம்தரும் லயமும், தாளமும் அமைந்த சந்தக் கவிதைகளை அவர் ஆக்கினார். நள

**செங்கதிரோன்**

வெண்பா பாடிய புலவன் புகழேந்தியின் பெயர் தமிழுலகில் 'வெண்பாவிற் புகழேந்தி' என்று நிலைத்துவிட்டது போல் - ஈழத்து இலக்கிய உலகில் 'வெண்பாவிற் பெரியதம்பி' என புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை பேர் பெற்றது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சந்தக்கவிதைக்கு நீலாவணன்' எனும் சங்கதியும் எழுத்துலகில் சங்கை பெற்று நின்று நிலைக்கும். கவிதையின் பொருளோடு ஒட்டிய சந்தம் நீலா வணன் கவிதைகளுக்குத் தனிச்சிறப்பு. அவர் கையாளும் உவமைகளும், உருவகங்களும், குறி யீடுகளும், தற்குறிப்பேற்றமும் அவரின் கவிதை களுக்கு உயிர்கொடுப்பன. தமிழ்நாட்டுக் கவி ஞர்களிலே உவமைகளைச் சிறப்பாகக் கையாள் வதிலே கவிஞர் சுரதாவைக் குறிப்பிடுவர். உவ மைக் கவிஞர் சுரதா எனும் அடைமொழியோடு தான் அவர் அழைக்கப்படுகிறார். ஈழத்தில் அது கவிஞர் நீலாவணனுக்கே பொருந்தும்.

இயற்கை நிகழ்வுகளையும், சாதாரணமாக நடைபெறும் சம்பவங்களையும் மனிதவாழ்வின் படிமங்களையும், குறியீடுகளையும் காட்டுகின்ற கம்பனைப் போன்ற கவித்துவமும் நீலாவணன் கவிதைகளிலே காணப்படுகின்றது. கம்பன் தன் கவிதைகளிலே கையாண்ட தற்குறிப்பேற்ற அணி நீலாவணன் கவிதைகளிலும் அமைந்து தனியான சிறப்பைக் கொடுக்கின்றது.

இயற்கை, காதல், பெண்கள் பற்றி அழகியல் கவிதைகளும், தமிழர்களின் உரிமைப் போராட் டம் பற்றிய தமிழுணர்வுக் கவிதைகளும் ஆக்கிய நீலாவணன் சாதி வேறுபாடு, சீதனம், சமுதாயத் தில் நிலவும் ஊழல்கள், போலித்தனங்கள் என்ப வற்றைச் சாடியும் கவிதைகள் படைத்துள்ளார். அவரது 'கூத்து' -'பாய்விரித்து வையுங்கள்' - 'வெளுத்துக்கட்டு' (1967) போலித்தனங்கள் என்ற கவிதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

**"உழைப்பவர்தம் உலகமிது போடியாரே**
**உம் போல உட்கார்ந்து ஊரை மேய்க்கும்**
**பிழைப்புடையோர் பெரியோராய் வாழதாமும்**
**பேசுதற்கும் உரிமையற்ற புழுக்கையாமோ?**
**புழுக்களல்லர் தொழிலாளர் கவனம் நாளை**
**புரட்சித் தீ உம் வாயைப் பொசுக்கித் தின்னும்"**

இக் கவிதையில் நிலப்பிரபுத்துவ வர்க்கத் திற்கு பாட்டாளி வர்க்கத்தின் சார்பாக நின்று எச்சரிக்கை செய்யும் நீலாவணன் தனது 'பாய் விரிந்து வையுங்கள்' (1959) கவிதையில் சாதி வேறுபாட்டையும், சமுதாயப் போலிக் கௌர வத்தையும் 'நக்கல்' அடிக்கிறார்.

'கடவுளே' (1964) என்ற கவிதையில் கோயில்பூசகரின் திரைமறைவுத் திருவிளை யாடல்களையும், 'உறவு' (1956) எனும் கவிதையில் போலியன்பு காட்டும் சொந்தக்காரர்களை யும், 'போக்கு' (1964) எனும் கவிதையில் சமுதாயத்தில் நில வும் வரட்டுச்சம்பிரதாயங்களை யும் வெளிச்சத்துக் கொண்டு வருகிறார். 'பாவம் வாத்தியார்' எனும் கவிதை இன்றும் சிலா கித்துப் பேசப்படும் அவரது கவி தைகளில் ஒன்று.

வேகமும், தீவிரமும், முன் கோபமும் இவரது இயல்பான குணங்களெனினும் மனித நேயப்பண்பும், நகைச்சுவை உணர்வும் நீலாவணனிடம் நிறைந்திருந்தன. 'ஒளித்திரு நாள்' (1959) - 'இன்றுனக்குச் சம் பளமா?' (1959) ஆகிய அவரது கவிதைகள் அங்கதச்சுவை மிகுந் தவை.

ஆன்மீக -தத்துவார்த்தக் கவிதைகளை நீலாவணன் அதிகம் ஆக்கியிருக்காவிட்டா லும் கூட 'துயில்' (1964) எனும் அவர் கவிதையில் மரணத்தை மகிழ்ச்சியோடு எதிர்கொள்கி றார். நீலாவணன் வாழ்ந்த மனித நேயம் நிறைந்த வாழ்க்கை இக் கவிதையில் வெளிப்படுகிறது.

ஓர் இலக்கியக்காரனுடைய வாழ்க்கையில் அவனது குடும் பம்சார் சோலிகள் அவனது கற் பனா ஊற்றிற்கு எவ்வாறு ஊறு செய்கின்றன என்பதை அவரது 'முருங்கைக்காய்' (1965) கவிதை மொழிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் வழங்கும் கிராமியச் சொற்களை நீலாவணன் தன் கவிதைகளில் நிறையக் கையாண்டுள்ளார். மட்டக்களப்பு மக்களின் வாழ்வு முறை, சடங்குகள், பழக்கவழக்கங்களை நீலாவணன் தன் கவிதைகள் வாயிலாக பதிவுசெய்து கொண்ட அளவுக்கு வேறு எந்தக் கவிஞனும் இதுவரை செய்யவில்லை. மட்டக்களப்பு வாழ்க்கை முறை, சடங்குகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் குறித்து ஆய்வு செய்யவிழையும் சமூகவியலாளர்களுக்கு நீலாவணன் கவிதைகள் நிறைய தகவல்களை வழங்கக் கூடியவை. 'போக்கு' *(1964)* எனும் கவிதையில் மட்டக்களப்பு ஊர் ஒன்றிலே நடைபெறும் பார்வதிப் பாட்டியின் மரணச் சடங்கு இடம் பெறுகிறது. மரணச் சடங்கொன்றின் கிரியைகள் இக்கவிதையில் சொல்லப்படுகின்றன. பேச்சோசைப் பாங்கும், கிராமியச் சொற்களும் நீலாவணன் கவிதைகளுக்கு மட்டக்களப்பின் மண்வாசனையூட்டுகின்றன. அவர் படைத்த 'வேளாண்மை' காவியத்தில் நீலாவணனின் கவித்துவம் நிரம்பி வழிகின்றது. இக்காவியத்தின் ஒவ்வொரு வரிகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

கவிஞர் நீலாவணன் மட்டக்களப்பு மண்ணின் வாழ்க்கையை இலக்கியமாக்க எத்தனித்தார். அதன் விளைவே 'வேளாண்மை'க் காவியம். இக்காவியத்தை நிறைவு செய்து அதன் முற்றிய முழு விளைச்சலையும் காணுமுன்பே 'கதிர்'ப் பருவத்திலேயே அவரின் உயிரைக் காலன் கவர்ந்து சென்று விட்டான். 'குடலை' 'கதிர்' ஆகிய இருபகுதிகளையே அவர் எழுதி முடித்திருந்தார். 'காய்', 'பழம்' பகுதிகளை எழுதி முடிப்பதற்கு முன்பே அவர் மறைந்துவிட்டது எமது துரதிஸ்டமே.

(தொடரும்...)



*கடந்த ஆண்டு காரைதீவு தீபாவளி இன்னிசை நிகழ்ச்சியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் கண்ணொன்றை இழந்த ஸ்ரீதர் பிச்சையப்பா ''இதற்குத்தானே ஆசைப்பட்டாய்'' எனும் நாடகத்தை எழுதி டவர் மண்டபத்தில் நடித்தார். அந் நிகழ்வில் கலைஞர். கே.நாகேந்திரனால் பணமுடிச்சு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.*

*தகவல் எம்.ஸாலிஹ் அஸீம், புத்தளம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 4. சாவித்திரியின் அலறல்

சாவித்திரிக்குச் சாபங் கொடுத்த குரல் எந்த வீட்டிலிருந்து வந்ததோ, அந்த வீடு நெடுங்கரை அக்கிரகாரத்திலேயே பெரிய வீடாய்க் காணப் பட்டது. அதுதான் சம்புசாஸ்திரியின் வீடு என் பதை நாம் சுலபமாய் ஊகிக்கலாம்.

அந்த வீட்டின் முன் வாசற்படிக்கு மேலே 'ஸ்ரீராமஜயம்' என்றும் 'நல்வரவு' என்றும் எழுதி யிருப்பதைப் பார்த்ததும், நமக்கும் உள்ளே போக லாம் என்ற தைரியம் ஏற்படுகிறது. வீட்டுக்குள் ளிருந்து வரும் புஷ்பங்களின் நறுமணமும் நம் மைக் கவர்ந்து இழுக்கிறது.

உள்ளே சென்றதும், விஸ்தாரமான கூடத் தைப் பார்க்கிறோம். கூடத்தின் சுவரில் படங்கள் மாட்டப் பட்டிருக்கின்றன. ஒரு படத்தில், ஸ்ரீராமன் மகுடாபி ஷேகம் செய்து கொள்கிறான். இன்னொரு படத்தில் குழந்தை கிருஷ்ணன் கட்டைவிரலை ருசி பார்த்துக் கொண்டிருக்கிறான். மற்றொரு படத்தில் வேணு கோபாலன் பசுமாட்டின் மீது சாய்ந்து கொண்டு புல்லாங் குழல் வாசிக்கிறான். வேறொரு படத்தில் சீதை மாயமானைப் பிடித்துத் தரும்படி இராமனைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். இன்னொரு படத்தில் ஸ்ரீ சுப்பிர மண்ய சுவாமி மயில் வாகனத்தில் வீற்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நாம் பார்த்துக் கொண்டிருக்கையில், இனிமை ததும்பும் பெண் குரலில், செஞ்சுருட்டி ராகத்தில்,

'எப்போ வருவாரோ எந்தன் -கலிதீர

என்ற நந்தன் சரித்திரக் கீர்த்தனை கேட்கிறது. பாட்டு வந்த பக்கம் திரும்பிப் பார்த்தால், கூடத்தின் ஒரு பக்கத்திலுள்ள பூஜை அறையில் ஓர் இளம்பெண் உட்கார்ந்து பூத்தொடுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அந்த அறையின் சுவரோரத்தில் அமைந்த பூஜை மண்டபத்தில் பித்தளைப் பீடம் ஒன்றில் தேவியின் விக்கிரகம் இருக்கிறது. பின்னால் சில படங்களும் இருக்கின்றன. மண்டபத்துக்கு எதிரில் அழகாக இழை கோலம் போட்டிருக்கிறது. குத்துவிளக்கு எரிகிறது.

பாடிக் கொண்டிருந்த பெண்ணுக்கெதிரில் இரண்டு தாம்பாளங்கள் இருக்கின்றன. ஒன்றில் உதிரிப்பூக்களும் இன்னொன்றில் தொடுத்த பூமாலைகளும் இருக்கின்றன. அப்போது அந்தக் குழந்தை -ஆம், குழந்தையென்றுதான் சொல்ல வேண்டும்; வயது பதின்மூன்று பதினாலுக்குள் தான் இருக்கும். ஊசியும் நூலும் வைத்துக் கொண்டு சம்பங்கிப் பூக்களை நீளவாக்கில் கோத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய பால் வடியும் முகத்தில் புன்னகை பூத்திருந்தது.

பின்கட்டிலிருந்து, முன்னமேயே நாம் கேட்ட ஸ்திரீயின் குரல், ''அடியே சாவித்திரி! நீ நாசமாய்ப் போக! இப்போ உடனே எழுந்து வர்றயா இல்லையா?'' என்று உரத்துக் கத்தியது கேட்டது.

''நான் நாசமாய்ப் போய்ட்டா அப்புறம் நீ சௌக்யமா யிருப்பாயா, சித்தி?'' என்றாள் சாவித்திரி. இப்படி அவள் மெதுவான குரலில்தான் சொன்னாள். ஆனாலும் அது பின்கட்டுக்கு எட்டியிருக்க வேண்டும். ஏனெனில், அடுத்த கணம், உள்ளே இன்னொரு வயதான ஸ்திரீயின் குரல், ''வாயைப் பார்த்தயோல்லியோ, வாயை!'' என்று சொல்வது கேட்டது.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம், ''என்ன சொன்னே? என்று கேட்டுக் கொண்டு ரௌத்ராகாரமாக ஒரு ஸ்திரீ சமையலுள்ளிருந்து வந்தாள். அவளுக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். அவளுக்குப் பின்னால் முதுமைப் பிராயத்து ஸ்திரீ ஒருத்தியும் வந்தாள்.

சாவித்திரி சாந்தமாக ''சித்தி! நான் ஒன்றும் சொல்லிவிடவில்லையே! இப்ப, ஊரிலிருந்து அப்பா வந்துடுவாளே; வந்ததும் பூஜைக்கு எல்லாம் தயாராயிருக்க வேண்டாமா? அதுக்கோசரம் இந்தப் பூவை ஒரு நிமிஷத்திலே தொடுத்து வைச்சுட்டு வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீ கோவிச்சுண்டு நூறு கட்டேலே போறதுக்கும், ஆயிரம் நாசமாப் போறதுக்கும் இழுத்துட்டயே'' என்றாள்.

''ஆமாண்டி, ஆமாம்! உனக்கு நாலு வயதிலேருந்து வேளா வேளைக்குச் சாதம் போட்டு, தலை பின்னி, எண்ணெய் தேச்சு விட்டு, எல்லா எழவும் எடுக்கிறதுக்கு எனக்குப் பாத்தியதை உண்டு; ஒரு வார்த்தை சொல்றதுக்கு மட்டும் பாத்தியதை இல்லை! ஆமானே?'' என்றாள் மங்களம்.

''இப்ப என்னடி ஆச்சு, பெண்ணே! இன்னும் கல்யாணம், கார்த்தி, தீபாவளி, சங்கராந்தி, திரட்சி, சீமந்தம் எவ்வளவோ பாக்கி இருக்கே! அவ்வளவு எழவும் நீ தானே எடுத்தாகணும்?'' என்றாள் மங்களத்தின் தாயார்.

''பாட்டி! எனக்குக் கல்யாணமும் வேண்டாம். கழுத்தறுப்பும் வேண்டாம். சித்திக்கு ஏற்கனவே வையத் தெரியாது! நீங்க வேறே கத்துக் கொடுங்கோ!'' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட பாட்டி! ''பார்த்தாயா? பார்த்தாயா? நான் கத்துக் கொடுக்கிறேனாமே! முளைச்சு முளையாகலே? அதுக்குள்ளே இவ்வளவு அகமா? இந்த வீட்டிலே நான் என்னத்துக்கடி இருக்கேன் இனிமேல்? இதோ போறேன்! நீயாச்சு, உன் பொண்ணாச்சு'' என்றாள்.

அதற்கு மங்களம் ''நன்னாயிருக்கே? நீ என்னத்துக்குப் போறது? நாளைக்கு வீட்டைவிட்டு ஓடப்போற நாய்க்காக நீ ஏன் போகணும்? பேசாமே இரு. நானும் போனால் போறது, போனால் போறது என்று விட்டு விட்டுத்தான் இப்படிக் கட்டை துளுத்துப் போச்சு. இதோ கரண்டியைக் காய்ச்சிண்டு வந்து இவ முதுகில் சூடு போடாது போனால், என் பேர் மங்களமில்லை'' என்று சொல்லிவிட்டு, அவசரமாகச் சமையற் கட்டுக்குள் போனாள். அவளைத் தொடர்ந்து பாட்டியும் சென்றாள்.

அவர்கள் போன பிறகு, சாவித்திரி சற்று நேரம் மேலே பார்த்த வண்ணம் மௌனமாயிருந்தாள். பிறகு, குனிந்து பூவைக் கோக்க ஆரம்பித்தாள். அவள் கண்ணில் துளித்திருந்த ஜலம் முத்து முத்தாகப் பூக்களின் மீது உதிர்ந்தது. கண்ணீரை நிறுத்துவதற்காகவோ என்னவோ அவள் கண்ணை இறுக மூடிக்கொண்டு சற்று நேரம் இருந்தாள். கூடத்தில் காலடிச் சத்தத்தைக் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தாள்.

மங்களம் சமையலறையிலிருந்து கையில் இரும்புக் கரண்டியுடன் வருவது தெரிந்தது. அந்த இருப்புக் கரண்டியின் அடிப்பாகம் பழுக்கக் காய்ந்து அதிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.

''ஐயோ!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு சாவித்திரி எழுந்தாள். பூஜை அறையிலிருந்து வெளியே முற்றத்தைப் பார்க்க ஓடினாள். மங்களமும் அவளைத் தொடர்ந்து போனாள். முற்றத்திலிருந்து தாழ்வாரத்தில் பாய்ந்து ஏறினாள் சாவித்திரி. மங்களம் அப்படியும் விடவில்லை. அவள் ரொம்ப நெருங்கி வந்து விடவே, சாவித்திரி ரேழிக் கதவைத் திறந்து கொண்டு ரேழியில் ஓடினாள்.

அதே சமயத்தில், வாசற்பக்கத்திலிருந்து வாசற்கதவும் திறந்தது.

சம்பு சாஸ்திரி உள்ளே வந்தார்!

## 5. தந்தையும் மகளும்

சம்பு சாஸ்திரி அவ்வாறு உள்ளே பிரவேசித்ததும், சாவித்திரி, மங்களம் இரண்டு பேருமே ஒருகணம் திகைத்து நின்றுவிட்டார்கள்.

திகைப்பு நீங்கியதும், சாவித்திரி, ''அப்பா!'' என்று அலறிக் கொண்டு ஓடிப்போய்ச் சம்பு சாஸ்திரியைக் கட்டிக் கொண்டாள்.

சாஸ்திரி, ''மங்களம்!'' என்று சொல்லி அவளை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தார்.

மங்களம் ஒன்றும் பதில் பேசாமல் திரும்பி விடுவிடென்று சமையலறைக்குள் சென்றாள்.

சாஸ்திரி சாவித்திரியைத் தழுவியபடியே அழைத்துக் கொண்டு உள்ளே வந்து தாழ்வாரத்தில் போட்டிருந்த விசுபலகையில் உட்கார்ந்தார். சாவித்திரியையும் தம் அருகில் உட்கார வைத்தார். குழந்தை அவருடைய மடியில் முகத்தை வைத்துப் படுத்தபடி விசிக்கத் தொடங்கினாள்.

சமையலுள்ளில் சற்று உரத்த குரலில், சம்பு சாஸ்திரியின் காதில் விழும்படியாகப் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

''அடி பெண்ணே! நான் அப்பவே சொன்னேனோ, இல்லையோ! நீ விளையாட்டுக்காக ஒரு காரியத்தைச் செய்யப் போக, அவர் நிஜந்தான்னு நினைச்சுண்டாலும் நினைச்சுக்குவர். வேண்டாம்னு சொன்னாக் கேட்டாத்தானே?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நினைச்சுண்டா நினைச்சுக்கட்டுமே! கல்யாணம் ஆகப்போற பொண்ணைக் கரண்டியைக் காய்ச்சிச் சுடறதுக்கு இங்கே யாருக்காவது பைத்தியம் பிடிச்சிருக்கா, என்ன?''

''இல்லேடி, கரைக்கறவர் கரைச்சாக் கல்லுங் கரையும் என்கிறாப்பலே- இந்தப் பொண்ணு இல்லாத்தையும் பொல்லாத்தையும் ஏற்கனவே சொல்லி வைச்சுண்டிருக்காளே!''

''வேணும்னா, இனிமே அவர் வெளியிலே போற போது, பொண்ணையுங் கூட அழைச்சுண்டு போகட்டும். அவ ஹிம்சையை இத்தனை நாளும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாச்சு; இனிமேல் என்னால் பொறுக்க முடியாது''

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சம்பு சாஸ்திரி, சாந்தமான குரலில், ''குழந்தை! சித்திக்குக் கோபமூட்டறதுக்கு நீ என்ன பண்ணினே, அம்மா!'' என்று கேட்டார்.

''சாவித்திரி, விசித்துக் கொண்டே, 'நான் ஒண்ணும் பண்ணலை, அப்பா! பூஜைக்குப் பூத் தொடுத்திண்டிருந்தேன். சித்தி, கிணத்துலேயிருந்து ஜலங் கொண்டு வருவதற்குக் கூப்பிட்டாள். காலமேயிருந்து, இருபது குடம் கொண்டு வந்து கொட்டிவிட்டேன், அப்பா! ''இதோ பூவைத் தொடுத்து வைச்சுட்டு வர்றேன்னு சொன்னேன். அதுக்காகக் கரண்டியைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சி எடுத்துண்டு சூடறதற்கு வந்தா அப்பா!'' என்று சொல்லி, பலமாக அழத் தொடங்கினாள்.

சம்பு சாஸ்திரிக்கு அப்போது பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. பத்து வருஷத்துக்கு முன்னால் நடந்ததென்றாலும் நேற்றுத்தான் நடந்ததுபோல் அச்சம்பவம் அவர் மனக்கண் முன்னால் தோன்றியது.

சாஸ்திரி மாட்டு கொட்டகையில் இருந்தார். புதுச் சத்திரம் சந்தையிலிருந்து புதிதாக வாங்கிக் கொண்டு வந்திருந்த உயர்ந்த ஜாதி 'உசுலாயத்து' மாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். ''ரூபாய் இருநூத்தைம்பது கொடுத்தாலும் பொறும், அப்பா!'' என்று நல்லானைப் பார்த்துச் சொன்னார். அப்போது, தண்ணீரில் ஏதோ விழுந்தது போல் ஒரு சிறு சப்தம் எங்கிருந்தோ கேட்டது, சின்ன சப்தந்தான்; ஆனாலும் அது ஏன் அவருடைய இருதயத்தை அவ்வாறு பேதித்தது? அதன் காரணம் அடுத்த வினாடியே தெரிய வந்தது. ''ஐயோ! குழந்தை கிணத்துலே விழுந்துடுத்தே!'' என்றது ஒரு தீனமான குரல். அது அவருடைய அத்தைக் கிழவியின் குரல்.

அத்தையின் குரலுக்கு எதிரொலியே போல், சம்பு சாஸ்திரியும், ''ஐயோ!'' என்றார். உடனே, விரைந்து ஓடவேண்டுமென்று அவர் மனம் துடித்தது! ஆனால், அந்தச் சமயத்தில் அவருடைய கால்கள் சொன்னபடி கேட்டால்தானே? இரண்டு அடி வைப்பதற்கு முன்னால் தடுமாறிக் கீழே விழுந்தார்.

அதிர்ஷ்டவசமாக, அச்சமயம் இன்னொரு மனிதனுக்குக் கால்கள் சொன்னபடி கேட்டன. தடுமாறி விழுந்த சம்பு சாஸ்திரியைத் திரும்பிக்கூடப் பாராமல் நல்லான் மின்னலைப் போல் பாய்ந்து சென்றான். மூன்று கொல்லைக் கட்டுகளையும், வேலிகள் செடிகள் உள்படத் தாவிக் கொண்டு சென்று, கண்ணை மூடித் திறக்கும் நேரத்தில் சாஸ்திரியாரின் வீட்டுக் கொல்லைக் கிணற்றை அடைந்தான். கிணற்றைச் சுற்றி ஏழெட்டுப் பேர் நின்று கொண்டு குய்யோ முறையோ என்று கத்திக் கொண்டிருந்தார்கள். ஒருவர் தாம்புக் கயிற்றை எடுத்துக் கிழே விட முயற்சித்தார். இன்னொருவர் ஏற்ற மரத்தை இழுத்து அமுக்க முயன்று கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லான் அவர்களையெல்லாம் ஒரே தள்ளில் விலக்கித் தள்ளிவிட்டுக் கிணற்றுக்குள் பரபர வென்று இறங்கினான்.

இதெல்லாம் சாஸ்திரிக்கு அப்போது தெரியாது. பிற்பாடு மற்றவர்கள் சொல்லித்தான் தெரிந்தது. விழுந்தவர் எழுந்திருந்து நெஞ்சு படக் படக் என்று அடித்துக் கொள்ள, கால் கைகள் நடுங்க, தடுமாற்றத்துடன் ஓடிச்சென்று கிணற்றங் கரையை அடைந்த சமயம், நல்லான் கிணற்றுக் குள்ளிலிருந்து குழந்தை சாவித்திரிகையத் தோளில் போட்டுக் கொண்டு கரையேறிக் கொண்டிருந்தான். சாஸ்திரியைப் பார்த்ததும், ''சாமி! பயப்படாதீங்க! குழந்தைக்கு அபாயம் இல்லீங்க'' என்றான். அவ்வளவுதான்; சாஸ்திரியார் ஸ்மரணை இழந்து கீழே விழுந்தார்.

அன்று சாயங்காலம் சாஸ்திரியின் அத்தை, அவரிடம் சொன்னாள்: ''அப்பா! எத்தனையோ நாளாய் நானும் சொல்லிண்டு வந்தேன். நீ கேட்கவில்லை. எனக்கோ தள்ளாமை அதிகமாயிடுத்து; நாளுக்கு நாள் கண் தெரியலை. இந்தக் குழந்தையைக் காப்பாத்தறதற்கு இனிமேல் என்னை நம்பாதே. நான் சொல்றதைக் கேளு. கொஞ்சம் வயசான பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொள்ளு. உனக்கென்ன அப்படி பிரமாதமாய் வயசாயிடுத்து? ஐம்பது வயசானவள் எல்லாம் கல்யாணம் பண்ணிக்கலையா? உனக்காக இல்லாமற் போனாலும், இந்தத் தாயில்லாப் பெண்ணை காப்பத்தறதுக்காவது கல்யாணம் பண்ணிக்கொள்.''

இந்தமாதிரி இதற்கு முன்னாலும் அத்தை எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறாள், அப்போதெல்லாம் சாஸ்திரி அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே போய்விடுவார். அல்லது ''அத்தை!'' வேறே ஏதாவது பேச்சு இருந்தால் பேசேன்!'' என்பார். ஆனால் இன்று எழுந்து போகவும் இல்லை; மறுத்துப் பேசவும் இல்லை. மௌனமாயிருந்தார்.

சாஸ்திரியின் முதல் மனைவி பாக்கியம், சாவித்திரி கைக் குழந்தையாயிருக்கும் போதே வைசூரி போட்டு இறந்து போனாள். சாஸ்திரியின் வாழ்க்கையில் அவருடைய தங்கை சம்பந்தமான ஒரு துக்க சம்பவம் ஏற்கனவே நிகழ்ந்திருந்தது. அவருடைய உயிருக்குயிராயிருந்த மனைவியும் இறந்துவிடவே, சாஸ்திரிக்கு வாழ்விலேயே விரக்தி ஏற்பட்டது. அவருடைய மனமெல்லாம் பகவத் பக்தியில் ஈடுபட்டது. இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி அவர் நினைக்கவே யில்லை. உலகில் பந்தம் அதிகமாக ஆக, துக்கமும் அதிகம் என்பதை உணர்ந்த சாஸ்திரி இது விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருந்தார். எவ்வளவோ பேர் எத்தனையோ விதமாகச் சொல்லியும் அவர் செவி கொடுக்கவில்லை. ஆனால், இன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு அவருடைய மனம் மாறிவிட்டது. தாயில்லாக் குழந்தையான சாவித்திரியைப் பார்த்துக் கொள்ள ஒரு தாய் அவசியந்தான் என்று அவருக்குப் பட்டது. 'அத்தையின் வாக்கு ஒருவேளை அம்பிகையின் வாக்காயிருக்கலாம்' என்று தோன்றிற்று. அந்த வருஷத்திலேயே அவர் மங்களத்தை இரண்டாம் தாரமாகக் மணந்து கொண்டார்.

மேற்சொன்னது அவ்வளவும் சம்பு சாஸ்திரிக்கு இப்போது தெளிவாக ஞாபகத்தில் வந்தது. தாம் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டதன் நோக்கம் என்ன என்பதையும் அந்த நோக்கம் எவ்வளவு அழகாக நிறைவேறியிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்த போது அவரை அறியாமல் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பில் அதில் கலந்திருந்த துக்கமும், விசித்துக் கொண்டிருந்த சாவித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியுமொரு தெரிவு

கல்முனை வலயத்தில் ஆசிரிய ஆலோசகர்கள் 4 பாடங்களுக்குத் தேவையாக விருந்தது. ஆரம்பக்கல்வி, தமிழ், ஆரம்ப ஆங்கிலம், உடற்கல்வி என்று இவைகளை நிரப்புமாறு கல்விச் செயலாளர் கட்டளையிட்டுள்ளார். அதற்கமைவாக விண்ணப்பம் கோரப்பட்டது. ஆனால் ஆரம்பக்கல்விப் பாடத்திற்கு விண்ணப்பம் கோரப்பட வில்லை. என்னே ஆச்சரியம் மறுநாள் சுடச் சுட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் நியமிக்கப்பட்டார். எந்த நேர்முகப் பரீட்சையும் இல்லை. மின்னாமல் முழங்காமல் இந்நியமனம் நடைபெற்றிருக்கிறது. யாரது சிபார்சு? ஆனால் ஏனைய 3 பாடங் களுக்கு நேர்முகப் பரீட்சைகளும் நடந்துள்ளது. அதிலும் ஏகப்பட்ட சிபார்சுகள், கொடுக்கல் வாங்கல்களாம்.

இந்த ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் தெரிவானவழி என்ன? கல்வி உலகம் அறிய விரும்புகிறது.

### எங்கே வாக்குறுதி

புதிய வலயஅமைப்பு முறை உருவாகும் காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு சிறப்பான ஒழுங்குமுறை பின்பற்றப்படும் என அமைச்சர் அஷ்ரப் கூறியிருந்தார். அதாவது ஒவ்வொரு வலயத்திற்கு ஒரு முஸ்லிம் வலயக் கல்விப் பணிப்பாள ரென்றால், மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் தமிழராக இருக்க வேண்டும் என்று கூறினார். அல்லது மாறி இருக்கும் என வாயொழுக கூறினார். சோரம் போகும் தமிழர் சிலரும் அவரது கூற்றை நம்பிவிட்டனர். நடந்ததென்ன?

இன்று எந்த வலயத்திலும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டதாக தெரியவில்லை. கல்முனையிலோ, அக்கரைப்பற்றிலோ சம்மாந்துறையிலோ எங்கும் இல்லை.

எல்லாவற்றிக்கும் மேலாக சம்மாந்துறையில் போடப்பட்ட வ.க.பணிப்பாளர், மற்றும் 4 பி.க.பணிப்பாளர்கள் அனைவருமே ஓரினத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். வாக்குறுதி அம்போ!

திரியைத் திடுக்கிடச் செய்தன. சாவித்திரி விசித்தலை நிறுத்தி, நீர் ததும்பிய கண் களுடன் தகப்பனாரின் முகத்தை நோக் கினாள். அதைப் பார்த்த சாஸ்திரி அவ ளுடைய முதுகைத் தடவிக்கொண்டே, ''குழந்தை! நீ வருத்தப்படாதே, அம்மா உன் கஷ்டங்களுக்கு முடிவு வந்து விட் டது. கல்யாணம் நிச்சயம் பண்ணிண்டு வந்திருக்கேன். மாப்பிள்ளைக்கு ஸ்ரீதரன் என்று பெயர். பி.ஏ.பாஸ் பண்ணியிருக் கான். கல்யாணம் ஆனதும் சீக்கிரத்தி லேயே உன்னை அழைச்சுண்டு போய் விடுவார்கள், அம்மா!'' என்று கூறிய போது அவருடைய கண்களிலும் ஜலம் ததும்பத் தொடங்கியது.

ஆனால், சாவித்திரியின் கண்களிலிரு ந்து கண்ணீர் என்ன ஆயிற்று? திடீரென்று எப்படி மாயமாய் மறைந்தது? அவளு டைய முகம் ஒரு கண நேரத்தில் இப்படி மலர்ந்து விட்டதே! என்ன அதிசயம்!

''அது இருக்கட்டும், அப்பா! எத் தனை நாழியாச்சு, நீங்க இன்னும் பட் டினியாயிருக்கயளே! சுருக்க ஸ்நானம் பண்ணிவிட்டு வாங்கோ! நான் அதுக் குள்ளே பூஜைக்கு எல்லாம் எடுத்து வைக் கிறேன்'' என்றாள்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழியாளின் பதில்கள்

**எஸ்.வாசுதேவன்**
**தோப்பூர்**

என் காதலி தினமும் பூக்கள் கேட்கின்றாள், கொடுக்கலாமா?

ஏன் தலைக்கா? உங்களது காதுக்கா? எதுக்கும் யோசியுங்கள்.

**வி.இராசகோபாலன்**
**மல்வத்தை**

அரசியல்வாதிகளின் இரகசியங்கள் அம்பலமாவது எப்போது?

ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குக் குடிபுகும் போது!

**எஸ்.சிவலிங்கம்**
**மானிப்பாய்**

பத்திரிகைகள் சொன்னால் மக்கள் கேட்டுக்கொள்கின்றார்களா?

வெட்ட வெளிச்சமாக்குவது பத்திரிகைகள் தானே?

**எஸ்.சத்தியசீலன்**
**திருமலை**

தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்கிறவர்களைப் பற்றி....?

நம் நாட்டிலே மலிந்துள்ளதே! தங்கள் தோட்டத்து மலர்களை மாலையாக்கி அணிந்து கொள்வதில் மகிழ்ச்சி என்ன இருக்கிறது? வீட்டுக்கொரு பூ சேர்த்து மாலையாகி கழுத்துக்கு வரவேண்டும்.

**ப.கார்த்திக்**
**கொலன்னாவ**

தோல்வியே வெற்றிக்கு முதற்படி - இதை நம்புகிறீர்களா?

சொல்லக் கேள்வி

**எஸ்.சந்திரன்**
**வீரமுனை**

வடக்கில் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு அழைக்கிறார்களே?

அரசாங்கம் வேடிக்கை காட்டுகின்றது!

**மு.மணிமாறன்**
**தம்பலகாமம்**

வாசுதேவ எதிர்க்கட்சி ஆசனம் தாவியது ஏன்?

ஆளுங் கட்சியைப் புரிந்து கொண்டது 4 1/2 வருடத்துக்குப் பின்னர் தானே!

**ஆர்.அரவிந்தன்**
**நவாலி**

கடவுள் ஏன் கல்லாக இருக்கின்றார்?

நாட்டில் நடப்பவைகளைக் கண்டு சகிக்க முடியாமல்!

**எம்.அருச்சுனன்**
**கண்டி**

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றி..?

இந்திய பிரபாகரன், வித்தை காட்டுவதில் மட்டும்!

**கா.புஸ்பராசா**
**வவுனியா**

ஆசை என்பது என்ன?

வரவுக்கு முன்னால் செலவைப் பெற்றெடுக்கும் இமெஜன்ஸி தாய்

**எஸ்.பிறேமினி**
**வெள்ளவத்தை**

குழந்தைகளிடம் குறை காண்பவர்களைப் பற்றி....?

குழந்தைகளுக்கு தேவை முன்னுதாரணமாக நடந்து கொள்பவர்கள் தான், குறை காண்பவர்களல்லர்!

**இ.யசோதா**
**பாமன்கடை**

நட்பு என்பது என்ன?

பல உடல்களில் வாழும் ஆன்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஏ.ரஹீம்
திஹாரி

திருமண ஆசை வந்து விட்டால்?

சிறிய ஆசைகள் பூர்த்தியாகும், பெரிய ஆசைகள் புதிதாய் உருவாகித் தேங்கிப் போகும்.

ஏ.சந்திரிக்கா
ஏறாவூர்

மனிதர்களின் ஆயுள் நீடிக்க என்ன வழி?

முடிந்தவரை டாக்டர்களிடம் செல்லாமல் இருப்பது!

க.புவனேஸ்வரி
சுண்டிக்குளி

நகைச்சுவை என்பது ஒரு கலையா?

சொன்னால் யாராவது சிரிக்க வேண்டும், அப்போது அது கலை!

சொல்லிவிட்டு நாமே சிரித்தால் அது கொலை!

கே.ஆனந்தராஜா
திருக்கோவில்

ரசித்த கவிதையொன்றை கூறுங்கள்

போதி மரங்களே
கழுமரங்களானால்
புத்தர்கள்
உருவாவதெப்படி?

பு.மஞ்சுளா
காரைதீவு

ஆடை குறைக்கும் நடிகைகளைப் பற்றி...?

அவர்கள் காமேஸ்வரிகள்.

பி.மகேந்திரன்
செட்டி பாளையம்

நாட்டுப் பிரச்சினை எப்போது தீரும்?

மூன்றாம் உலக யுத்தத்தின் பின்னர்.

# மேதினம்!

★ ஏழை எளியவர்களுக்காக கொள்ளை அடித்து, வரலாற்றில் இடம்பிடித்த இங்கிலாந்தைச் சேர்ந்த ராபின்ஹூட் இறந்தது மே தினத்தில்தான்.

★ உலகிலேயே அதிக உயரம் கொண்ட, 102 மாடிகள் கொண்ட அமெரிக்காவின் 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' மே 1, 1931 இல் தான் திறந்து வைக்கப்பட்டது.

★ அமெரிக்காவில் உள்ள விஸ்கான்சின் மாகாணத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 2 ம் திகதியை 'உண்மை தினம்' என்று கொண்டாடுகின்றனர். பொய்ச் சாட்சி சொல்ல மறுத்து உண்மைக்காக உயிர்நீத்த 'டன்னான்' என்ற சிறுவனின் கல்லறைக்கு சென்று மக்கள் அன்றைய தினம் வழிபடுகின்றனர். அந்த மாகாணத்தில் அன்றைய தினம் அரசாங்கம் விடுமுறை அளிக்கிறது.

★ ஆபத்திலிருக்கும் விமானங்கள், கப்பல்கள் உதவி வேண்டும் போது, ஒரு 'கோட் வேர்டை' பயன்படுத்துகின்றன. அந்த வார்த்தையை 'மேடே' என்பர். பிரெஞ்சு மொழியான 'மிஎய்டர்' என்ற வார்த்தையிலிருந்து இது வந்தது. இந்த வார்த்தைக்கு 'உதவி' என்று பொருள்.

"இருந்தாலும் நம்ம தலைவர் ரொம்ப மோசம்... புயல் எச்சரிக்கை கொடியைக்கூட நான்தான் ஏத்துவேன்னு அடம்பிடிக்கிறது கொஞ்சம் கூட நல்லாயில்லே..."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



உக்குவளையூர் அம்ரிதா

# குருதிப் பூக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளம்

பிரதேசமெங்கும் விடாத அடர்த்தியான துப்பாக்கி மழை- நகர மக்களனைவரும் மழையில் வெடவெடக்கும் கோழிக் குஞ்சைப் போல் வீட்டினுள் அடைபட்டுக் கிடந்தனர் அவர்களை பசி தாக்கவில்லை... தூக்கம் வரவில்லை

இரவு-பகல் விளங்கவில்லை. அவர்கள் கனவெல்லாம் -இந்த மண் மீது பிடித்த யுத்தம் சாபம் எப்போது தணியும் என்பதே அவர்களின் ஆசை- கனவெல்லாம்

அன்று பச்சை பயிர்களுக்கும் - மண்ணுக்கும் விஷேட பூசை. அவைகள் நம் உடலை மனிதக் குருதியால் குளித்துக் கொண்டன. நூற்றுக்கணக்கான பிணங்கள் பாலகர் -இளைஞர், வயோதிபர், ஆண்-பெண் வித்தியாசமின்றி வரிசையாக ஆங்காங்கே குடில்களில் ஒப்பாரி முஹாரி ராகமாக ஒலித்த வண்ணம் -அவர்களுக்கு இது புதிதல்ல வழமையானதுதான் -ஒன்று இழக்கும் போது அதன் துயரங்கள் விம்மலாக -ஒப்பாரியாக ஊற்றெடுக்கின்றன.

எத்தனை -எத்தனை ஆயிரமாயிரம் குடும்பங்கள் கண்ணீர் வெள்ளத்தில் ஸ்நேகா ஏன் அழுவுறே

இந்த பூமி-இந்த பிரதேசம்- இங்குள்ள மக்கள் அனைவரும் அழும்போது நான் மட்டும் அழக்கூடாதா சத்யா- இயற்கையிடம் உள்ள அனுதாபம் கூட இங்குள்ள துப்பாக்கிக் கரங்களுக்கு இல்லை.

இப்ப யுத்தத்தை பற்றியா பேசணும் வேற ஏதாவது பேசேன் ஸ்நேகா.

நான் என்ன பேசணும்னு எதிர்பார்க்கிற சத்யா -காதல் மொழி பேசணுமா... வித்தியாசமாய்ப் பார்த்தான் சத்யா.

நம்ம காதல் உணர்வு - உணர்ச்சிகளைவிட இந்த மண்ணின் புதல்வர்களின் அவலம் என் மனதில்... நினைவை விட்டு விலகாத சித்திரமாய்

உனக்கு மட்டுமா ஸ்நேகா என்னிலும் இந்த குருதியின் சாரல்கள் இல்லையா உன்னை விட்டு பிரிந்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் இறந்து போகிறேன்.

இங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருத்தரை பிரிந்தெடுத்த துயரோடு..

அழாதே ஸ்நேகா

இந்த மண்ணில் பிறந்தது தப்பா - எமது உரிமைகளுக்கு குழல்கொடுத்தது தவறா. நாமும் மனித இனம் தானே- எப்போ சத்யா இந்த மண்ணுக்கு விடியல் ஸ்நேகாவின் தோள் தொட்டு அணைத்துக் கொண்டான்.

வீட்டுக்கு ஒளியில்லை சாப்பாட்டுக்கு உணவில்லை- நோய்க்கு மருந்தில்லை- ஒவ்வொரு இரவும், விடியலும் துயரத்தோடு சுதந்திரம் இழந்த கூட்டுக் குருவியாய் எம் வாழ்க்கை.

வாயிருந்தும் ஊமைகளா - உணர்வுகளிலிருந்து மரத்துப் போன மரக்கட்டையாக இப்படி எந்நாளும் வாழ்வதை விட செத்துடலாம்னு தோணுது.

பள்ளி மாணவனின் தோளில் புத்தகப் பைக்கு பதிலா துப்பாக்கி சுமைகள்- வளரும் பயிரிடத்தில் அன்பு இல்லை குரோதம். குருதி காணும் அவசரம்- இவன் எதிராளி -அன்னியன் ஓ... இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இந்த பகைமை...

இரு தரப்பினரும் சுட்டுத் தள்ளுகிறார்கள் வெற்றி-தோல்வி எவருக்கென்று தெரியாமல் இந்த மண்ணின் வியர்வைப் போல் எத்தனையோ துயரங்களை சொல்லவும் முடியாமல் மெல்லவும் தெரியாமல், நகர் கூடி செறிந்திருந்த மனித இனம் மயானங்களிலும், அன்னிய நாட்டில் அகதிகளாகவும்

சத்யா உன்ன என் ஆத்மா நேசிக்கிறது. வாழ்க்கைத்துணையாக ஏற்க மனசு தவிக்குது. இந்த கொடூர யுத்தம் உன்னை அல்லது என்னை பிரித்து விடும். அதன் பிறகு என் நினைவுகளை உன்னுள்ளும் - உன் நினைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நாளும் சுமக்க வலிமை இல்லை.

நாம் மண்ணின் ஆச்சரியக் குறிகள் - மரணத்தின் நிழலோடு உறவாடும் விட்டில்கள்.

சத்யா யுத்தம் என்று வரும்போது உனக்கெதிரா நான் துப்பாக்கி தூக்கி சுடணும். அதே நிலைதானே எனதும் ஸ்நேகா....

நான் போராளி -நீ ராணுவ வீரன் சத்யா எமக்கிடையில் ஏன் காதல் வந்தது. ஏன் சந்தித்தோம் சொல் சத்யா. வெறிபிடித்தவளாக சத்யாவை உலுக்கினாள். நீ நாட்டு விடுதலைக்காக -நான் பிறந்த மண்மக்களுக்காக போராடுகிறேன் ரெண்டு பேரும் பிரிஞ்சிடுவோம் இரு துருவமா சத்யா.

பரிவோடு ஸ்நேகவின் தலையை வருடிக் கொடுத்தான். ஸ்நேகா அழகான பூ ஆனால் மகரந்தத்தையே முள்ளாகக் கொண்டு பூத்த வீரமலர் நம் எண்ணங்கள் -லட்சியம் வேறாக இருக்கலாம் ஸ்நேகா- போர்முனையில் நீ என் எதிரி, நான் உன் பகைவன் அங்கே காதல் பார்க்காதே -உன் சத்யாவை நேசிக்காதே தேடாதே சுடு சுட்டுக் கொண்டேயிரு... அங்கு என் நிலையும் அதுதான் என் சுவாசக் காற்றே....

போராளி எல்லாம் கெட்டவர்களும் இல்லை - நல்லவர்களும் இருக்கிறார்கள். இராணுவ வீரர்களில் எத்தனையோ கல்லுக்குள் ஈரம் கொண்டவர்களாக......

இந்த யுத்தம் முடியும்னு நெனைக்கிறாயா ஸ்நேகா

குழப்பமாக ஏறிட்டாள் சத்யாவை.

இந்த மண்ணில் ஒவ்வொரு உயிர் இருக்கும் வரை -இந்தப் பிரச்சினை நீட்டிக் கொண்டே இருக்கும் - உன்னவர்களின் தாகமும் தீராது- எம் இனத்தவரின் தாகமும் தீராது.... அடங்காது...

மரணங்களின் பட்டியலும் - மயானங்களின் இடமும் நிரம்பிக்கொண்டே இருக்கும். இந்த மண்ணில் அவலநிலை இது.

பனி -மழை- பசி, ஓய்வில்லை, கூர்மை செவி- பார்வை எந்நேரமும் அவதானம் எப்படி தாக்குவார்கள் எச்சரிக்கை... மலசலங் கழிக்கச் சென்றாலும் நிம்மதியில்லை சாப்பாடு -உறக்கம் நிம்மதியில்லை. சிகரட் பற்ற வைத்தால் வாயிற்குள் தோட்டா வரும்... எப்போது வரும்... எப்படி வரும் மரணம். எம்மிருவரின் நிலை இதுதானே.

ஸ்நேகா நம் காதலின் தொடக்கம் நான் இராணுவ வீரன் இல்லை. நீ போராளி இல்லை. காலத்தின் நிர்ப்பந்தம் இரு தண்டவாளமாய்...

காதலில் இருவரும் ஒன்றாக நினைப்போம்- வாழ்வோம்- நாம் இணைவது சாத்தியமில்லை. மரணம் எப்போது முத்தமிடும்னு தெரியாது... உயிர் மூச்சு இந்த மண்ணில் இருக்கும் வரை காதலிப்போம். காதலுக்கு சாதி-மதம்-நம் கடமை தடையில்லை. பிரச்சினையில்லை.

ஸ்நேகா நீ என் உயிர்மூச்சு

ஸ்நேகா என் வாழ்க்கை

ஸ்நேகா நீ என் கனவு -உருவம்

புலம்பினான் சத்யா விம்மலோடு அணைத்துக் கொண்டாள் ஸ்நேகா. இந்த யுத்தம் இல்லாவிட்டால் நாமும் சந்தோஷமா கணவன் - மனைவியா வாழ்ந்திருக்கலாம் சத்யா... அவர்கள் அமர்ந்திருந்த புதர் பகுதியெங்கும் பேச்சு சத்தங்கள். துப்பாக்கி விசை ரெடி பண்ணும் உஷ்ணம். சத்யாவும்- ஸ்நேகாவும் மிரண்ட விழியோடு சூழ்நிலையை ஆராய்ந்தனர். ஒருபுறம் ராணுவ வீரர்கள் மறுபக்கம் போராளிகள்.

சூழ்நிலை விபரீதம் உணர்ந்து இருவரும் சுதாகரிக்கும் முன்னர் - தோட்டாக்கள் சீறிப்பாய்ந்தன- குண்டுகள் ஆக்ரோசமாய் வெடித்தன...


சீறிப்பாய்ந்த... இலக்கின்றி பறந்த தோட்டாக்கள்

சத்யா- ஸ்நேகாவையும் உருக்குலைய செய்தன- மரக்கிளைகளில் பறவைகள் சடசடத்தன. இருவரின் கரங்களும் ஒன்றிணைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 03



குறுக்கெழுத்துப் போட்டி - 03

முழுப்பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

கையொப்பம் : ..........

**இடமிருந்து வலம்**

1. வினோதமானது.
5. இது தெரிந்தால் தான் கலைஞனா கலாம்
6. நண்பன்
7. இனிமையான குரல், குழம்பியுள் ளது.
8. கரையில்லாதது, பயின்றால்தான் மனிதனாகலாம்
10. பொருட்களை நிர்ணயிப்பது
11. பனங்காயின் இளமை வடிவம் குழம்பியுள்ளது.
13. அஞ்சலி அவசியமானது குழம்பியுள் ளது.

**மேலிருந்து கீழ்**

1. நகைச்சுவையாளன்
2. சிற்பி படைப்பது
3. உருசியானது
4. வண்டின் ஓசை குழம்பியுள்ளது
7. திறவுகோல்
9. ஐந்திணைகளுள் ஒன்று குழம்பியுள் ளது
11. சவர்காரத்தைக் கரைத்தால் மேலே வருவது
12. காலின் அடிப்பாதத்தின் பின்பகுதி

★ சரியான விடை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசு கிடைக் கும்.

★ பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

★ விடைகளை அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பவும்

★ **போட்டி முடிவு திகதி 25.5.99**

அனுப்ப வேண்டிய முகவரி :
குறுக்கெழுத்துப் போட்டி - 03.
தாய்மொழி, த.பெ. இல. 1636, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இதழில்....

செங்கை ஆழியான் எழுதும்

# அசோக வனம்

## குறுக்கெழுத்துப் போட்டி -01

**விடைகள்:**

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. புள்ளிமான் | 1. புண்ணியம் |
| 4. வால் | 2. விடிவெள்ளி |
| 5. வெண்ணிலா | 3. வான் |
| 8. இடியப்பம் | 6. இலாடம் |
| 11. விடம் | 7. பலா |
| 12. பாசி | 9. பாப்பா |
| 13. பானம் | 10. சினம் |

**பரிசு பெறும் அதிஷ்டசாலி**

அல்பிரட் ஸ்ரனிஸ் லோஸ்
மத்திய வீதி, உவர்மலை,
திருகோணமலை.

எஸ்.பிரதீபன்
வலந்தலை, காரைநகர்.

கே.கேதீஸ்வரன்
மெயின் வீதி, பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்**

கவிதா பாலசுப்ரமணியம்
46, பெனாண்டோ வீதி,
வெள்ளவத்தை.

இ.விஜயகுமார்
இலங்கை மின்சார சபை,
திருகோணமலை.

செ.கனகரெத்தினம்
975, அன்பு வழி புரம்,
தெஹிவளை.

N. ராதா
44/1A குவாரி றோட், தெஹிவளை.

தம்பிராசா அகிலன்
இந்துக் கல்லூரி ஒழுங்கை,
கல்குடா வீதி, வாழைச்சேனை.

**மிக்ஸி பரிசுத்திட்டம்**
**அதிஷ்டசாலித் தெரிவு -1**

மிக்ஸி பெறும் அதிஷ்டசாலி

திருமதி நாகரெட்ணம் மல்லிகாதேவி
பல்கலைக்கழக வீதி
திருநெல்வேலி

★ அதிஷ்டசாலிக்குரிய பரிசு காலக் கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்குறிப்பு - 1937

## ஸ்பெயின் உள் நாட்டு போர் குர்னிகா மீது தாக்குதல்!

ஸ்பெயின் நாட்டில் மிக மோசமான ரத்தக்களரியான உள்நாட்டு போர் பிரான்சிஸ்கோ பிரான்கோவின் புரட்சி தேசியப் படைகளுக்கும், ஆளும் சோசலிஸ்ட்களுக்கும் இடையே இந்த ஆண்டும் தொடர்ந்தது. தேசிய படைகளை முசோலினியின் பாசிச படைகளும், ஜெர்மனியின் நாஜி படைகளும் ஆதரித்தன. சோசலிஸ்டுகள் ரஷ்ய ஆதரவை கேட்டனர்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில முசோலினியின் சிறந்த கறுப்புச் சட்டை படைகவுடலஜாரா நகரில் மோதின. பிரான்கோவின் விமானத் தாக்குதல் திட்டத்துக்கு ஜெர்மனியர்கள் உதவினர். தேசிய படைகள், ஜெர்மனி ஆதரவுடன் வடக்கு கடற்கரை பகுதியில் தனியாக இருந்த பாஸ்கியு பகுதியையும் பிடித்தன.

இந்த ஆண்டு ஏப்ரல் 26ம் திகதி உள் நாட்டு போரின் மிக மோசமான போர் நடந்தது. ஸ்பெயின் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள குர்னிகா நகர் மீது குண்டுகள் வீசப்பட்டன. மக்கள் வசிக்கும் பகுதியில் குண்டுகள் வீசப்பட்ட சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் முறை. நகரில் பரபரப்பாக வியாபாரம் நடந்த இடத்தில் குண்டுகள் வீசப்பட்டதில் 2500 பேர் செத்தனர். நகரில் பெரும்பாலான பகுதிகள் சாம்பலாயின. இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன,

ஸ்பெயின் நாட்டின் பிரபலஓவியர் பாப்லோபிக்காசோ தனது குர்னிகா என்ற ஓவியத்தில் குண்டு வீச்சுக்கு தன் வெறுப்பை காட்டியிருந்தார்.

## கண்டுபிடிப்பு ரேடியோ டெலஸ்கோப்!

அமெரிக்காவின் இளம் ரேடியோ விஞ்ஞானியான குரோட்ரீபர் என்பவர் தனது வீட்டின் பின் பக்கத்தில் 30 அடி விட்டம் கொண்ட ஒரு டிஷ் அண்டனாவை உருவாக்கினார். வெளிக்கிரகத்தில் இருந்து ஏதாவது ரேடியோ சிக்னல்கள் வருகிறதா என்று கண்காணிக்க இவர் இந்த அண்டனாவை வைத்திருந்தார்.

பெல் டெலஸ்கோப் சோதனைக் கூடத்தை சேர்ந்த இன்ஜினியர் கார்ல் ஜான்ஸ்கி என்பவர் 1931ம் ஆண்டு வெளி கிரகங்களில் இருந்து ரேடியோ அலைகள் வருவதை கண்டு பிடித்திருந்தார். எனினும் அதற்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ரீபரும் பல ரேடியோ அலைகளை கண்டுபிடித்தார்.

## பெரும் அழிவு ஹின்டன்பர்க் விபத்து!

மிகப்பெரிய ஜெர்மன் விமானக் கப்பலான ஹின்டன்பர்க் நடுவானில் வெடித்து சிதறி விழுந்தது. நியூஜெர்சி நகரை நெருங்கும் போது லேக்கர்ஸ் என்ற கோபுரம் அருகே வரும் போது இந்த விபத்து நடந்தது. 97 பயணிகளில் 33 பேரும், பைலட்களும் இறந்தனர். இந்த கப்பல் பிராங்பர்ட் நகரில் இருந்து வந்து கொண்டிருந்தது.

விமானம் விபத்துக்குள்ளானதற்கு காரணம் மின்னல் தான் என்று தெரியவந்தது. இந்த விமானம் 972 அடி நீளமும், 110 தொன் எடையும் கொண்டிருந்தது. விமானம் தரையிறங்குவதை கண்காணித்து கொண்டிருந்த ரேடியோ அறிவிப்பாளர், பின்னர் விபத்து குறித்து அறிவிக்கும் போது அழுதார். இந்த விபத்துக்குப் பின்னர் இது போன்ற விமான கப்பல்களுக்கு மவுசு குறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மணி

## சருமத்தைப் பராமரிக்க...!

**பெண்களின் சருமத்திற்கு அதிகமான அளவு தொல்லை கொடுப்பது எந்த காலம்?**

கோடை காலம்.

**இதற்கு காரணம்?**

பெண்களின் மென்மையான சருமத்தை கோடை காலச் சூரியன் சுட்டு எரிக்கிறது. இதனால் சருமம் கன்றிப் போய் தடித்து சொறி ஏற்படும்.

**இந்த தொல்லைகளில் இருந்து விடுபட வேண்டுமானால், என்ன செய்யலாம்?**

நிவாரணம் தேடுவதற்கு முன்னால் முகம், கை, இடை பகுதிகளில் வெயில் படாமல் பாதுகாப்பது நல்லது. அப்படியே வெயிலில் இறங்கி நடக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், முகம், கைப் பகுதிகளில் சூரிய ஒளியால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கும் கிரீம்களை தேய்த்துக் கொள்ளலாம். இவை மருந்து கடைகளில் கிடைக்கும்.

கோடை காலத்தில் ஏராளமானவர்களுக்கு வியர்க்குரு தோன்றும். கழுத்தின் முன்பக்கம், அக்குள், தொடை, இடுப்பு, முதுகு, மார்புகளின் அடிப்பாகத்தில் அதிக வியர்வை தோன்றும் . இந்தப் பகுதிகளிலேயே வியர்க்குரு அதிகம் தோன்றும்.

**கோடை காலத்தில் சருமத்தை பராமரிக்க எளிய வழிகள்.**

★ சுத்தமான காற்று பரவும் இடங்களில் அதிகமான நேரத்தை செலவிட வேண்டும்.



★ தினமும் 6 முதல் 8 மணி நேரம் நன்றாகத் தூங்குங்கள்

★ உடலையும் கூந்தலையும் எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

★ உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பானங்களை பருக வேண்டாம்.

★ எதற்கெடுத்தாலும் உடனே மருந்துகளைத் தேடவேண்டாம்.

**சாந்தினி, பருத்தித்துறை**

### இறைச்சி சுவைக்கு

இறைச்சி நன்றாக வேக வைக்க வேண்டுமா?

★இறைச்சியை வேகவைக்கும்போது உப்பு சேர்க்க வேண்டாம். வெந்தபின்பு அதில் உப்பு சேருங்கள். இவ்வாறு செய்தால் இறைச்சி அதிக அளவு மென்மையாக இருக்கும்.

★கோழி குழம்பு வைப்பதற்கு முன்னால் கோழி இறைச்சியில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாறு கலந்திடுங்கள். குழம்பு அதிக சுவையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுப்புடவையைப் பராமரிக்க...

பட்டுப்புடவை பத்திரமாக பாதுகாக்க வேண்டிய பொருள். அதனை பராமரிப்பதில் அலட்சியம் காட்டினால், பட்டுப் புடவையின் பகட்டு போய்விடும்.

★ பட்டு கனம் குறைந்தது. ஆனால் அதன் சரிகை கனமாக இருக்கும். அதனால் பட்டுப்புடவையை தூக்கி hanger ல் போட வேண்டாம். மடித்து அடுக்கி வையுங்கள்.

★ பட்டுப்புடவைகளை எப்போதும் ஒரே மாதிரியாக மடித்து வையுங்கள். நினைத்தபடி எல்லாம் மடித்தால் எல்லா இடங்களிலும் சுருக்கமும் மடிப்பும் தோன்றி விடும்.

★ பட்டுப்புடவைகளை பொலித்தீன் பைகளில் அடைத்து வைக்கக்கூடாது.

★ கனம் குறைந்த துணிகளில் பொதிந்து வையுங்கள்.

★ பட்டுப்புடவையை துவைக்கும் போது அதனை அதிக நேரம் தண்ணீரில் அமுக்கி வைக்கக்கூடாது. சலவை முடிந்து பிழியவும் கூடாது. நன்றாக நிழல் இருக்குமிடத்தில் விரித்து காயவைக்க வேண்டும்.

★ பட்டுப்புடவையை அயன் செய்யும் போது புடவையின் மேல் கனம் குறைந்த துணி அல்லது பேப்பரை போட்டு அதன் மேல் அயன் பொக்ஸ் வைத்து அயன் செய்யுங்கள். வோடரில் அதிக சூட்டிலும் உள்பகுதியில் லேசான சூட்டிலும் தேயுங்கள்.

**திருமதி. கனகசபை**
**கோப்பாய்**

## மிக்ஸி பரிசுத் திட்டம் அதிஷ்டசாலி தெரிவு- 03

★ பெண்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். மாதம் இரு அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

★ கீழேயுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து தபாலட்டையில் ஒட்டி அனுப்பினால் போதும். பதிவுத்தபால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்

அனுப்ப வேண்டிய முகவரி : மிக்ஸி பரிசுத் திட்டம், தெரிவு - 03.
தாய்மொழி, த.பெ. இல. 1636, கொழும்பு.

முடிவுத் திகதி : 25.05.99

### அதிஷ்டசாலித் தெரிவு - 03

முழுப்பெயர் : ......................................................

முகவரி : ......................................................

......................................................

கையொப்பம் : ......................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*அத்தியாயம் 03*

## எழுந்ததோர் எண்ணம் வெற்றி பெறும் வண்ணம்

தன் முன்னாலேயே தந்தையும் தாயும் கயவர்களால் குற்றுயிராக்கப்பட்டு கிடந்ததைக் கண்ணுற்றதால் ஏற்பட்ட துன்பம் மானவம்மனுக்கு அவர்களில் ஒருவனைத் தவிர மற்ற அனைவரையும் துவம்சம் செய்த பின்னும் மாறவில்லை. எத்தனை கொலையாளிகளைத் தண்டித்தாலும் போன உயிர் திரும்பி வருமா?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதில் எல்லையற்ற எண்ணங்கள் சுற்றித் திரிந்தன.

தாதோபதீசன் பல வழிகளில் மானவம்மனுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். மானவம்மனிடமிருந்து எப்படியாவது ஆட்சியைப் பிடித்து விடவேண்டுமென்பது அவனுடைய எண்ணம்.

அவன் எத்தனை வழிகளில் முயற்சி செய்தும் மானவம்மனை அவனால் வெற்றி கொள்ள முடியவில்லை. இந்நிலையில் தான் அவன் இவ்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பது மானவம்மனுக்கு நன்றாக விளங்கியது.

தன் பெற்றோர் தன் பேச்சைக் கேட்டு அரண்மனைக்கு வந்திருந்தால் இப்படி ஏற்பட்டிருக்காதே என்று எண்ணிய போது அவன் மனது அதிக வேதனையை அடைந்தது.

''நாட்டை ஆளும் மன்னனின் பெற்றோர் குடிசையில் வாழ்வதா'' என்று அவன் கேட்டான் பெற்றோரிடம்.

அதற்கு அவனுடைய தந்தை புன்னகையுடன் '''மானவம்மா நான் அரண்மனையில் வசித்து வந்த வாழ்க்கையை மேலும் தொடர என் மனம் விரும்பவில்லை. இறக்கும் இந்த நேரத்தில் நிம்மதியாக பொறுப்பற்றவனாக வாழ வேண்டுமென்பதற்காகத்தான் ஆட்சிப் பொறுப்பை உன்னிடம் தந்துள்ளேன். நீ நீதிபதியுடன் ஆட்சி செய்வதே எங்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்'' என்று கூறிவிட்டார்.

அதனைக் கேட்டதும் மானவம்மனுக்கு அதிக வியப்பாய் இருந்தது. சென்ற ஆண்டுவரை மிகச் சிறப்புடன் ஆண்டு வந்த காசப மன்னரா இப்படிக் கூறுவது என்பதை எண்ணிப் பார்க்க மனம் விந்தையை அளித்தது.

அவன் எண்ணத்தை விளங்கிக் கொண்டபடி ''மானவம்மா! கடந்த காலங்களில் ஆட்சி செய்த, ஒரு மன்னரா அரண்மனை வாழ்க்கை வெறுப்பது என்று உனக்கு ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால் இதில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித ஆசையிருக்கும் எனக்கு இந்த வயோதிப காலத்தில் அரசாட்சி அரண்மனை வாழ்வு ஆகியவற்றை விட ஓய்வான, எவ்வித பொறுப்பற்ற வாழ்வே பிடிக்கின்றது. திரும்பவும் அரண்மனைக்கு வந்தால் மனம் மாறி விடுமோ என்று அஞ்சுகின்றேன் உனது தாயாருக்கும் இவ்வாழ்வு தான் பிடித்திருக்கின்றது. எனவே எங்களை தயவு செய்து அரண்மனைக்கு வருமாறு வற்புறுத்தாதே'' என்றார்.

அதன் பின்னால் அவனால் வற்புறுத்த முடியுமா? அவர்கள் சொற்படியே விட்டு விட்டான்.

அதன் பிறகுதான் குடிசையின் முன்னால் பலமான காவல் இட்டான்.

அதனைக் கூட காசு மன்னர் சம்மதிக்கவில்லை.

''எங்களுக்கெதுக்கு பாதுகாப்பு? பாதுகாப்பையும் மற்ற உபசரிப்புகளையும் பார்த்ததும் மீண்டும் மனம் ராஜபோக வாழ்க்கையில் லயித்து விடும். எனவே இதெல்லாம் வேண்டாம்'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டார்.

தாய் கூட ''உன் தந்தை சொல்வதுதான் சரி எங்களுக்குப் பாதுகாப்பு தேவையில்லை'' என்று கூறி விட்டார்.

அதற்குப் பிறகு அத்திட்டமும் கைவிடப்பட்டுவிட்டது. இவைகளையெல்லாம் அவனுடைய தந்தை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று இந்நிலை ஏற்பட்டிருக்குமா?

மனம் புலம்பியது.

இருப்பினும் நடந்து முடிந்து விட்ட செயலை எண்ணி வருந்துவதில் பிரயோசனம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்பதை உணர்ந்து மனதைத் தேற்றத் தொடங்கினான். தாதோபதீசனை எண்ணியதும் அவன் மனம் கொதிப்படைந்தது.

அவனை தப்ப விட்டு விட்டதை எண்ணிக் கவலைப்பட்டான்.

இனி என்ன செய்வதென்று அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான் தாதோபதீசனை பற்றிய சகல விபரங்களும் மானவம்மனுக்குத் தெரியும். இரகசியமாக அவன் அவனுக்கு ஆதரவாக வீரர்களை திரட்டி வைத்திருப்பதுவும் தெரியும் இன்று நடந்து விட்ட சம்பவத்தில் இருந்து தாதோபதீசன் வெகுவிரைவில் தன்னையும் கொலை செய்ய முயற்சி செய்வான் என்பதையும் அதற்குத் தன்னுடன் சேர்ந்திருப்பவர்களே உதவி செய்வார்கள் என்பதையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

இதனை நினைத்துப் பார்த்ததும் அவன் இதழ்கள் சோகமாய் புன்னகை செய்தன. '''மானவம்மன் உயிருக்குப் பயந்தவனா?'' என்று முணுமுணுத்துக் கொண்டான். இருப்பினும் மறுவினாடி அவனுடைய எண்ணம் வேறு வழியில் திரும்பியது. தான் இறப்பதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் நாடு கொடியவனுடைய கையிலல்லவா அகப்பட்டு விடும் அதனைப் பற்றியும் கவலை கொள்ளாமல் இருக்க முடியுமா?...

நாடு தாதோபதீசனுடைய கையில் அகப்பட்டு விடக்கூடாது. அதற்கு என்ன வழி?.... தனித்து நின்று போர் செய்தால் நிச்சயம் தாதோபதீசனை வெல்ல முடியும். ஆனால் தாதோபதீசன் நேருக்கு நேர் வருவானா? மானவம்மனுடைய வீரர்கள் முழுவருமே மானவம்மனுக்கு விசுவாசமாக நடந்து கொள்வார்களா?... இல்லையே...

தாதோபதீசனை வெல்ல வேண்டுமாயின் மானவம்மனின் மேல் விசுவாசங் கொண்ட நம்பிக்கையின் படை ஒன்று தேவை அதனை எங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம்.


அவனுடைய யோசனை உடனே முற்றாகியது.

நரசிம்ம வர்மன்! அவனுடைய பூரண உதவியை மானவம்மன் பெறமுடியும். நரசிம்ம வர்மனிடமிருந்து உதவி பெறுவது மானவம்மனுக்கு இழுக்கு இல்லையா..

இல்லை நரசிம்மவர்மனிடமிருந்து இவன் வெறுமனே உதவியைப் பெறப் போவதில்லை. அவனுக்கு உதவி செய்து உதவி பெறுவான்.

சாணக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி நரசிம்ம வர்மனை சண்டைக்கிழுக்கிறான். அச்சண்டையில் மானவம்மன் நரசிம்மவர்மனுக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுத்துப் போராடுவான். அதன் பின் நரசிம்மவர்மனிடமிருந்து உதவியைப்பெற்று தாதோபதீசனை வெல்வான். இந்த முடிவு ஏற்பட்டதும் மானவம்மனுடைய மனம் சிறிது தெளிந்தது. யோசனை உலகிலிருந்து மீண்டவன் தனது பெற்றோருடைய இறுதிக் கிரியைகளைச் செய்ய எழுந்தான்.

(தொடரும்...)



ஜப்பானில் இடநெருக்கடி நாளுக்கு நாள் அதிகமாகி விட்டது. டோக்கியோ நகரத்தில் சில நிகழ்ச்சிகளுக்கு வரும் அழைப்பிதழ்களில் 'தயவு செய்து காரில் வரவேண்டாம்'. பஸ்ஸில் வரவும். கார் நிறுத்த இடம் கிடையாது' என்று அச்சிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசம் தந்த மடல்

**உக்குவெளை அம்ரிதா**

'தாய்மொழி' வெளிநாட்டு சஞ்சிகைக்கு நிகரான உள்நாட்டுத் தயாரிப்பு. இதை எண்ணும்போது உள்ளமெல்லாம் பூரிக்கின்றது. ஒவ்வொரு ஆக்கமும் சூப்பர்... தாய்மொழிக்கு வளமான எதிர்காலம் வாசகர்களிடம் உண்டு. தனியிடம் பிடித்து வாசகர்களைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை. உன் சேவை தொடர என்றென்றும் என் பிரார்த்தனைகள்.

**அ.க.அஸ்ரக்,**
**59, ஹிஜ்ரா வீதி, சின்னக் கிண்ணியா**

தரமான சுவையோடு கூடி வாசிக்கக்கூடிய ''தாய்மொழி'' சஞ்சிகை படித்தேன். எனக்கு மட்டுமல்ல இலங்கை மக்களையும் கவர்ந்திருக்கும். மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

**வே.நவகுமார்,**
**தெகிவளை**

தாய்மொழி தமிழர்களின் இன்றைய தேவை. எமது நாட்டில் தமிழ்ப் பத்திரிகை இந்திய சஞ்சிகையின் தரத்துக்கு இணையாக, தரமானதாக குறைந்த விலையில் கையடக்கமாக உள்ளது வரவேற்கத்தக்கது. பத்திரிகைத்துறை என்பது ஆற்றில் எதிர்நீச்சல் போடுவதற்கு ஒப்பானது.

''பத்திரிகைத்துறையில் தடம் பதிப்பது எளிது, காலவோட்டத்தில் தடைகளைத் தாண்டி நின்று நிலைப்பது என்பது ஒரு அரிய சாதனை. அதனை ''தாய்மொழி'' படைக்க வேண்டுமென்பதே என் பேரவா.

**ஐ.செல்வராஜா (கிராம சேவகர்)**
**கோவில் வீதி, வீரமுனை**

கையடக்கமாகப் பரிணமித்துள்ள ''தாய்மொழி'' காத்திரமாக இருக்கின்றது. சகல வயதினருக்கும் பொருந்தக்கூடியவாறு ஆக்கங்கள் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும் செய்திகள் கூடுதலாக இருந்தால் இன்னும் சுவை கூடும்.

**சி.பிரகாஸ்,**
**அம்பாறை வீதி,**
**மல்வத்தை**

'தாய்மொழி' இவ்வளவு காத்திரமாக வருமென்று நான் கருதவில்லை. இரு வாரத்துக்கு ஒரு முறை காலம் பிந்தாமல் வந்த இரு இதழ்களையும் போன்று தொடர எனது வாழ்த்துகள்.

**சீதா பரமேஸ்வரன்**
**கல்முனை**

தாய்மொழியின் அட்டைப்படம் இந்திய சஞ்சிகைகளான குமுதம், கல்கண்டை ஞாபகமூட்டியது. இலங்கையர்களை அட்டைப் படத்தில் இணைப்பதே 'தாய்மொழி'க்கு பொருத்தமாக இருக்கும். புதிய செய்திகளையும் இணைத்துக் கொண்டால் காத்திரமாக அமையும்.

**எம்.ஸாலிஹ் அஸீம், புத்தளம்**

சஞ்சிகை சுவையூட்டியது. தொடர்க பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாசியா, பேணி லிவிஸ்கி யைத் திருமணம் செய்த பின்னர் லண்டன் றோயல் மாட்சன் வைத்தியசாலை யில் கடமை புரிந்தார். அவ்வேளையிலே மொனி க்கா தாய் மாசியா வயிற் றில் கர்பமானாள், பின்னர் பிரான்சிஸ்கோ நகர் சென்று மொனிக்காவை பிரசவித்தாள்.**

**மொனிக்கா பிறந்த பின் மாசியாவின் வாழ்வில் திருப்தியும், மகிழ்ச்சியும் ஆரம்பமாகியது.**

**இனி...**

மொனிக்கா அழகான குழந்தையாக மட்டு மல்லாது நடைபழகுவதற்கு முன்னமேயே மிக வேகமாகப் பேசவும் கற்றுக் கொண்டார். அவரது இரண்டாவது பிறந்த நாளிற்கு முன்பே பேச்சி னால் எல்லோரையும் மகிழவைத்தார். அந்த நேரத்திலேயே மொனிக்கா காண்பவர்களைக் கவர்ந்திழுத்ததுடன் மற்றவர்களை தனது கட்டுப் பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஆற்றலைப் பெற் றிருந்தார். அத்துடன் தனக்கு என்ன தேவை என்பதையும் எது சரி என்பதையும் நன்றாக அறிந் திருந்தார்.

மொனிக்கா சிறு வயதிலேயே இரண்டு வய தாக இருக்கும் போதே, மிகவும் புத்திசாலியாக வும், தன்னம்பிக்கை மிகுந்தவராகவும் பார்ப் பவரைக் கவர்ந்திழுக்கும் அழகிய குழந்தை யாகவும் இருந்தார் என்பதை அவரின் சிற்றன் னையான டெப்ரா என்பவர் விளக்குகின்றார். சான்பிரான்சிஸ்கோ நகரிலுள்ள விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவிற்கு டெப்ராவும் மொனிக்காவும் சென்றிருந்தனர். மாலையாகும் வரை நீண்ட நேரம் அங்கிருந்தனர். பின்பு டெப்ரா வீடு போவதற்கு ஆயத்தமாகிய போது மொனிக்கா போக மறுத்து விட்டார். தனது விளையாட்டு முடிந்த பின்பே தானாகவே வீடு செல்வதற்கு டெப்ராவை அழைத்து சென்றார். அந்த நிகழ்ச்சி தன்னை மிகவும் கவர்ந்ததாகவும், மொனிக்கா மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படுத்த வைத்ததாகவும் டெப்ரா விபரித்தார்.

இன்னொரு சந்தர்ப்பத்திலும் மொனிக்கா தனது மனோவலிமையைக் காண்பித்தார். டெப்ராவின் திருமண நாளன்று மொனிக்காவிற்கு மூன்று வயதாக இருந்தது. அன்று மொனிக்கா மணப் பெண்ணின் தோழியாக நிற்க வேண்டியிருந்தது. திருமணச் சடங்கு நடப்பதற்கு 20 நிமிடங்கள் தான் இருந்தன. அப்போது மொனிக்காவிற்கு நீல நிற உடை அணிந்து விட்டனர். அந்த சட்டையின் கைப்பகுதி மொனிக்காவின் கை முழுவதையும் மூடியிருந்தது. அதனை விரும்பாத மொனிக்கா அந்த சட்டையின் கைப்பகுதியை வெட்டி சிறிதாக்க வேண்டும் என்று அடம் பிடித்தார். அதனால் உடன் அவர் விரும்பிய படியே மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்பு மொனிக்கா அந்த சட்டையை அணிந்து அழகு தேவதையாக எல்லோர் கண்களுக்கும் விருந்தாக நின்றார்.

மொனிக்காவின் தாயாரான மார்சியா மகளின் விருப்பங்களை நிறைவேற்றவேண்டிய நிலையிலேயே இருந்தார். மொனிக்கா அந்த சிறுவயதிலும் வளர்ச்சியடைந்த இளம்பெண்ணின் புத்திக் கூர்மையுடனேயே செயல்பட்டார்.

1976 ம் ஆண்டு மொனிக்காவின் தந்தை பேணி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து லொஸ் ஏஞ்சலிற்கு சென்று தொழிலை ஆரம்பித்தார். அதனால் குடும்பம் அங்கேயே தங்க வேண்டியிருந்தது. அங்கு சென்ற ஓர் ஆண்டில் மார்சியா ஒரு மகனை பெற்றெடுத்தார். அந்த குழந்தையை மொனிக்கா மிகவும் விரும்பி, அதனுடன் விளையாடுவதில் அதிக நேரத்தை செலவிட்டார். அவனுக்கு மைக்கல் என்ற பெயரையும் சூட்டி அன்போடு சீராட்டினாள்.

மொனிக்காவிற்கு ஆறு வயது ஆகியதும் பெல் எயர் என்ற இடத்திலிருந்த யோன் தோமாஸ் டை பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்க தொடங்கினார். இது ஒரு பிரபல்யமான பாடசாலை, இங்குதான் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றோனால் றேகன், அவரது மனைவி, பிரபல எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், செனட்டர்கள் ஆகியோர் கல்வி கற்றுள்ளனர்.

யூத இனத்தைச் சேர்ந்த பெண்ணான மொனிக்கா, இயற்கையிலேயே மிகுந்த மதிநுட்பமும், விவேகமும் கவர்ச்சிகரமான அழகுடையவளாக இருந்தாள். அப்பாடசாலையில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் அனைத்திலும் நூற்றிற்கு நூறு புள்ளிகளையே பெற்று ஆசிரியர், மாணவர் மத்தியில் ஓர் இடத்தை வகித்தாள். அவளுக்கு அந்த நேரத்திலேயே தான் அமெரிக்க ஜனாதிபதி ஆக வேண்டும் என்ற ஆசை துளிர்விட்டிருந்தது. ஆயினும் அவர் தனது வகுப்பில் எழுதிய கட்டுரை ஒன்றில் தான் ஒரு ஆசிரியை ஆக வேண்டும் என்றும், கடும் கட்டுப்பாடுடைய ஆசிரியை ஆகவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மொனிக்காவின் பள்ளித் தோழியாக இருந்த நான்சி என்பவர் மொனிக்கா பற்றி கூறும் போது, அவள் மிகுந்த புத்தி சாதுர்யம் உள்ளவளாகவும், உணர்ச்சி வசப்படுபவளாகவும் இருந்த போதிலும், வாழ்க்கையில் பெரிய வெற்றிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறக்கூடியவளாகவே நான் கண்டேன்.

மொனிக்கா மாணவியாக இருந்த சமயம், ஒருநாள் வகுப்பு மாணவி ஒருத்தி தனது பிறந்த நாள் விழாவிற்கு தவறுதலாக மொனிக்காவிற்கு அழைப்பிதழ் அனுப்பத் தவறியிருந்தாள். இதனை மொனிக்காவின் தாய் இறுதி நேரத்தில் அறிந்து அந்த மாணவிக்கு தொலைபேசியில் விஷயத்தைச் சொல்லி அழைப்பிதழை அனுப்பச் செய்தாள். தாய் மொனிக்காவிற்கு இந்த விஷயத்தைச் சொல்லவில்லை. ஆயினும் மொனிக்கா இதனை எப்படியோ அறிந்து அந்த பிறந்த நாள் விழாவிற்கு போக மறுத்துவிட்டார். அது பற்றி அவளின் தோழி ஒருத்தி கேட்டதற்கு ''எனது அம்மா, மற்றவர்கள் நீ அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதையே மற்றவர்கள் உனக்கு செய்ய வேண்டுமென்று விரும்பு என்று எனக்கு கற்று தந்திருக்கிறார். அதனால், பிறந்த நாள் விழாவிற்கு ஒருவர் அழைக்கப்படவில்லை என்றால் அது மிகப் பெரும் தவறு. அது ஒரு கூடாத பழக்கம் மட்டுமல்ல, மற்றவர்களைப் புண்படுத்தும் விஷயமுமாகும்'' என்று குறிப்பிட்டார். இதிலிருந்து மொனிக்கா பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் என்பவற்றில் ஐரோப்பியப் பெண்ணாக இருந்தார் என்பது தெளிவாகிறது.

(தொடரும் ...)



# மீண்டும் மாரடோனா!

சலங்கை கட்டிய கால்கள் சும்மா இருக்குமா?' என்பது பழமொழி. கால்பந்து ஆடிய கால்களும் அப்படித்தான்! 'சர்வதேச கால்பந்து விளையாட்டுகளிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன்' என்று ஒரு வருடத்துக்கு முன் அறிவித்த மாரடோனா இப்போது மீண்டும் களம் இறங்குகிறார்.

தான் மீண்டும் ஆட விரும்புவதாகவும், வசதி படைத்த கிளப்புகள் தன்னை அணுகலாம் என்றும் அவர் இருமாதங்களுக்கு முன் அறிவித்தார்.

ஆனால், எந்த கிளப்பும் இதற்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. ஆனால் குவைத் நாட்டின் கால்பந்து கூட்டமைப்பு அவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. தங்கள் அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்கும்படி, இதை ஏற்றுக் கொண்டுள்ள மாரடோனா வரும் கால்பந்து உலகக் கோப்பை போட்டிக்குள் குவைத் அணியை பலம்மிக்கதாக ஆக்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரடோனாவின் வாழ்க்கையில் பல சுவாரசியங்கள் உண்டு. இரண்டு (பெண்) குழந்தைகள் பிறந்த பிறகு தான் சட்ட பூர்வமாக திருமணம் செய்து கொண்டார் மாரடோனா.

சர்வதேச கால்பந்து விளையாட்டுகளி லிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என் றாலும் ' அவர் எப்படியும் அடுத்த கால் பந்து உலகப் போட்டியில் கலந்து கொண்டு விடுவார்,' என்று அவரது விசிறிகளில் கணிசமானோர் நம்பிக் கொண்டிருக் கின்றனர்.

பிரபலமாவதற்கு முன் மாரடோனாவின் உருவத்தைப் பார்த்தவர்கள் யாவரும் இவர் ஆர்ஜென்டீனா நாட்டின் கால்பந்து நம்பிக்கை நட்சத்திரமாக திகழுவார் என்று நம்பியிருக்க மாட்டார்கள். அப் படி ஒரு குட்டையான உருவம். அவரது உயரம் ஐந்தடி ஐந்து அங்குலம் தான். சக வயதுப் பையன்கள், சிறுவயதில் இவரை 'டேய் சின்ன வெங்காயம்' என்றுதான் கூப்பிடுவார்களாம்.

மிகவும் ஏழ்மையான சூழலில் வளர்ந்த மாரடோனாவின் உடன்பிறந்தவர்கள் ஏழு பேர். தொழிற்சாலை ஒன்றில் கூலி வேலை செய்து இவர்களை வளர்த்தார் அவரது அப்பா. என்றாலும், கால் பந்தில் இவர் காட்டிய ஆர்வமும், திறமையும் இவரை புகழ் உச்சிக்குக் கொண்டு சென் றது. அதுவும் 1986 ல் ஜெர்மனியோடு மோதிய உலகக் கோப்பை போட்டியின் போது, இவரது அற்புதமான கோல்தான் ஆர்ஜென்டீனாவுக்குக் கோப்பையை பெற்றுத்தந்தது.

தொடர்ந்த காலகட்டத்தில் பீலேவுக்கு அடுத்த கால்பந்து உலக வி.ஐ.பி. மார டோனாதான் என்பதை பலரும் ஒத்துக் கொண்டனர்.

புகழ் வளர வளர அவர்மீது எழுந்த குற்றச் சாட்டுக்களும் அதிகமாகத் தொடங்கின. அவற்றில் முக்கியமானது இவர் போதை மருந்தை உட்கொண்டார் என்பது தவிர கர்வம் பிடித்தவர், குழுவில் உடன் ஆடும் மற்றவர்களை மதிப்பதில்லை என்றெல் லாம் விமர்சிக்கப்பட்டார். இதற்கிடை யில் க்ளாடியா என்ற தனது ரசிகையை இவர் அடிக்கடி சந்தித்ததில், நெருக்கம் உண்டானது. பதினான்கு வருடங்கள் திருமணமாகாமலேயே தொடர்ந்த இந்த நெருக்கத்தில் டால்மா, ஜெனினா என்று இரண்டு பெண் குழந்தைகள் அவர்களுக் குப் பிறந்தனர். பிறகு ஒரு வழியாக நவ.7.89 அன்று கத்தோலிக்க முறைப்படி திருமணம் நடந்தது. மாலை நடந்த வெகு ஆடம்பரமான வரவேற்பு நிகழ்ச்சியில் பதினைந்து அடி உயரம் கொண்ட கேக்கை வெட்டினர்.

## நல்ல வருகை

இந்திய சஞ்சிகையை ஞாபகப்படுத்தும் வகை யில் ''தாய்மொழி'' அமைந்தது பிளஸ் பொயி ன்ட் ஆகும். மற்றது ரூ.14.00க்கு இப்படியான சஞ்சிகை கிடைப்பதென்பது அரிதாகும்.

எடுத்த எடுப்பிலே தனது அனுபவ முதிர்ச் சியை காட்டியிருக்கிறது. ''தாய்மொழி'' வரவு நல்வரவாகுக. வாழ்த்துக்கள்.

அதேவேளை முன் அட்டைப்படம் சுதேச விழுமியங்களை பிரதிபலித்தால் நல்லது. இனி உலக கிண்ண கிரிக்கட் காலம். எனவே ஒருபக்கத்தில் ஒவ்வொரு நாட்டினதும் நம் பிக்கை நட்சத்திரத்தின் படம் வெளிவந்தால் நன்றாயிருக்கும்.

முதல் பக்கம் சற்று கவர்ச்சிக்குள்ளானதாக முகவுரை போன்று இருந்தால் நல்லது. இன்ரநெட் தகவல் சாதனை இடம் பெற் றாலும் நல்லது.

**வேதசகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி.ஸ்பினோஷா நடேசன் (ரொஸ்மி) 21.05.99

நடேசன்-சந்திரலேகா தம்பதியினரின் செல்வப்புதல்வி ஸ்பினோஷா தனது முதலாவது பிறந்தநாளை 21-05-99 அன்று வெள்ளவத்தை இல. 15 உருத்திரா மாவத்தையிலிருக்கும் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா அம்மா மட்டக்களப்பிலுள்ள அப்பம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார் , அத்தான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார் நெடுந்தீவிலுள்ள அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், அன்ரிமார் மற்றும் உற்றார் உறவினர் இறைவன் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

### நேசகுமார் - நந்தினி நிக்ஷனா (13.05.1999)

நேசகுமார், பிறேமலா தம்பதிகளின் செல்வப்புதல்வி நந்தினி (13.05.1999) இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை அண்ணன் நிசாந்தன் அம்மா அப்பாவுடன் வவுனியாவில் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அன்பு அண்ணா அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, அத்தைமார்கள், மாமன்மார்கள், பெரியப்பா, சித்தப்பாமார், மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் நந்தினியை வேலணை முத்துமாரியம்மனின் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசப்பிள்ளை திருமணம் முடித்து பிள்ளைப்பாக்கியம் இல்லாமல் அங்கும், இங்கும் காணிக்கை செலுத்தி கடவுளை வேண்டி அலைந்து திரிகின்றான். அந்தநேரத்தில் தான் அவனது மனைவி கர்ப்பிணியாகின்றாள். சில மாதங்கள் கடந்து அவனது மனைவி பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றாள். பல தரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில் பிள்ளையை சிசேறியன் அறுவைச்சிகிச்சை மூலம் ஒரு அழகான பெண்குழந்தையை பெற்றெடுக்கின்றாள் சகுந்தலை.

கணேசப்பிள்ளை சாதாரண ஒரு கூலி வேலை செய்பவர். கஸ்டத்துக்கு மத்தியில் எந்தவொரு குறையுமில்லாமல் சீவியம் நடத்துபவர். சில வாரங்கள் மாதங்களாக பெருக்கப்பட்டு பல வருடங்கள் கழிகின்றன. தொடர்ச்சியாக அவனது மனைவி இரண்டு பெண்குழந்தைகளை பெற்றெடுக்கின்றாள். இந்நேரத்தில் தான் தனது முதலாவது பெண்குழந்தை கண்ணகி வாழ்க்கையின் படிகளை சந்திக்கும், சிந்தனை ஆற்றலைப் பெறுகின்றாள். பிள்ளைகளுக்கான பால்மாவிற்கோ அவனது ஊதியம் போதாமல் இருந்தது. குடும்பச் செலவும் அதிகரித்தது. வயதும் சென்றுகொண்டே இருந்தது. இந்நேரத்தில் கணேசப்பிள்ளையால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. குடும்பத்தின் ஏழ்மை அதிகரித்துக்கொண்டு சென்றது. யாது செய்வது என யோசித்த அவருக்கு அந்த சிந்தனை எழுந்தது. கண்ணகியை வெளிநாடு அனுப்ப முடிவுசெய்கின்றார். மனைவியிடம் விடயத்தை சொல்கிறார். மனைவியோ இருமனதோடு மௌனம் சாதிக்கின்றாள். மௌனம் சம்மதத்திற்கு ஒரு அறிகுறி என்பதை அவர் அறிந்திருந்தார். கண்ணகிக்கு படிப்பதற்குத்தான் ஆசை. இருந்தும் குடும்பப் பொறுப்பை உணரும் வயது. அப்பாவின் துன்பநிலை கண்டு கண்ணகி வெளிநாடு செல்ல முன்வருகின்றாள்.

உறவுகள், தெரிந்தவர்களிடம்கடன்பட்டு, ஏஜென்சியிடம்கட்டுப்பணம் செலுத்தி, கொழும்பு சென்று வழியனுப்புவதற்குக்கூட வழியின்றி பிள்ளையை கண்ணீர் அருவியாய் பாய ஏஜென்சிகாரரிடம் ஒப்படைத்து வழியனுப்பிவைக்கிறார்கள்.

கண்ணகி மனதைத் தேற்றிக் கொண்டு முஸ்லீம் வேடம் பூண்டு பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில் மத்திய கிழக்கு விமானத்தளத்தையடைகின்றாள். தன்னுடைய கிராமப்புறப் பழக்கம் மொழி தெரியாத நிலை, செய்வதறியாது ஊமைங்கையான் போல் அந்த அறையில் தஞ்சம் கொண்டிருந்தாள். அந்த வேளை கம்பீரமான தோற்றமுடைய ஒரு எஜமான் தன்னுடைய பணியாளுடன் வந்து அழைத்துச் சென்றான்.

மாளிகை போல் தோற்றமுடைய அந்த வீட்டின் சில பகுதிகளையும், சில பிள்ளைகளையும் காட்டி அவளது வேலையை அரபியில் சுட்டிக்காட்ட ஒன்றும் தெரியாதவளாய் நிலைகுலைந்து நிற்க பணியாளன் விளங்கும்படிகூறிவிட்டு சென்றுவிட்டான்.

கண்ணகிக்கு அது ஒரு புது உலகமாக தோற்றம் பெற்றுக் காணப்பட்டது. அவளுடைய வேலைகளும், தலைக்கு மேல் இருந்தது. காலங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டோடின. அந்நாட்டு பழக்கவழக்கம், நிலைமைகள் யாவும் புரிந்து கொண்டன. அவளுடைய எஜமான் நல்லவன் போல் தோற்றம் பெற்றுக் காணப்பட்டான். ஆனால் அவள் ஒரு அடிமைச் சங்கிலியாக அடைபட்டுக் கிடந்தாள். அவளுக்கான மாதச்சம்பளம கிடைப்பதில்லை. அவளின் வரவுக்காகப் பெற்றோர் காத்துக் கொண்டிருந்தனர். வரவு இல்லை. ஆனால் செலவு அதிகரித்தது.

கண்ணகியின் பிரிவினால் குடும்பமே துடித்துக் கொண்டிருந்தது. கண்ணகிக்கு வெளிநாடு நரக வாழ்க்கையாக அமைந்திருந்தது. வருடத்தில் ஒன்று, இரண்டு தடவை பெற்றோரை சந்தோசப் படுத்த எஜமான் பணத்தை அனுப்பிக் கொண்டிருந் தான். கணேசப்பிள்ளை மகளின் யோசனையில் நோயாளியானார்.

கண்ணகி ஐந்து வருடங்களை கழித்திருந்தாள்.

ஆகா! என்ன நிலைமை கண்ணகிக்கு வெளிநாட்டில் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு கூட அந்தக் காலம் அனுமதியளித்துக் கொண்டிருந்தன.

இங்கே இவர்கள் மகள் இறந்து விட்டதோ என எண்ணி இறந்து கொண்டிருக்கின்றார்கள். வெளி நாட்டில் இருந்து ஒருநாள் அவளது எஜமான் தனது ''பிஸ்னஸ்'' வேலையை முடித்து விட்டு வீடுவந் திருந்தான். அன்று கண்ணகி தன்னை நாட்டுக்கு அனுப்பிவைக்குமாறும், தனது அப்பா, அம்மாவை பார்க்க வேண்டும் எனவும் கெஞ்சினாள். மன்றாடி னாள். ஆனால் அது அவனது காதுகளுக்கு எட்ட மறுத்தது.

இரவுநேரம் அறிவு இழந்து அடைக்கலம் இன்றி அநாதரவாக அந்த அறையில் அடைபட்டு இருந் தாள். மதுபோதையில் வந்த எஜமான் தடுமாற அவள் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். அவன் அவளை தனது நாட்டுக்கு அப்பா, அம் மாவை பார்க்க அனுப்புவதாகவும், அதிகமாக பணம் தருவதாகவும் கூற, மகிழ்ச்சி என்னும் கட லில் நீந்தத் தொடங்கினாள். ஆனால் அவன் வந்த நிலைமையை உணராதவளாய் அவனுடைய மீதிக் கதையை கேட்காமல் ஆனந்தக்கண்ணீர் விட்ட வளாய் இருந்தாள். ஆனால் அவன் தள்ளாடிய வனாய் அவளை நெருங்கினான். ஆனால் அவள் விலகினாள். கெஞ்சினாள். மன்றாடினாள். அவன் விட்டபாடில்லை. இறைவனால் கூட காப்பாற்ற முடியாத அந்த வேளையில் அவளது உயிர் உடலை விட்டு வெளியேறியது.

மொழி - 03

திகதி 12.5.99

# தாய்மொழி

THAIMOLI

ஆசிரியர்

உமா பாஸ்கரன்

இணை ஆசிரியர்

கா. தேவேந்திரராஜா

*Publishers*

Hirukesan Publication
24/2, Rajasinghe Road,
Wellawatte,
Colombo -6.

**கடிதங்கள், ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகட்கும்**

தாய்மொழி
த.பெ.இல 1636
கொழும்பு.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**DENSHI**

**VIDEO & PHOTO**



***Video Filming, Still Photography & Editing, Audio Dubbing, CD Recording & Computer Graphy for T.V Commercial***

***Office :***
***385 - 1/5, Galle Road,***
***Wellawatte, Colombo - 06.***
***Tel :586239***

***Branch :***
***69, Bonjean Road,***
***Kotahena, Colombo - 13.***
***Tel : 075-353597***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SRI KALYANY JEWELLS

5, SEA STREET, COLOMBO 11. PHONE : 323657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org